பக்கங்கள்: 28
விலை: 30

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 15 கார்த்திகை 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 11 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## மகிந்தவின் விசுவாசி ரணிலிடம் தாவினார்

கொழும்பு, டிசெ. 11
மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து வந்த மத்திய 22

# அரசியல் குழப்பத்துக்கு மைத்திரியே காரணம்

## நழுவுகிறார் மகிந்த



கொழும்பு, டிசெம்பர் 11
நாட்டில் தற்போது எழுந்துள்ள அரசியல் குழப்பத்துக்கு நான் காரணமல்ல. இந்தக் குழப்பங்கள் அனைத்துக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே காரணம். தலைமை அமைச்சர் பதவிக்கு என்னை நியமிக்குமாறு மைத்திரியை நான் கோரவில்லை. அவரே என்னை அழைத்து, நான்தான் இந்தப் பதவிக்குப் பொருத்தம் என்று கூறினார். இவ்வாறு முன்னாள் தலைமை அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
வெளிநாட்டுச் செய்திச் சேவையின் கொழும்பு ஊடகவியலாளருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 25

## முச்சக்கரவண்டி, ரக்ஸிக்கான மீற்றர் கட்டணம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11
முச்சக்கர வண்டிகள் மற்றும் ரக்ஸிக்கான கட்டண மீற்றர் பொருத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன டிப்படையில், 25

## தூக்குத் தண்டனையை தூசு தட்டுகிறார் மைத்திரி



கொழும்பு, டிசெ. 11
போதைப்பொருள் கடத்தல் காரணமாக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையிலும் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட கைதிகளுக்கு தூக்குத் 25

## மைத்திரியின் கால அவகாசம் இன்றுடன் நிறைவுக்கு வருகிறது

கொழும்பு, டிசெ. 11
நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு ஒரு வார காலத்துக்குள் தீர்வு காணப்படும் என்று நாட்டு மக்களுக்கு அரசதலைவர் கடந்த செவ்வாய்க் கிழமை உறுதியளித்திருந்தார். 25

## உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரலாற்றை உருவாக்கும்

### பிரிட்டன் தூதுவர் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 11
நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் அறிவித்தல் மீதான நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்றை மாற்றக் கூடிய தீர்ப்பாக அமையும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் 22

see more news in newuthayan.com

## மைத்திரிக்கு எதிராக மனநலக்கோளாறு வழக்கைத் தொடுக்குமாறு மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெ. 11
மன நலக் கோளாறு கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துக்கு அமைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றில் வழக்கைத் தாக்கல் செய்யுமாறு கோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும், பொலிஸ் மா 22

## தீர்ப்பை தாமதமின்றி உடனே அறிவியுங்கள்

### சட்டமா அதிபர் ஊடாக மைத்திரி நீதியரசர்களிடம் கோரிக்கை என்கிறார் விமல்

கொழும்பு, டிசெ. 11
நாடாளுமன்றத்தைக் கலைத்து அரச தலைவர் மைத்திரிபால வெளியிட்ட அரசிதழ் அறிவிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள் முற்றுப் பெற்றுள்ளன. அதன் தீர்ப்பை தாமதமின்றி வெளியிடுமாறு 25

## பொலிஸ் நிலையம் அமைக்கப்படவிருந்த காணியில் இயங்கிய 'ஜிம்' மீது தாக்குதல்

### காலையில் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்ட நிலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 11
சுன்னாகம் பொலிஸாருக்கு மக்கள் குடியிருப்புக் குள் காணி வழங்க வேண்டாம் எனத் தெரிவித்து உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், பொலிஸாருக்கு வழங்கவிருந்ததாகக் 22

### விக்கிக்கு எதிரான

## நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கட்டளைக்காக ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 11
முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, நீதியரசர் ஒருவர் வராமையால் ஜனவரி 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண 25

## நாடாளுமன்றத்தை கூட்டியமை தவறு!

கருவுக்கு எதிராக தாக்கலானது வழக்கு 22

## சிறுபான்மைக் கட்சிகள் ஒருமித்து பயணிப்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பம்

ஹக்கீம் தெரிவிப்பு

(விரிவு - பக். 24)

## மைத்திரி, மகிந்தவை வேட்பாளர்களாக அறிவித்து ஒரே நாளில் தேர்தல்களை நடத்திக் காட்டுங்கள்!

சவால் விடுகின்றது ஐக்கிய தேசிய முன்னணி

(விரிவு - பக். 10)

## இரணைமடுவிலிருந்து அகற்றப்பட்ட நினைவுக் கல்லை மீண்டும் நடவும்

### அரச தலைவர் ஆளுநருக்குப் பணிப்பு

கொழும்பு, டிசெ. 11
இரணைமடுக் குளத்தில் அதன் வரலாற்றைக் குறிப்பிடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களான டி.எஸ்.சேனநாயக்க, டட்லி சேனநாயக்கவின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவுக் கல்லை மீளவும் அந்தப் பகுதியில் 24 மணித்தியாலயங்களுக்குள் நிறுவுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண ஆளுநர் குரேக்கு உத்தரவிட்டுள்ளார்.
இந்தத் தகவலை அரச தலைவர் ஊடகப் பிரிவு நேற்று மாலைவெளியிட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மறுசீரமைக்கப்பட்ட இரணைமடுக் குளத்தை மக்களிடம் கைய 22

## யானை - புலி ஒப்பந்தம் நாளை அம்பலமாகும்

### மகிந்த அணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11
ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக நியமிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்ட 22

# மக்களின் ஆணையை உதறி மைத்திரி செயற்பட முடியாது

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11

**மக்கள் வழங்கிய ஆணையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன காலால் எட்டி உதைக்க முடியாது. மகிந்த ராஜபக்சவின் ஆட்சி தமக்கு வேண்டுமென்றால் மக்கள் அடுத்த தேர்தலில் அவருக்கு ஆதரவளிப்பர்.**

இவ்வாறுதெரிவித்துள்ளார்ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும்தொகுதிகளின்அமைப்பாளர்களுக்குச் சமகால அரசியல் நெருக்கடிகள் தொடர்பாகவிளக்கமளிப்பதற்குநேற்று ஐக்கிய தேசியக் கட்சி அலரி மாளிகையில்கூட்டம்ஒன்றைஏற்பாடுசெய்திருந்தது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி அரசமைப்புக்கு முரணாக ஆரம்பிக்கப்பட்ட சதித் திட்டங்கள் தற்போது நாட்டு மக்களின் பிரச்சினையாக மாறியுள்ளது. மக்களின் உரிமைகள் திருடப் பட்டுள்ளன என்றே நாம் இந்தப் பிரச்சினையை நோக்குகின்றோம். நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆதரவு உள்ள தரப்பே தலைமை அமைச்சரையும்,அமைச்சர்களையும்தேர்ந்தெடுக்க முடியும். நாடாளுமன்றின் பெரும்பான்மையைத் தீர்மானிப்பது மக்களே. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகள் முடிவிலும் யாரிடம்ஆட்சிஅதிகாரம்இருக்கவேண்டும்என்பதைமக்களேதீர்மானிக்கின்றனர்.

1947ஆம் ஆண்டில் இருந்தே இந்த முறையைத்தான் நாம் பின்பற்றுகின்றோம். நிறைவேற்று அதிகாரம் வந்த பின்னரும் நாடாளுமன்றில் பெரும்பான்மை பெற்றுக்கொள்ளும் தரப்பினரே தலைமை அமைச்சராகவும், அமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டனர். அதன்படியே சந்திரிக்கா குமாரதுங்கஅரசதலைவராகஇருந்ததருணத்தில் நான் தலைமை அமைச்சராகச் செயற்படும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தற்போது நாடாளுமன்றத்தைப் புறக்கணித்துச் செயற்படப் பார்க்கின்றனர். மைத்திரியும், மகிந்தவும் இணைந்து நாடாளுமன்றத்தைக்காலால்உதைத்துவிட்டுஆட்சிசெய்யப்பார்த்தனர். அதற்கு நாட்டு மக்கள் அனைவரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். கடந்த அரச தலைவர்தேர்தலின்போதும்,நாடாளுமன்றத் தேர்தலின்போதும் மகிந்த ராஜபக்ச வேண்டாம் என்று மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதை நிராகரிக்க முடியாது.

அரசியலில் இதுவரை கலந்துகொள்ளாத பெரும் இளைஞர் தொகை தற்போது எம்முடன் கைகோர்த்துள்ளது. தற்போது நடந்துள்ள அரசியல் மாற்றம் தவறு என்று அனைத்துக் கட்சிகளும் கூறியுள்ளன. நாங்கள் கொடுத்த சில வாக்குறுதிகளைநிறைவேற்றமுடியாது போனதைஏற்றுக்கொள்கின்றோம். சில விடயங்கள் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளன. இந்த அரசு தேவையா? இல்லையா? என்பதை மக்கள் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

சட்டவிரோதமானஇந்தநடவடிக்கைக்கு எதிராக மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் நாட்டின் பல்வேறு அமைப்புக்களை ஒன்றிணைத்துக்கொண்டு இந்தப் பயணத்தை நாங்கள் தொடர்கின்றோம். நீதிமன்றமும் இடைக்காலத் தடை விதித்துள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் வலுப்படுத்தப்பட்டமையால்அவைதற்போதுசுயாதீனமாக இயங்குகின்றன. இது மக்கள் போராட்டம். மக்கள் சொல்வதை நாம் செய்ய வேண்டும். அதன்பின்னர் எமது சரி பிழைகளைத் திருத்திக் கொள்வோம் - என்றார். (ந-10)

# நீதிமன்றத்தீர்ப்பால் பிரச்சினைகள் தீரா!

## கூறுகின்றார் பீரிஸ்

நீதிமன்றத்தின் தீர்ப்புகளால் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்குஎந்தவிதத்திலும்தீர்வுகளைப்பெற்றுக் கொடுக்க முடியாது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மக்களே தமது வாக்குரிமை ஊடாக தீர்வை வழங்க வேண்டும்.

இவ்வாறுதெரிவித்துள்ளார்பொதுமக்கள்முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ்.

பொதுமக்கள் முன்னணியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்றுநடத்தப்பட்டசெய்தியாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத்தெரிவித்தபோதேஅவர் இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தராஜபக்சமற்றும்அவர்தலைமையிலான இடைக்கால அரசின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு மாத்திரமே மேன்முறையீட்டு நீதிமன்றும் தற்காலிக தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து தலைமை அமைச்சர், அமைச்சரவை கிடையாது என்ற மாறுபட்ட கருத்துக்கள்மக்கள்மத்தியில்உள்ளன. அவை முற்றிலும் தவறான கருத்துக்களாகும்.

தற்போதையஅரசியல்நெருக்கடிகள்காரணமாகஅடுத்த ஆண்டுஅரசநிர்வாகத்தின் முன்னெடுப்புகளுக்குப்பாதிப்புகள் ஏற்படும். ஜனவரி மாதம் பொதுத் தேர்தலை நடத்துவதே அதற்குத் தீர்வு. அல்லாவிட்டால் நாட்டு நலனைக் கருத்தில்கொண்டுஇடைக்காலவரவு-செலவுத்திட்டத்தை முதல்காலாண்டில்நடைமுறைப்படுத்தவேண்டும்-என்றார். (ந)

# வாயால்உண்மைகளைக்கூறி காட்டிக்கொடுத்தார்மைத்திரி

## விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.11

மகிந்த அரசின் பெரும்பான்மையை நிரூபிக்க அமைச்சர்களுக்கு கோடிக்கணக்கில்சிலை பேசப்பட்டது. விலைஅதிகரித்தமையால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது போனது என்று கூறியது மூலம் தான் குற்றவாளி என்பதை அரச தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார். மகிந்தவையும் காட்டிக் கொடுத்துள்ளார்.

இவ்வாறுமக்கள்விடுதலைமுன்னணிநாடாளுமன்றஉறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆம்திருத்தத்துக்குஅமைய அரசதலைவரால்நான்கரை ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. கடந்தவாரம்அரசதலைவர்கூறியதுஎன்ன?. ஒருவாரத்தில் அரசியல்நெருக்கடிக்குத்தீர்வுகாண்பேன்என்றார். ஆனால் இன்றுடன் (நேற்று) அந்த வாரம் முடிகின்றது. தற்போது நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை காத்திருக்க வேண்டும் என்று கூறுகின்றார். இவர் நிமிடத்துக்கு நிமிடம் மாறி மாறி ஏன் பேசுகின்றார்?. ஒரு கருத்தில் அவர் உறுதியாக இருப்பதில்லை என்பதைச் சகல சந்தரப்பங்களிலும் அவர் நிரூபித்துள்ளார்.

இப்போதுசபாநாயகர்மீதுகுற்றஞ்சுமத்துகின்றனர். ஆனால் சபாநாயகர்மீதுஎந்தத்தவறும்இல்லை. நவம்பர்14ஆம்திகதி நாடாளுமன்றம்கூட்டப்படவேண்டும்என்பதுஅரசதலைவரின்தீர்மானமே. சபாநாயகரின்தீர்மானம்அல்ல. பெய்யான காரணிகளைக் கூறி இவர்கள் அனைவரும் நாட்டை நாசமாக்கிவருகின்றனர். அன்றுநீதிமன்றத்தைநாடுங்கள்எனச் சவால் விட்டவர்கள் இன்று நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர் - என்றார். (ந)

# நீதிமன்றத்தின்மீதும் பழிபோடுகிறார்வாசு

## ஐ.தே.க. மீதும் காட்டம்

கொழும்பு, டிசெ.11

அமைச்சரவை இல்லாது அரசு நாட்டைக் கொண்டு நகர்த்த முடியாது. தற்போது அரசபணியாளர்களுக்கானகொடுப்பனவுகளை வழங்குவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணம். நீதிமன்றமும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறுதெரிவித்துள்ளார்ஜனநாயகஇடதுசாரிமுன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார.

நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கியதேசியக்கட்சிஎல்லைமீறிச்செயற்படுமாகஇருந்தால் அரசுஎன்றவகையில்சட்டத்தைநிலைநாட்டவேண்டிவரும். நீதிமன்றஇடைக்காலத்தடைஉத்தரவுபாதிப்பானதாகஉள்ளபோதும், அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இந்த நிலைக்கு நீதிமன்றமும் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (ந)

# கணக்குத் தெரியாததால் கதைக்கின்றார்மைத்திரி

## கிண்டலடிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.13

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைஉறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றவரையேதலைமைஅமைச்சராக நியமிக்க முடியும். அரச தலைவர் தான்தோன்றித்தனமாகத்தலைமைஅமைச்சரை நியமிக்க முடியாது. 225நாடாளுமன்றஉறுப்பினர்களும் இணைந்து கூறினாலும், தனக்கு விருப்பமானவரையே தலைமை அமைச்சராக நியமிப்பேன் என்று அரச தலைவர் கூறுவதுஅரசமைப்புக்குமுரணானது. முட்டாள்தனமானது.

இவ்வாறுகடுமையாகச்சாடியுள்ளது மக்கள் விடுதலை முன்னணி.

கொழும்பு, பத்திரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில்நேற்றுத் திங்கட்கிழமைநடத்தியஊடகவியலாளர்சந்திப்பில்கருத்துத்தெரிவித்தபோது அந்தக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்று அறிவிக்குமாயின், நாடாளுமன்றில் பெரும்பான்மை உள்ள தரப்பு அரசமைக்க அரச தலைவர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும். பெரும்பான்மைஉறுப்பினர்களின் ஆதரவு உள்ளவரையே தலைமைஅமைச்சராகநியமிக்க முடியும்.

225 பேரும் கூறினாலும் தான்விரும்பும்ஒருவருக்கே தலைமை அமைச்சர் பதவி கொடுப்பேன் என்று அரச தலைவர் கூறுவது முட்டாள்தனமானது. சபாநாயகருடன்சேர்த்துத்தான்225பேர் நாடாளுமன்றஉறுப்பினர்களாகஉள்ளனர். 225பேரும் இணைந்து ஒருவருக்கு தலைமை அமைச்சர் பதவியைக் கொடுங்கள் என்று கூறினால் கட்டாயம் கொடுத்தே ஆக வேண்டும். கணக்குத் தெரியாததால் இப்படிக் கூறுகின்றாரோ தெரியவில்லை. நாடாளுமன்றில் இருந்துதான் தலைமைஅமைச்சரைநியமிக்க வேண்டும். அரச தலைவரின் கருத்து அரசமைப்புக்கு முரணானது. முட்டாள்தனமானது - என்றார். (ந-10)

# மைத்திரி, மகிந்தவை விசாரிக்க வேண்டும்

## வலியுறுத்துகின்றார் மனுஷ

நாடாளுமன்றத்தில்உறுப்பினர்களுக்கு 500மில்லியன்ரூபாஇலஞ்சம்வழங்க முயற்சித்தஅரசதலைவர்மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோரைஇலஞ்சஊழல்ஒழிப்புஆணைக் குழுவில் முற்படுத்த வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுநடைபெற்றஐக்கியதேசியக்கட்சி தொகுதிஅமைப்பாளர்கூட்டத்தில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறு பருவத்தில் தனது தந்தை மீதுள்ள கோபத்தில் வயல் வெளிக்குத் தீமூட்டியதைப்போன்றுதற்போதுரணில்விக்கிரமசிங்கமீதுள்ளகோபத்தில்அவர்எடுத்த தீர்மானங்களால் நாடு மிக மோசமான நிலையை நோக்கிச் சென்றுள்ளது.

மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் கனவுகளைக் கலைத்ததாலேயே எமக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தீவிரம் காட்டுகின்றனர். அவர்களின் இந்தச் செயற்பாடுகளுக்கு நாம் அஞ்சவோ அல்லதுபின்வாங்கப்போவதில்லை - என்றார். (ந)

# கஜா புயலில் பாதித்த மக்கள் இழப்பீடு கோரி ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி, டிசெ. 11

தென்மராட்சி பிரதேசத்தில் கஜா புயல் மற்றும் கடும் மழையினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று பிரதேசசெயலகத்தில்தமக்கு இழப்பீடுவழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கஜா புயல் மற்றும் கடும்மழையினால் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு வகையான பாதிப்புக்கு உள்ளான நிலையில், பாதிப்புஏற்பட்டு 25 நாள்களாகியும் இதுவரை இழப்பீடு வழங்கவில்லையெனவும் தெரிவித்தனர்.

கஜா புயலின்போது கச்சாய்ப் பகுதியில் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த 31 படகுகள்ஒன்றுடன்ஒன்றுமோதிசேதமடைந்ததால் 25 நாட்களுக்கு மேலாக தொழிலுக்குச் செல்ல முடியாமல் உள்ளனர் எனவும், இதனால் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்து தவிப்பதாகவும் அரசினால் எந்தவொரு இழப்பீடு வழங்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

கஜா புயலினால் பிரதேசத்தில் 2 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. அத்துடன் கெற்பேலிப் பகுதியில் ஒரு குடியிருப்பு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மேலும் ஏழு குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்து குடியிருப்பாளர்கள் வேறுஇடங்களில்தஞ்சமடைந்துவெள்ளம் வழிந்தோடியபின்னர் குடியிருப்புகளுக்குத்திரும்பியபோதிலும், தமக்குஇழப்பீடு வழங்கவில்லையென ஒரு சாரார் தெரிவித்தனர்.

கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் கஜா புயல் மற்றும் கடும் மழையினால் 72 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 28 குடும்பங்கள் அங்குள்ள சனசமூக நிலையக் கட்டடத்தில் பிரதேச செயலகத்தினால் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து இன்னமும் குடியிருப்பினைப் பயன்படுத்தமுடியாமல் உள்ளதாகவும், பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவு வழங்கப்பட்டதெனவும் நலன்புரி நிலையத்தை யாழ். மாவட்டச் செயலர், இடர் முகாமைத்துவ திணைக்களப் பணிப்பாளர் நாயகம், இடர் முகாமைத்துவ யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் ஆகியோர் நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இவற்றினை விட குடியிருப்புகளுக்குள் வெள்ளம்புகுந்ததால் 300க்குமேற்பட்ட குடும்பங்கள் இடமபெயர்ந்திருந்தனர். இதனைப்பிரதேசசெயலகஅலுவலர்கள் அறிவர்.

இந்த நிலையில் இதுவரை தமக்கு எந்தவொரு இழப்பீடும் வழங்கவில்லையெனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்காத பட்சத்தில் பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக பிரதேசசெயலருடன்தொடர்புகொண்டுகேட்டபோது பிரதேச மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை யாழ். மாவட்டச்செயலர், இடர்முகாமைத்துவதிணைக்களப்பணிப்பாளர்நாயகம், யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் உட்படபலர்நேரில்வந்துபார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

அரசினால் நிதி வழங்கப்படும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவி வழங்கபாதிக்கப்பட்டமக்களின்பட்டியலுடன்தயாராகவுள்ளோம். உரியதிணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடு பெற்றுக்கொடுப்பதற்கானநடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம் - எனவும் தெரிவித்தார். (9)

## வவுனியாவில் காணாமற்போன உறவுகள் போராட்டம்



வவுனியா, டிசெ. 11

பன்னாட்டுமனித உரிமைதினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று காணாமற்போன உறவுகளினால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டோர் பிற்பகல் 1 மணியளவில் குடியிருப்புபிள்ளையார்ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டதுடன்ஊர்வலமாகக்குடியிருப்புபாடசாலை வீதி வழியாக சென்று மருத்துவமனை சுற்றுவட்டத்தை அடைந்து சுழற்சிமுறை உணவுதவிர்ப்புபோராட்டம் நடைபெறும்இடத்தினைவந்தடைந்தனர்.

இன்றுடன் 658 நாட்களாக தொடர்ந்தும் போராடிவரும் நிலையில், பன்னாட்டுமனித உரிமைகள் தினமான நேற்றுவடகிழக்கில்தமிழர்களிற்கான தீர்வு பற்றிய வாக்கெடுப்பை நடாத்த ஐக்கிய நாடுகள், உதவியை நாடிநிற்பதாகத் தெரிவித்தவர்கள் "ஜனநாயகத்தை ஊக்குவிப்பதற்கான வாக்கெடுப்பு" எனப் பொறிக்கப்பட்ட பதாகையுடன்போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர். போராட்டத்தில் பெருமளவான தாய்மார்கள் கலந்து கொண்டனர். (110)

## யாழ்ப்பாணத்தில் நடைபவனி



யாழ்ப்பாணம், டிசெ. 11

பன்னாட்டு மனித உரிமைகள்தினமானநேற்று யாழ்ப்பாணத்தில் நடைபவனி ஒன்றுநடாத்தப்பட்டது.

யாழ்ப்பாணமனிதஉரிமைகள் முதலுதவிச் சங்கத்தினர், இலங்கை சமாதானப் பேரவையுடன் இணைந்து பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை நேற்றுக் கடைப்பிடித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் இமானுவல் ஆனோல்ட், யாழ். பிராந்திய மனித உரிமைக்குழு ஆணையாளர் ரி. கனகராஜ், பேராசிரியர்ம. பெ. மூக்கையா, பொலிஸ்அத்தியட்சகர்பி. யு. உடுகம, இலங்கை ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத் தலைவி சி. சூரியகுமாரி ஆகியோர் கலந்துகொண்டனர். (8)



## மன்னாரில் கடைப்பிடிக்கப்பட்ட பன்னாட்டு மனித உரிமைகள் தினம்

மன்னார் மாவட்ட பெண்களையும், சிறுவர்களையும் மேம்படுத்தும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு மனித உரிமைகள் தினம் நேற்று மன்னார் நகர மண்டபத்தில் நினைவு கூறப்பட்டது.

நிகழ்வில் நேரு அடிகளார், தமிழ்த் தேசிய முன்னணியின் செயலர் செல்வராசா கஜேந்திரன், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி. எஸ். சிவகரன், சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் ஆகியோர் கலந்து கொண்டதுடன், காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (56)

## மனித உரிமைகள் நாளில் கவனவீர்ப்பு போராட்டம்




பன்னாட்டு மனித உரிமைகள் நாளான நேற்றுவடக்கில்உள்ளஐந்துமாவட்டத்தினைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள்தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு வரும் வேளையில், பன்னாட்டு மனித உரிமைகள் நாளான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்றுதிரண்டுகவனவீர்ப்புபோராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவுநகரில்உள்ளஇராயப்பர் தேவாயலத்தின் முன்றலில் இருந்து ஆரம்பமான இந்த பேரணி முல்லைத்தீவுமாவட்டச்செயலகத்துக்குச்சென்றடைந்தது.

"வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், சர்வதேசமே பதில்கூறு, சிறைகளில் வாடும் எமது உறவுகளுக்கு நீதிவேண்டும், சர்வதேசமே திரும்பிப்பார், ஆட்சிக்கு அடிபடும் அரசு எமக்கு என்ன பதில்கூறும்" போன்ற வாசகங்கள் எழுதிய பாதாகைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பிய காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஐக்கிய நாடுகள்சபையின்அலுவலகத்திற்கான வேண்டுகோள்ஒன்றைவிடுத்தனர். இந்த வேண்டு கோளை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி ம. ஈஸ்வரி, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டசங்கத்தலைவிகனகறஞ்சினியிடம்கையளித்தார். (ரி3)

## தொண்டர்ஆசிரியர்கள்போராட்டம்


யாழ்ப்பாணம், டிசெ. 11

பலவருடங்களாகியும்தமக்குநியமனம் வழங்கப்படவில்லை என தெரிவித்து வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள்மாகாணஆளுநர்அலுவலகத்துக்கு முன்னாள் நேற்று மதியம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்குமாகாண தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய தங்களுக்கு இன்றுவரை நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நாம் 288 பேர் இன்று தொடக்கம் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளோம் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர் (8)




பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், மற்றும் மகாவலி ஊடானதிட்டமிட்ட சிங்கள குடியேற்றம், போன்றவற்றுக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. இதில் வடக்கிலிருந்து சென்ற தமிழர் மரபுரிமைப் பேரவையினரும் கலந்து கொண்டனர்.



# யாருடன் கூட்டணி அமைத்தாலும் தலைமைத்துவம் மைத்திரிதான்

## முன்னணி விரும்பாவிடின் விலகலாமென்று சு.கவின் பொதுச் செயலர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 11

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டணி அமைத்தால், அதன் தலைமைத்துவம் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவையே சாரும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணி அதனை விரும்பாவிடின் உத்தேச கூட்டணியிலிருந்து விலகிக் கொள்ளலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணி இணைந்து அமைக்க உத்தேசித்துள்ள கூட்டணி தொடர்பில் இரு தரப்பினராலும் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் நிலைபாடு என்ன என்று வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மகிந்தராஜபக்சவுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்திருந்தார். அதன் அடிப்படையிலேயே அவரைத் தலைமை அமைச்சராக நியமித்தார். நாட்டில் சகல அதிகாரங்களும் கொண்டவராக அரசதலைவர் காணப்படுகின்றார். எனவே இந்தப் புதிய கூட்டணியின் தலைமைத்துவத்தை அவரால் மாத்திரமே வகிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.




(4)

## அரசியல் பந்து நீதிமன்றிடம் உள்ளது அதனால் பொறுமையாக உள்ளேன்!

கொழும்பு, டிசெ. 11

தற்போதைய அரசியல் உறுதியற்ற நிலைமையை இலகுவாகத் தீர்க்க முடியும். ஆனால் இந்த விவகாரம் நீதிமன்றங்களிடம் இருப்பதால் பொறுமையாகச்செயற்படவேண்டியுள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.



கண்டி, தலதா மாளிகையில் நேற்று முன்தினம் வழிபாடு செய்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவால், மக்களுக்கு எனது பணியை நிறைவேற்ற முடியாதுள்ளது. உலகில் எங்குமே, தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவைக்கு எதிராக நீதிமன்றம் இப்படிச் செயற்பட்டதில்லை." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(4)

## அரசதலைவர் ஊடகப் பிரிவினரின் அழுத்தத்தால் காணொலி நீக்கம்

கொழும்பு, டிசெ. 11

அரசதலைவர் ஊடகப் பிரிவின் கடும் அழுத்தம் காரணமாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் அடங்கிய காணொலியைக் கொழும்பு ஊடகமொன்று அகற்றியுள்ளது என்று கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் விலை அதிகமானதன் காரணமாகவே மகிந்த ராஜபக்சவால் பெரும்பான்மையைக் காண்பிக்க முடியவில்லை என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்ட ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவதற்கு 500 மில்லியன் ரூபா வரை கோரினர் என்று சிறிசேன தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலைமைகள் குறித்து எனக்கு நன்கு தெரியும். மகிந்த ராஜபக்ச பெரும்பான்மையை நிருபிக்க முடியாமல் போனதற்கு இதுவே காரணம் என்று சிறிசேன தெரிவித்திருந்தார்.

சிறிசேனவின் அந்தக் கருத்துக்குச் சமூக ஊடகங்களில் கடும் எதிர்ப்புக்கள் எழுந்துள்ளன.

சிறிசேன இது குறித்துக் கருத்துத் தெரிவிப்பது இதுவே முதல்தடவை என்று பலர் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலஞ்சம் கோரிய விவரம் குறித்து உரிய அதிகாரிகளிடம் முறையிடாதமைக்காகச் சிறிசேனவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறையிடவேண்டும் என்றும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

எனினும் குறிப்பிட்ட வீடியோ ஊடக நிறுவனத்தின் முகப்புத்தகத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. அதற்குப் பதில் சிறிய புதிய வீடியோவொன்று காணப்படுகின்றது. அதில் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக் காணப்படவில்லை என்று கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

அரசதலைவரின் கருத்துக் குறித்து எழுந்த கடுமையான எதிர்மறையான விமர்சனங்களை மூடிமறைப்பதற்காகவே குறிப்பிட்ட காணொலி அகற்றப்பட்டுள்ளது என்றும் டெலிகிராவ் தெரிவித்துள்ளது.

முன்னாள் மகாராஜா நிறுவன பணியாளர் தர்மசிறி பண்டார ஏக்கநாயக்கவின் தலைமையிலான அரசதலைவரின் ஊடகப் பிரிவின் கடும் அழுத்தத்தைத் தொடர்ந்தே குறிப்பிட்ட காணொலியை அகற்ற ஊடகத்தின் ஆசிரிய பீடம் தீர்மானித்தது என்று கொழும்பு டெலிகிராவ் தெரிவித்துள்ளது. எனினும் குறிப்பிட்ட நிறுவனத்தின் யூடியுப்பில் அந்தக் காணொலி தொடர்ந்தும் காணப்படுகின்றது என்று கொழும்பு டெலிகிராவ் மேலும் தெரிவித்துள்ளது.

(4)

### தேர்தலுக்குத் தடை விதிக்கப்பட்டால்

## வெற்றியைக் கொண்டாடுபவர்கள் புலிக்கொடியை ஏற்றவேண்டும்!

### கொக்கரிக்கிறது கோத்தா அணி

கொழும்பு, டிசெ. 11

பொதுத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தீர்ப்புக் கிடைத்தால், அதனைக் கொண்டாட நினைப்பவர்கள் பாற் சோறுக்குப் பதிலா சாவுச் சோறு உண்ணுங்கள். தேசியக் கொடிக்குப் பதிலாக வடக்கின் புலிக் கொடியை ஏற்றுங்கள்.

இவ்வாறு மருத்துவர் சீதா அரம்பேபொல தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் எலிய அமைப்பு நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு அழிவுப் பாதையில் செல்வதைத் தடுத்து நிறுத்தும் வகையில் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்துக்கு எதிராக அடிப்படைவாதிகள் நீதிமன்றம் சென்றனர். மக்கள் ஆணைக்கு எதிராகவே நீதிமன்றம் சென்றுள்ளனர். நீதிமன்றத் தீர்ப்பு எமக்கு எதிராகவும் அமையலாம்.


ஆனால் பொதுத் தேர்தலை நடத்தக் கூடாது என்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டால், பாற்சோறு உண்ணத் தயாராக இருந்தவர்கள் சாவுச் சோறு உண்ணத் தயாராக வேண்டும். மகிழ்ச்சியில் பட்டாசு கொளுத்த நினைத்தவர்கள் தமது பிள்ளைகளின் மார்பில் பாயும் துப்பாக்கி ரவைகளாகவே அதனைக் கருத வேண்டும்.

தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளவர்கள் வடக்கின் புலிக் கொடியை ஏற்றுங்கள் என்று தெரிவித்தார்.

(4)

## அரசியல் அதிகாரங்களுக்காக அதிகாரிகளைப் பயன்படுத்தாதீர்

### சம்பிக்கவின் கருத்துக்கு கம்மன்பில இப்படிப் பதில்



கொழும்பு, டிசெ. 11

அரசியல் அதிகாரத்துக்கு அரச அதிகாரிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது.

பிவித்துரு ஹெல உருமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

தலைமை அமைச்சரின் செயலாளர் உள்ளிட்ட தலைமை அரச அதிகாரிகள் சிலரை நாடாளுமன்றச் சிறப்புரிமை மற்றும் நீதிக் குழுவுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதில் வழங்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(4)

# பண்டிகைக் காலங்களில் சிறப்புச் சுற்றிவளைப்பு

கொழும்பு, டிசெ. 11

பண்டிகைக் காலங்களில் மதுபோதையுடன் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை கைதுசெய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான ஒரு இலட்சம் பரிசோதனை பலூன்கள் அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன என்று போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலப் பகுதியில் கொழும்பு மற்றும் அதனைச் சுழவுள்ள பகுதியில் மேலதிகமாக ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும் வகையில் வீதியின் இரு பக்கங்களிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று மேலும் தெரிவித்தது. (4)

# 4 வருடங்களுக்கு முன்னர் நான் கூறியிருந்தது ஐ.தே.கட்சிக்குத் தற்போதுதான் உறைக்கிறது!

## அதன் முன்னாள் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 11

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றமொன்று அவசியம் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். அத்தோடு, ஐ.தே.க தவிர்ந்த வேறொருவரைப் பொதுவேட்பாளராகக் களமிறக்கினால் பின்னர் ஆபத்திலேயே முடிவடையும் என்று நான்கு வருடங்களுக்கு முன்னரே கூறியிருந்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.**

கண்டியில் மல்வத்து மகாநாயக்க தேரரை நேற்றுமுன்தினம் அவர் சந்தித்தார். அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, ஒட்டுமொத்த மக்களின் பிரச்சினையாகவே கருதப்படுகிறது. இதனால், நாட்டுக்குத் தற்போது பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நெருக்கடியை வெகுவிரைவில் இல்லாதொழிக்க வேண்டும்.

ஒரு தரப்பினருக்குச் சாதகமாக அன்றி, நடுநிலையான தீர்வொன்றை வழங்க வேண்டும் என்பதுதான் எனது கருத்து.

எனவே, இதுதொடர்பில் மூன்று தலைவர்களும் பேச்சு நடத்தி உடனடித் தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

4 வருடங்களுக்கு முன்னர், நான் இந்தப் பிரச்சினை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தேன்.

அரசதலைவர் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அன்றி, இன்னொருவரைப் பொதுவேட்பாளராகக் களமிறக்க வேண்டாம் என்று அறிவித்திருந்தேன். இதனால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்தவொரு பலனும் ஏற்படாது என்றும் கூறினேன்.

ஆனால், என்னைக் கட்சியிலுள்ள சிலர் துரோகியாக அடையாளப்படுத்தினார்கள்.

மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து சூழ்ச்சி செய்கிறேன் என்று குற்றம் சுமத்தி, நான் கட்சியிலிருந்து விலகிச் செல்லும் நிலைமைக்கும் தள்ளினார்கள்.

அப்போது நான் கூறியதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று என்ன நடந்துள்ளது? நான்கு வருடங்களுக்குப் பின்னர் நான் கூறியது அவ்வாறே இடம்பெற்றுள்ளது.

நான் அன்று கூறியதைக் கட்சியின் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்களாயின், இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அரசதலைவர் ஒருவரையும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசையும்தான் எதிர்ப்பார்த்தேன்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான ஆதரவாளர்கள் மாற்றமொன்றைத் தற்போது எதிர்பார்க்கிறார்கள். இது தலைமைப் பொறுப்பிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

24 வருடங்களாக ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைவராக இருந்துள்ளார். 4 அரசதலைவர் தேர்தல் உட்பட பல தேர்தல்களுக்கு முகங்கொடுத்துள்ளார். எனவே, கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்றே மக்கள் கருதுகிறார்கள். இதனைக் கட்சியின் தலைமை கவனத்தில் எடுக்கவேண்டும் - என்றார்.



ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த திஸ்ஸ அத்தநாயக்க, கடந்த அரசதலைவர் தேர்தலின்போது மகிந்த அணியான சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரான மைத்திரி ரணிலின் அணிக்கு தாவியிருந்தார். அதற்குப் பதிலடியாக ரணிலின் அணியான ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்கவை மகிந்த சுதந்திரக் கட்சியின் பக்கம் இணைத்துக் கொண்டிருந்தார். தேர்தலில் மைத்திரி வெற்றிபெற்றார். (4)

# ஐ.நா. பாதுகாப்புப் படைகள் வடக்குக்குத் தேவையில்லை

## கோத்தபாய ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 11

உள்நாட்டுப் படைகள் வலுவாகவும், நாட்டைப் பாதுகாக்கும் ஆற்றலுடனும் இருப்பதால், வடக்குக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புத் தேவையில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று மாலை ஊடகங்களைச் சந்தித்த கோத்தாபய ராஜபக்சவிடம், வடக்குக்கு ஐ.நாவின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று புலம்பெயர் தமிழ் அமைப்பு ஒன்று விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாக, ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அவர், "எமது படைகளின் துணையு டன், அந்த விவகாரங் களை எங்களால் தீர்த்துக் கொள்ள முடியும்.

இறைமையுள்ள நாடு என்ற வகையில், இலங்கையின் அரசியல் விவகாரங்களில் அனைத்துலக சக்திகள் தலையிட முடியாது.

சில ஆட்சிகளில் அனைத்துலக தலையீடுகளின் விளைவாகவே தற்போதைய அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு தேசிய பாதுகாப்புத் தொடர்பாகப் போதிய புரிந்துணர்வு இல்லாமல் செயற்பட்டது.

அவர்கள் தேசிய பாதுகாப்புக் குறித்து அறிந்திருந்தால், மட்டக்களப்பில் இரண்டு பொலிஸ் அலுவலர்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உறுதியான அரசை அமைப்பதற்கு மக்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

தனிப்பட்ட நலன்களுக்காக அரசமைப்பில் திருத்தங்களைச் செய்யக் கூடாது.19 ஆவது திருத்தச் சட்டத்தில் இது பற்றித் தெளிவுபடுத்தியுள்ளது." என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# 19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நீதி, மனித உரிமை பலமாகியுள்ளன

## காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவிக்கிறார்

கொழும்பு, டிசெ. 11

19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நீதியும், மனித உரிமையும் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மனித உரிமை என்பது கெட்ட வார்த்தை என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சமூக வலைத்தளங்களைப் பார்க்கும்போது, மனித உரிமை தொடர்பில் கதைப்பது தேசத்துரோக விடயம் என்று நினைக்கி றார்கள்.

ஆனால், மனிதர்களாக எம் அனைவருக்கும் உள்ள உரிமையே மனித உரிமையாகக் கருதப்படுகிறது. ஒரு நாடு இவற்றைச் செயற்படுத்தினாலேயே அது முழுமையான ஒரு நாடாகக் கருதப்படும்.

காணாமற்போனோர் விடயமானது, எமது நாட்டில் நீண்ட காலமாக நிலவிவரும் பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது. நீதியின் ஆட்சி கட்டாயப்படுத்தப்படல் அவசியம். அரசதலைவர் உள்ளிட்ட எந்தவொரு நபரும் நீதிக்குப் புறம்பாகச் செயற்பட முடியாது. இது அனைவருக்கும் பொதுவான ஒன்று.

நீதிக்கிணங்க நாட்டை வழிநடத்த வேண்டும் என்றே அரசமைப்பில் நீதியை கொண்டு வருகிறார்கள். 19 ஆவது திருத்தச்சட்டத்தில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் பல்வேறு சரத்துக்கள் இருக்கின்றன.

அதாவது நீதியரசர் நியமனம், சுயாதீன ஆணைக்குழுக்கள், அரச திணைக்களங்களின் செயற்பாடு எனப் பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளன. இந்த நாட்டைப் பொறுத்தவரை 19 ஆவது திருத்தச்சட்டம் கட்டாயமாக இருக்க வேண்டும். இதில் ஏதும் குறைகள் இருந்தால் அதனைத் திருத்திக்கொள்ள முடியும்.

மேலும், அரசமைப்புத் தொடர்பில் மக்களுக்கு ஒரு தெளிவூட்டலை மேற்கொள்ள வேண்டும். பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு ஒரு தெளிவூட்டலை மேற்கொள்ள வேண்டும்.

இதுதொடர்பில், நாம் அரசியல் செய்யத் தேவையில்லை. ஆனால், எது சரி எது பிழை என்பதைக் கூறவேண்டும். மக்களுக்கு இன்னும் மனித உரிமை தொடர்பில் விழிப்புண ர்வை ஏற்படுத்த வேண்டும்" - என்றார். (4)

# நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்குமாறு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ. 11

நிறைவேற்ற அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறையை இல்லாதொழித்து சாதாரண அரசதலைவராக மக்களின் நன்மதிப்பைப் பெறுவேன் என்று மைத்திரிபால 2015ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார். இன்று அரசதலைவருக்கான அதிகாரங்களை மைத்திரிபால முறைகேடு செய்துள்ளார். அவர் அன்று கூறியது போல் நிறைவேற்று அரசதலைவர் முறையை ஒழித்து சாதாரண அரசதலைவராகச் செயற்பட அரசமைப்பில் மாற்றம் கொண்டு வரவேண்டும்.

இவ்வறு வலியுறுத்தி அட்டனில் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மலையக இளைஞர் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தன. அரசதலைவருக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைதியான முறையில், பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் அரசியல் நிலமை குழப்பகரமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் பொருளாதாரத்திலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நாட்டில் அமைச்சரவை மற்றும் தலைமை அமைச்சர் இல்லை. இதற்கு அரசதலைவர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (4)



# யாழ். குடாவில் விரைவில் மாதாந்த மலிவு விற்பனை

**யாழ்ப்பாணம், டிசெ.9**

**யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பொதுச் சந்தைகளில் மாதாந்த மலிவு விற்பனை விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையின் வரவு செலவுத் திட்டத்தில் இந்த விடயம் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.**

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாநகர சபையின் சிறப்பு அமர்வில் குறித்த மலிவு விற்பனைச் சந்தை தொடர்பில்விவாதிக்கப்பட்டது. "வறிய மக்கள், பணம்படைத்தவர்கள் என்று அல்லாமல் அனைவரும் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வகையில் இந்த விற்பனைச் சந்தை அமையும். பண்டிகைக் காலங்களில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு இந்தச்சந்தை மிகவும் உதவிகரமாக அமையும்" என்று முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த மாநகரசபை உறுப்பினர் றெமீடியஸ், "மலிவுவிற்பனைச்சந்தைகளை உருவாக்கும் போது அதனால் உள்ளூர் வர்த்தகர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அவர்களைப்பாதுகாக்க வேண்டும். வர்த்தகர்கள் ஏற்கனவே கடன் சுமைகளில்உள்ளனர். எனவேவெளியிடத்துவர்த்தகர்களுக்குஅங்குஇடமளிக்காது உள்ளூர் வர்த்தகர்களே அங்கு பொருள்களை விற்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதில் வழங்கிய முதல்வர் ஆனல்ட், "மாநகரசபைக்குவரிசெலுத்தும் வர்த்தகர்களுக்கே சந்தைகளில் பொருள்களை விற்க இடமளிக்கப்படும். முழுக்க முழுக்க உள்ளூர் வர்த்தகர்களே இந்த மலிவு விற்பனைச் சந்தைகளில் அனுமதிக்கப்படுவார்கள்" -என்றார். (ம-21)

## யாழ்ப்பாணக்குடாநாட்டில் பால்வெண்டிசெய்கையில் அதிகமானவர்கள்ஆர்வம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகளில் பலர் இம்முறை பால் வெண்டிச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்பில் மாவட்ட விவசாயத் திணைக்களம், "ரி.வி. 8' இனத்தைச் சேர்ந்த பால் வெண்டிகளை இம்முறை அதிகமானசெய்கையாளர்கள்பயிரிட்டுள்ளனர். 39ஹெக்டேயரில் பால்வெண்டி பயிரிடப்பட்டுள்ளது. 150 ஹெக்டேயர் நிலப்பரப்பு வரை இந்த வருடம் பயிரிடத் திட்மிடப்பட்டுள்ளது. அதனைவிட பச்சை இன வெண்டிகளையும் பயிரிட்டுள்ளனர். பால்வெண்டிவிதைகள் அனேகமான விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் பால் வெண்டிகள் ஒருவித மஞ்சள் நோய்த் தாக்கத்துக்கு இலக்காகின. இதனால்இந்தவருடம்குறித்தநோய்த்தாக்கத்தைத்தவிர்ப்பதுதொடர்பில்நோயாளர்களுக்குதேவையான விழிப்புணர்வுகள் வழங்கப்படும்" என்று மேலும் தெரிவித்தது. (ம-17)



வடமராட்சி கரவெட்டி கிழக்குப் பிரதேச செயலகபிரிவுக்குஉட்பட்ட ஜெ/368கிராம சேவையாளர் பிரிவில், 18ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள சவுரியந்தோட்ட ஞான வைரவர் ஆலயத்தைச் சீரமைப்புச் செய்வதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் குறித்தொதுக்கப்பட்டநிதியில்5லட்சம்ரூபா செலவில் குறித்த ஆலயம் சீரமைப்புச் செய்யப்படவுள்ளது. (ம)

## குறுக்கே ஓடிய நாயால்விபத்து இருவர் காயம்

தென்மராட்சி, டிசெ. 11

சாலைக்குக் குறுக்கே ஓடிய நாயுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த குடும்பத்தலைவருக்குக் கால் முறிந்தது. உடன் சென்ற சிறுமிக்கு உராய்வுக் காயங்கள் ஏற்பட்டன. இந்தச் சம்பவம் மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. வேலைக்குச் சென்ற நபரொருவரை அழைத்துவரச் சென்ற வேளையில் விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த இருவரும் தந்தையும் மகளும் ஆவர். அவர்கள் இருவரும் சாவகச்சேரி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். உராய்வுக் காயங்களுக்கு இலக்கான மகள் வெளிநோயாளர்கள் பிரிவில் சிகிச்சை பெற்றார். (ம-9)

## எலி எச்சத்துடன் பிஸ்கட் விற்றவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, டிசெ. 11

சுகாதாரத்துக்குக்கேடானமுறையில் உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த குளிர்களிவாகனஉரிமையாளருக்குசாவகச்சேரி நீதிமன்றத்தால் கடந்த வெள்ளிக்கிழமை18ஆயிரம்ரூபாதண்டம் விதிக்கப்பட்டது.

மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற நவநாள் வழிபாட்டின் போது அங்கு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டநடமாடும்குளிர்களி (ஐஸ்கிறீம்) வாகனங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்சோதனைநடத்தினர். அவற்றில் அளவெட்டியைச் சேர்ந்த வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த குளிர்களியில் இறந்த நிலையில்எறும்புகாணப்பட்டதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த 'பிஸ்கட்' பைக்கற்றுக்குள் எலிப் புளுக்கைகளும் காணப்பட்டுள்ளன.



இதையடுத்துநடமாடும்வாகனத்தின் உரிமையாளர்மீது எழுதுமட்டுவாழ் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சு.குணசாந்தன் வழக்குத் தாக்கல் செய்தார். எறும்பு மொய்த்த நிலையில்பழக்கலவையைவிற்பனைக்கு வைத்திருந்தமை, எலி எச்சத்துடன் 'பிஸ்கட்டுக்களை' விற்பனைக்கு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுடன்வழக்குத்தொடரப்பட்டது.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வாகன உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இதையடுத்து முதலாவது குற்றத்துக்கு 8 ஆயிரம் ரூபா தண்டமும் செலுத்தத் தவறின் நான்கு மாத சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றத்திற்கு 10ஆயிரம்ரூபாதண்டமும்செலுத்தத் தவறின்5மாதசிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன. (ம-9)



## வளர்மதி ச.சமூக நிலையத்துக்கு நடுகை செய்யப்பட்டது அடிக்கல்

கொடிகாமம், டிசெ. 11

நுணாவில் மேற்கு வளர்மதி சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு சனசமூக நிலைய தலைவர் தலைமையில் கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கே. சயந்தன்கலந்துகொண்டார். சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீசன், சாவகச்சேரிநகரசபைஉபதவிசாளர்அ.பாலமயூரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், சாவகச்சேரிநகரசபையின் முன்னாள் உறுப்பினர் மயில்வாகனம், சாவகச்சேரிநகரசபையின்முன்னாள்உறுப்பினர்சுதர்சன், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தனுசன், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் தங்கராசா உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் குறித்தொதுக் கப்பட்ட நிதியில் இருந்து 10லட்சம்ரூபாசெலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-159)

### டெங்கு பரவும் சூழல் காரணமாக

## மட்டுவில் தெற்கில் 27 சிவப்பு அறிவிப்புகள் மேலும் 4 குடியிருப்பாளர்கள் மீது வழக்கு

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால்கடந்த3ஆம்திகதிதிங்கட்கிழமை மட்டுவில் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நடத்தப்பட்ட சோதனையின் போது டெங்கு உற்பத்தியாகக்கூடிய ஏதுநிலையில் 31 குடியிருப்புக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அவர்களில்நால்வருக்குஎதிராகவழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

மேற்குறித்தபிரிவில்உள்ள598இடங்கள்சோதனைக்குஉட்படுத்தப்பட்டன. அவற்றில் 31 இடங்களில் டெங்குக் குடம்பிகள் உற்பத்தியாகக்கூடிய ஏதுநிலைகாணப்பட்டது.27குடியிருப்பாளர்களுக்குச்சிவப்புஅறிவித்தல்கள்விடுக்கப்பட்டன. இதன்படி அவர்கள் இன்னும்இருவாரங்களுக்குள்தமதுபகுதிகளைத் துப்புரவு செய்ய வேண்டும். நான்கு குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் அதிகளவாக இருந்ததை அடுத்துஅவர்களுக்குஎதிராகவழங்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவால், மழைகாலத்தையடுத்து நாடளாவிய ரீதியில் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்களைமேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. கடந்தமாதம்முதலாம், இரண்டாம் திகதிகளில் மேற்கொள்ளப்படவிருந்த இந்தச் சோதனைகள், நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் இடைநிறுத்தப்பட்டன. அதன்பின்னர் 15ஆம், 16ஆம் திகதிகளில் சோதனைகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. 15 திகதிய சோதனைகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டாலும்16ஆம்திகதிய சோதனைகள் 'கஜா'புயல்காரணமாகக்கைவிடப்பட்டன. இவ்வாறு 16 திகதி மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தசோதனைகளேகடந்த 3ஆம்திகதிதிங்கட்கிழமைமுன்னெடுக்கப்பட்டன. (ம-9)

# 25 வீதிகளை சீரமைக்க 2 கோடி ரூபா ஒதுக்கீடு

## சுழிபுரம் பிரதேச சபையின் பாதீட்டில்

யாழ்ப்பாணம், டிசெ. 11

**வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 25 வீதிகளைச் சீரமைக்க 2 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.**

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் 25 உறுப்பினர்களுக்கும் தலா8லட்சம்ரூபாவீதம்2 கோடிரூபாஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் 25 வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.

இதன்மூலம்அராலிதெற்கு உடையார் ஒழுங்கை, மூளாய் தேவாலய வீதி, சுழிபுரம் மேற்கு ஆலமோடை வீதி, சுழிபுரம் மத்தி பச்சந்தை வீதி, சுழிபுரம் கிழக்கு காட்டுப்புலம் காளி அம்மன் வீதி, சுழிபுரம் கிழக்கு தபாற்கந்தோர் பின்வீதி, பொன்னாலை முதலாம்ஒழுங்கைதெற்கு வீதி, பனிப்புலம்காலையடி வீதி, தொல்புரம் மேற்கு பனாவெட்டி வீதி முதலாம் ஒழுங்கை, தொல்புரம் மேற்கு பொக்கன் கலட்டி வீதி, தொல்புரம் மேற்கு டச்சுஇணைப்புவீதி, தொல்புரம் மேற்கு அந்தோனியார் வீதி, வட்டு கிழக்கு கலட்டிமுதலாம்ஒழுங்கை, கீரிமலை வீதி முதலாம் ஒழுங்கை, வட்டு வடக்கு கலட்டி கிளை ஒழுங்கை, வட்டு கிழக்கு குளிப்பன் நொத்தாரிசு இணைப்பு வீதி, சங்கானை தெற்கு சவேரியார்வீதி, சங்கானை தெற்கு சங்கரத்தை 3ஆம் ஒழுங்கை, சங்கானைமுதலாம் ஒழுங்கை கலைவாணி வீதி, வட்டு தென்மேற்குகனகரத்தினம்வீதி, அராலி மேற்கு கடற்கரை வீதி, அராலி வடக்கு மயிலயற்புலம் துணைவி ஒழுங்கை, அராலி வடக்கு புளியடி ஒழுங்கை, அராலி வடக்கு யாழ் முதலாம் வீதி செட்டிகுறிச்சி பிள்ளையார் வீதி ஆகிய வீதிகளே சீரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை 27 லட்சம் ரூபா செலவில் ஆதனங்களுக்கு இலக்கமிடுதல் உட்பட7 முன்னோக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. 2019ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி உபஅலுவலகங்களும் சீரமைப்புச் செய்து அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அனுமதிக்கப்பட்டவரவு-செலவுத்திட்டம் உப அலுவலகங்களிலும் தலைமைஅலுவலகங்களிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் - என்றார். (ம-50)



வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் கிராம மட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. இதன் ஒரு பகுதியாக சிறுவர் கழகங்களை அமைத்து அதனூடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் அது முன்னெடுத்து வருகின்றது. பருத்தித்துறை பிரதேசசெயலகத்துக்குட்பட்ட புலோலி தென்மேற்கு சிறுவர்கழகத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் விளையாட்டுப் போட்டிகளும் அண்மையில் அவ்வாறு முன்னெடுக்கப்பட்டன. (ம)



காரைநகர் சலஞ்சேர்ஸ் விளையாட்டுக்கழகத்தால்காரைநகர்சுப்பிரமணியம்வித்தியாசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. ஏராளமான இளைஞர்கள் தன்னார்வத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-21)

# துப்புரவுசெய்யப்படுகின்றது வேம்படிவீதியின்வாய்க்கால்

யாழ்ப்பாணம், டிசெ. 11

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தால் வேம்படி வீதியில் உள்ளவாய்க்காலைத் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக இந்த வாய்க்கால் துப்புரவு செய்யப்படவில்லை. ஏராளமான கழிவுகள் தேங்கிக் காணப்பட்டன. அத்துடன் புற்கள், செடிகள் என்பன வாய்க்காலை மூடும் அளவுக்கு வளர்ந்திருந்தன. இதனால் கழிவுநீர் வாய்க்காலின் ஊடாக வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டது. நீண்ட இடைவெளியின்பின்னர் இந்தக் வாய்க்கால்தற்போது துப்புரவு செய்யப்படுகிறது. (ம-17)



# இளவாலையில்டெங்குநீக்கம்

## வருத்தப்படாத வாலிபர் சங்க ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், டிசெ. 11

இளவாலையில் வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் டெங்குக்கு எதிரான செயற்திட்டம் கடந்த சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீடுகள்தோறும்இருக்கும்நுளம்புபெருகஏதுவானபொருள்களானபழையடயர்கள், இளநீர்க்கோம்பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், சிரட்டைகள் என்பவற்றைச் சேகரித்து பொதிசெய்து வைத்துகொள்ளுமாறு வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர்ஏற்கனவேகோரிக்கைவிடுத்திருந்தனர். இவ்வாறு பொதிசெய்யப்பட்டபொருள்களைஅப்புறப்படுத்தும்பணிகள் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. டெங்குக்கு எதிரானதிட்டம்தொடர்ந்தும்முன்னெடுக்கப்படும்என்றும்வருத்தப்படாத வாலிபர் சங்கம் அறிவித்தது. (ம-21)

# பொன்னாலைவரதராஜனின் வைகுண்ட ஏகாதேசி கொடி

பொன்னாலை.டிசெ.11

பொன்னாலைசிறிவரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்டஏகாதேசி பரம்மோற்சவம்நேற்றுக் காலை 11மணியளவில்கொடியேற்றத்துடன்பக்திபூர்வமாக ஆரம்பமாகியது.

எதிர்வரும் 18ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு சங்காபிசேகப் பூசைகள் இடம்பெற்று அதிகாலை 5 மணிக்கு சுவர்க்க வாயில் தரிசனம் இடம்பெறும். தொடர்ந்து காலை 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் இடம்பெற்று 11 மணிக்கு பெருமாள் தேர் ஏறுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-21)





கைதடி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் பெற்றோர்தினவிழாமுன்பள்ளிமண்டபத்தில் கடந்த முதலாம் திகதி ஆசிரியர் த.சுபத்திரா தேவியின் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்கைதடி பாலர்பகல்பராமரிப்பு நிலையத்தில் கல்வி கற்கும் பாலகர்களின் பெற்றோர்கள்மதிப்பளிக்கப்பட்டனர். வடமாகாண முன்னாள்கணக்காய்வு உத்தியோகத்தர் வே.தயாளன், நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், யாழ்ப்பாணப் போதனாவைத்தியசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சுதாகரன், முன்பள்ளியின் பழைய மாணவியும்யாழ்ப்பாணப்பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை விரிவுரையாளருமான ப.சுலோசனா ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-159)

# சாவகச்சேரி-கச்சாய் துறைமுகம் வரையிலான வீதியைச்சீரமைக்கும்பணிகள் ஆரம்பமாகின

சாவகச்சேரி தனன்களப்பு சாலையிலிருந்து கோயிற்குடியிருப்புகிராமஅலுவலர் பிரிவு கடற்கரை ஊடாக கச்சாய்வரைசெல்லும்சாலையைச் சீரமைக்கும் பணிகள்கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தால் 6 மில்லியன் ரூபா செலவில் இந்தச்சீரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதி 1996ஆம் ஆண்டுபடையினரின்அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டு இருந்தது. தனன்களப்பு சாலையிலிருந்து அல்லாரை தம்பு தோட்ட படைமுகாமுக்குச் செல்வதற்காக படையினரால் இந்த வீதி பயன்படுத்தப்பட்டு வந்தது. படையினர் அந்தப் பகுதியை விடுவித்ததைஅடுத்துபொதுமக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் முக்கியத்துவம் மிக்க வீதிகளில் ஒன்றாக இந்த வீதி மாறியுள்ளது. சாவகச்சேரிநகரசபையின் கடலுணவு விற்பனை நிலையத்துக்கு அருகில் காணப்பட்டதால் கோயிற்குடியிருப்பு கடற்றொழிலாளர்களாலும் இந்த வீதி நாள்தோறும்பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் வீதியின் சீரற்ற நிலையால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்குமத்தியிலேயே அதனால் பயணிக்க வேண்டிய நிலை இருந்தது.

அண்மையில் வீசிய கஜா புயல் காரணமாகவும் அண்மையில்பெய்தகடும் மழை காரணமாகவும் சாவகச்சேரி-கச்சாய்துறைமுகம் வரையிலான வீதி மேலும்சீர்குலைந்தது.இந்த நிலையைச் சுட்டிக்காட்டி பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்தே மாவட்டச்செயலகத்தால் 6 மில்லியன் ரூபா செலவில் அந்த வீதி தற்போது சீரமைக்கப்படுகிறது. சாவகச்சேரிநகரசபையின் கடந்த ஆட்சிக்காலத்தில்கோயிற்குடியிருப்பு கடற்றொழில் படகுகள்தரிக்கும்இடத்திலிருந்து தனன்களப்புசாலைவரை சீரமைப்புச் செய்ய நிதி ஒதுக்குமாறு நீரியல் வளத்துறையினரிடம்நகரசபைத் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை கோரியிருந்த போதிலும் நிதி கிடைக்காததால்வேலைகள்நடைபெறவில்லை. (ம-9)



நானாட்டான் சிறி செல்வமுத்துமாரியம்மன் ஆலயத்துக்கான இராஜகோபுரம் அமைப்பதற்கு அத்திபாராம் வெட்டும் பணி கிராமத்து பொதுமக்களின் உதவியுடனும், நற்பணி மன்றத்தினரின் உதவியுடனும் ஆரம்பமாகியுள்ளது. (213)

# மன்னார் – நானாட்டானில் கழிவு நீருடன் கடல் நீரும் சேர்ந்து வீடுகளுக்குள் புகும் அவல நிலை

## பகுதி மக்கள் சாள்ஸ் எம்.பியிடம் முறைப்பாடு

மன்னார்,டிசெ.11

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களினுள் கழிவு நீருடன் கடல் நீரும் சேர்ந்து உட்புகுவதாக பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் முறையிட்டுள்ளனர்.

மக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் காலை குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதுடன், மக்களைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.



அச்சங்குளம் பகுதியில் கழிவு நீருடன், கடல் நீரும் சேர்ந்து மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் வருகிறது.

கலந்துரையாடலில் அச்சங்குளம் கிராமம் தாழ்வான கடற்கரைப் பகுதி என்பதால், மழைக் காலங்களில் முருங்கன் உட்பட பலகிராமங்களில் இருந்து வரும் கழிவு நீரும், கடல் நீர் ஓடை வழியாக வரும் நீரும் வீதிகளை அரித்து வீடுகளுக்குள் புகும் நிலையுள்ளது.

கழிவு நீர் ஓடும் ஓடைப்பகுதி, வீதிப்பக்கமாக சுமார் 150 மீற்றர் வரை வெள்ளம் அரித்துள்ளதால், கிராம மக்கள் போக்குவரத்துக்கு பெரும் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர் என அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறைப்பாடு செய்தனர்.

150 மீற்றர் நீளமான வீதிப்பகுதியை சீரமைக்க 25 தொடக்கம் 30 மில்லியன் ரூபாவரை செலவாகும் எனவும், குறித்த பகுதியை சீரமைப்பது தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் இருந்தவாறே மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினருடன் பேசியதுடன், இந்த பிரச்சினைக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்ததாக நானாட்டான் பிரதேச சபை உப தவிசாளர் தெரிவித்தார். (56)

# 49 தென்னங்கன்றுகள் யானைகளால் நாசம்

முல்லைத்தீவு. டிசெ. 11

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட முள்ளியவளை பூதன் வயல் கிராமத்துக்குள் அண்மையில் புகுந்த காட்டுயானைகள் 49 தென்னங்கன்றுகளை அழித்துள்ளதாக அழிந்ததோட்டத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்திடம் முறையிட்டால் அவர்கள் பத்து வெடிகளைத் தந்து யானை வந்தால் கொழுத்திப் போடுங்கள் எனக் கூறுவதாக மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஆண்டும் மார்கழி மாதம் இவ்வாறு காட்டுயானையின் தொல்லையினால் அறுபதுக்கும் மேற்பட்ட தென்னம்பிள்ளைகள் அழிக்கப்பட்டன. காட்டுயானையின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள யானை வேலி அமைத்து தரவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி3-21)





# இன்ங்களின் மீள் இணக்கம் வவுனியாவில் செயலமர்வு

வவுனியா,டிசெ.11

இனங்களுக்கு இடையில் மீள் இணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பான செயலமர்வு ஒன்று வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் செயலர் ஏ.ஆர்.எம்.ரமீஸ் தலைமையில் செயலமர்வு வவுனியா, குருமன்காடுப் பகுதியில் அமைந்துள்ள நிறுவனத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

போர் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்த நிலையிலும், இனங்களுக்கு இடையில் மீள் இணக்கம் ஏற்படவில்லை. இன ரீதியான முரண்பாடுகள் சமூகங்களில் காணப்படுகின்றன. இந்த நிலையில் இனங்களுக்கு இடையில் மீள் இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு இந்தச் செயலமர்வு இடம்பெற்றது. (110)

# கொக்குவெளி விகாரையில் மரம் நடுகை

வவுனியா,டிசெ.11

வவுனியா கொக்குவெளிக் கிராமத்தில் உள்ள விகாரையின் விகாராதிபதியின் ஒழுங்கமைப்பில் நேற்றுக் காலை 10 மணியளவில் மரநடுகை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக, வவுனியா மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எம். தென்னகோன் மற்றும் வவுனியாவின் பிரபல வர்த்தகரும் "சேப்ரி" நிறுவனத்தின் உரிமையாளருமான மயூரன், வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வாராய்ச்சி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் வறுமைகோட்டுக்குக் கீழ் உள்ள கொக்குவெளி கிராமத்தை சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி கற்றலுக்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் "வீட்டிற்கு ஒரு மரம்" என்ற தொனிப்பொருளில் கிராம மக்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

விகாரை வளாகத்திலும் அதிகளவான பயன் தரு மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன. (110)



# வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையில் சாதித்த பாரதிபுரம் கிராமப் பெண்



வவுனியா,டிசெ.11

வவுனியாஇராசேந்திரகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில்வசித்துவரும் பழனியப்பன் பிரியதர்சினிஎன்ற31வயதுடைய பெண் ,வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் கிராம,மாவட்ட,மாகாண மட்ட தேர்வில் முதலாம் இடத்தினை பெற்று வவுனியா மாவட்டத்திற்கு பெருமையை சேர்த்துள்ளார்.

பம்மைமடு விவசாய திணைக்கள த்திற்குட்பட்ட பிரிவில் கடந்த மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற தெரிவில் முதலாவது இடத்தினையும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்றபோட்டியில்மாவட்டமட்டரீதியில் முதலாம்இடத்தினையும் நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற மாகாணமட்டதெரிவில்முதலாவது இடத்தினையும் பெற்று அகில இலங்கை ரீதியில் இடம்பெறும் போட்டிக்கு தெரிவாகி சென்றுள்ளார். இவரது தோட்டத்தில்•பல்வேறுவகையான பயிர்கள் செய்கைபண்ணப்பட்டுள்ளன. (110)

# மன்னாரில் - நாவலர் விழா

மன்னார்,டிசெ. 11

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் இணையம் நடத்தும் நாவலர் விழா வரும் 15 ஆம் திகதி மன்னார் அடம்பன் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு திருவுருவ பவனியுடன் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாந்தை மேற்குப் பிரதேச செயலர் செ.கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட இந்து மகா சபைத் தலைவர் செ.சி.இராமகிருஷ்ணனும், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மு.கதிர்காமநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (56-213)

# முதியோருக்கு பகல் பராமரிப்பு பேசாலையில் இன்று அறிமுகம்

## அதற்கான நிலையம் திறக்கப்படுகிறது

மன்னார்,டிசெ.11

மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள, முதியோர் சங்கப் பகல் பராமரிப்பு நிலையம் இன்று காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பேசாலை முதியோர் சங்கத் தலைவர் கலாபூசணம் எஸ்.ஏ.மிராண்டா தலைமையில் நடைபெறவுள்ள திறப்பு நிகழ்வில் விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் சி.எ.மோகன்ராஸ், மன்னார் மறைமாவட்ட முதியோர் சமாச இயக்குநர் அல்பன் ராஜசிங்கம் அடிகளார், பேசாலைப் பங்குத் தந்தை எஸ்.கே.தேவராஜா, மன்னார் பிரதேச செயலர் திருமதி க.சிவசம்பு, முன்னாள் மன்னார் மாவட்ட பிரதேச செயலர் ம.பரமதாஸ் உட்பட பலர் கலந்துகொள்கின்றனர்.

387 முதியோர்கள் இந்த பகல் பராமரிப்பு நிலையத்தில் அங்கத்தவர்களாக உள்ளனர். (60)



## முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா

வவுனியா,டிசெ.11
வவுனியாதிருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியின்வருடாந்தகலை விழாவும்,மாணவர்மதிப்பளிப்பு விழாவும் நேற்று முன்தினம்மாலை2மணியளவில் முன்பள்ளி அதிபர் திருமதி மீராகுணசீலன் தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் வடமாகாணசபைஉறுப்பினர் ஜி .ரி .லிங்கநாதன் .நகர சபை உறுப்பினர்களான.க.சந்திரகுலசிங்கம் .சு.காண்டீபன், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.இராஜேஸ்வரன் எனப் பலர் கலந்துகொண்டனர்.
விருந்தினர்களால் மாணவர்களுக்கு பரிசில்களும், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கிவைக்கபட்டதுடன், கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (110)

## ஈருருளி வழங்கல்

முல்லைத்தீவு,டிசெ.11
அமரர் கணபதிப்பிள்ளை அருணகிரிநாதன் அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் ஈருருளி வழங்கப்பட்டுள்ளது.
போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்கின்ற நோக்குடன், தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 9 ல் கல்வி கற்றுவரும் மாணவி செல்வி. புஸ்பகாந்தன் விஷ்ணுகா என்பவரது பாடசாலை போக்கு வரத்து சிரமத்தை நீக்குவதற்காக ஈருருளி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (222)



# மக்கள் குடியமர்ந்த பிரதேசத்தில் அபாயகரமான வெடி பொருள் மீட்பு

முல்லைத்தீவு, டிசெ.11
**வெடிபொருள்கள்அகற்றப்பட்டு,வெடிபொருள்கள் அற்ற பகுதி என்று அறிவிக்கப்பட்டு, மக்கள் மீள்குடியமர்ந்தஇடத்தில் அபாயகரமான வெடி பொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திபகுதியில்நேற்றுமுன்தினம்,தனியார்காணிஒன்றில்புதைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில். சிறப்பு அதிரடிப்படையினரால் இந்த வெடி பொருள் மீட்கப்பட்டுள்ளதுஎன்றுபொலிஸார் தெரிவித்தனர்.
காணி உரிமையாளர் பழமரக்கன்று ஒன்றை நடுவதற்காக வீட்டின் பின்புறமாகக் குழி தோண்டியுள்ளார்.
இதன்போது மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் வெடிகுண்டு ஒன்று இருந்ததை அவதானித்து உடனடியாகக் கொக்குத்தொடுவாய்கிராமஅலுவர்ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.
வெடி பொருளை மீட்பது தொடர்பில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஞாயிற்றுக்கிழமை நன்பகல் குறித்த பகுதிக்குச் சென்ற சிறப்பு அதிரடிப்படையினர் வெடி பொருளைமீட்டு அப்புறப்படுத்தியுள்ளனர்.
1984ஆம்ஆண்டுஇராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொக்குத்தொடுவாய் பிரதேசம்கொண்டுவரப்பட்டபோது, அந்தப்பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தனர்.
27 வருடங்களின் பின்னர் 2011ஆம்ஆண்டுமீண்டும் தமது சொந்த ஊரில் மீள் குடியமர்ந்தனர். அந்தப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் அனைத்தும் அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டிருந்த நிலையில், 15 கிலோஎடைகொண்டவாகனங்களைத்தகர்க்கும்மிதி வெடிமீட்க்கப்பட்டதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.
அச்சமடைந்துள்ள கொக்குத்தொடுவாய் மக்கள் தமது பகுதியை மீள வெடி பொருள்அகற்றும்நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (21)



# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கால்நடைகளால் விபத்துக்கள்

கிளிநொச்சி, டிசெ. 11
கிளிநொச்சி மாவட்டத்தின், பச்சிலைப்பள்ளியினை ஆக்கிரமித்துள்ள ஏனைய பிரதேச கால்நடைகளால், விபத்துக்கள் அதிகரித்து கால்நடைகளின் சாவும் அதிகரித்துள்ளது.
கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 7 க்கும் மேற்பட்ட மாடுகள் புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளன.
பச்சிலைப்பள்ளிபிரதேசஎல்லைக்குள்வேறுபிரதேசங்களில் பராமரிக்கப்பட்டமாடுகள்கட்டாக்காலிகளாகவிடப்பட்டுள்ளன.
இதனால்பிரதேசத்தில்கால்நடைவளர்ப்பில்ஈடுபட்டுள்ளவர்கள் முதல் வீதிகளில் செல்லும் பயணிகள் வரை பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன் பொருளாதார இழப்புக்களையும் சந்திக்கின்றனர்.
முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி போன்ற பகுதிகளில் தற்போது மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.
குறித்த பகுதிக்குள் கால்நடைகளின் அத்துமீறல் அதிகமாக காணப்படுவதாகவும், சுமார் 5 மேற்பட்ட கால்நடைகள் மிதிவெடிகளில் சிக்கி காயமடைந்துள்ளதாகவும், மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினர் தெரிவித்தனர்.
வீதிகளில் நிற்கின்ற கால்நடைகள் இரவு நேரங்களில் வீதிகளில் திடீரென குறுக்கிடுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.
இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளரிடம் கேட்டபோது "கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்க்காக, கால்நடைகள் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. அதேபோல்இதுதொடர்பானவிழிப்புணர்வுஒன்று மிகவிரைவில்நடத்தப்படஇருப்பதாகவும்"தெரிவித்தார். (6)



## அரிமரங்களுடன் மூன்றுபேர் கைது

சட்டவிரோதமான முறையில் அரிமரங்களை கடத்திச்சென்றனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேக நபர்கள் மூன்று பேரை கைதுசெய்துள்ளதாகஈச்சங்குளம்பொலிஸார்தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பாக பொலிசார் தெரிவித்ததாவது: நேற்றுக் காலை 7 மணியளவில் நொச்சிகுளம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தபடுவதாக கிடைத்த தகவலுக்கமைய, அந்தப் பகுதிக்கு சென்ற ஈச்சங்குளம் பொலிஸாரும், சிறப்பு அதிரடிபடையினரும் இணைந்து மரக்கடத்தல்நடவடிக்கையை



முறியடித்துள்ளதாக தெரிவித்தனர். சம்பவத்தில் வவுனியாவை சேர்ந்த மூன்று பேர் கைதுசெய்யபட்டதுடன், கப்ரக வாகனம் ஒன்றும் மீட்கபட்டது. கைதுசெய்யுபட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் இன்று நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (110)

### கொழும்பு முகத்திடலில் நடைபெறும்

# அமைதிப் போராட்டத்துக்கு வடக்கிலிருந்தும் ஆதரவு

கொழும்பு,டிசெ.11
புத்தளம்கொழும்புமுகத்திடலில் கடந்த 72 நாட்களாக இடம்பெற்றுவரும் தொடர் அமைதிவழிப் போராட்டத்துக்கு வடக்கிலிருந்து, சென்றஅரசியல்கட்சிகளை சேர்ந்தவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.
புத்தளம் அறுவைக்காடு பகுதியில்உள்நாட்டு, வெளிநாட்டுக் குப்பைகளைக் கொட்டுவதால் இயற்கை சூழல் மாசடைவதாகவும் அதனைத் தடுக்கக் கோரியும், கடந்த 72 நாட்களாக புத்தளத்தைத்சேர்ந்தசமூக செயற்பாட்டளர்கள்போராடி வருகின்றனர்.
இந்தப் போராட்டத்துக்கு ஆதரவுதெரிவித்து புதிய ஜனநாயக மாக்சிசலெனினிச கட்சி, வவுனியா சமூக நீதிக்கான வெகுஜனஅமைப்பு ஆகியன தமது ஆதரவை தெரிவித்ததுள்ளதுடன், நேற்றுமுன்தினம் சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு போராட்டம் நடைபெறும்பகுதிக்குசென்று பங்கெடுத்திருந்தனர்.
கட்சியின்செயலர்கா.செந்திவேல்தலைமையில்சென்ற குழுவினரே ஆதரவை வழங்கியிருந்தனர்.
குப்பையினால் ஏற்படும் பாதிப்புகளை உணர்த்தும் வகையிலான வீதி நாடகங்களும் அரங்கேற்றபட்டிருந்தன. (110)




# மைத்திரி, மகிந்தவை வேட்பாளர்களாக அறிவித்து ஒரே நாளில் தேர்தல்களை நடத்திக் காட்டுங்கள்!

## சவால் விடுகின்றது ஐக்கிய தேசிய முன்னணி

கொழும்பு, டிசெ. 11

பொதுமக்கள் முன்னணியுடன் கூட்டிணைந்து அரசதலைவர் வேட்பாளராக மைத்திரியும், தலைமை அமைச்சர் வேட்பாளராக மகிந்தவையும் பெயரிட்டு இரண்டு தேர்தலையும் ஒரேநேரத்தில் நடத்தலாம். அதனை எதிர்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். முடிந்தால் அவ்வாறு நடத்திக்காட்டுங்கள் என்று நாம் அரசதலைவர் மைத்திரியிடம் சவால் விடுக்கின்றோம்.



இவ்வாறு பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மக்கள் ஆணைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளார். அவருடைய தீர்மானங்களும், செயற்பாடுகளும் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராகவே நடைபெற்றுள்ளன. ஆகவே முதலில் அரசதலைவர் தேர்தலை நடத்தவேண்டும் என்று அவரிடம் கோருகின்றேன். அரசதலைவர் மைத்திரிக்குப் பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து மீண்டும் அரசதலைவராவதற்கே விருப்பம் உள்ளது. அந்தச் சிந்தனையுடன்தான் செயற்படுகின்றார். அவருடைய விருப்பம் அவ்வாறுதான் இருக்கின்றது என்றால் அதனையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே நாம் உள்ளோம் - என்றார்.

ராஜித சேனாரத்ன அங்கு தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் அரச தலைவராக சந்திரிகா பண்டாரநாயக்க அம்மையார் இருந்தார். நாடாளுமன்றத்தை அவர் கலைத்திருந்தார். அன்றைய காலத்தில் அரசதலைவருக்கு எதிராக நீதிமன்றத்தை நாடமுடியாத நிலைமை இருந்தது. அதேபோன்று அரசமைப்பிலும் நாடாளுமன்றத்தை ஒரு வருடத்தின் பின்னர் கலைப்பதற்கான அதிகாரமும் இருந்தது. ஆனால் 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர் அவை நீக்கப்பட்டுள்ளன. அதுதான் மாற்றம். அதடினப்படையில் நீதிபதிகள் தீர்ப்பளிக்கும்போது இந்த நாட்டு மக்கள் எதனை எதிர்பார்த்தார்கள் என்பதை வெளிப்படுத்துவதை அவர்களால் அவதானிக்க முடியும் என்றார். (4)



# இரணைமடுக் குளத்தில் காணப்பட்ட பழைய நினைவுக் கல் மீளநடப்படும்

## அவைத்தலைவரின் கோரிக்கையை ஏற்று ஆளுநர் பொறியியலாளருக்கு உத்தரவு

கிளிநொச்சி, டிசெ. 11

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் காணப்பட்ட, இலங்கையின் முதலாவது தலைமை அமைச்சர் டி.எஸ். சேனநாயக்கவின் நினைவுக்கல்லை மீளவும் அதேபகுதியில் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்தது.

குறித்த நினைவுக்கல் அங்கிருந்து அகற்றப்பட்டுப் புதிய கல் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தது. பழைய கல் தூக்கி எறியப்பட்டு புதிய கல்லில் அந்த விவரங்கள் எவையுமே தெரிவிக்கப்பட்டவில்லை என்பதை உதயன் சுட்டிக்காட்டியிருந்தான்.

குறித்த நினைவுக்கல்லை மீளவும் அந்த இடத்தில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயிடம் அவசர கடிதம் மூலமாகக் கோரிக்கை விடுத்திருந்தார். அதனைப் பரிசீலித்த ஆளுநர் அந்தக் கல்லை மீள அமைக்குமாறு பணித்திருந்தார் என்று ஆளுநர் அலுவலகத்தினர் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே பழைய கல் மீள அமைக்கப்படுகிறது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நீர்ப்பாசனப் பிரதிப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றிருந்த வேளை அதன் நிறைவுக்காக குளத்தின் சுற்றுவட்டத்தை அழகுபடுத்தும் பணிகள் இடம்பெற்றன. குறித்த நினைவுக்கல் அமைந்திருந்த பகுதியும் பக்குவமாக அகற்றப்பட்டு அந்தப் பகுதியில் சுற்றுவட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. சுற்றுவட்டம்அமைந்திருந்த பகுதியில் குறித்த நினைவுக் கல்லையும், புதிய நினைவுக் கல்லையும் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வந்தன. குறித்த குளத்தை விவசாயிகளிடம் கையளிக்க மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கை காரணமாக உடனடியாகக் குறித்த நினைவுக் கல்லைப்பொருத்த முடியவில்லை. அதனாலும் அளவில் பெரியதாகவே பழைய நினைவுக்கல் காணப்பட்டதாலும் அதை அந்த இடத்தில் அமைக்க முடியவில்லை. ஓரிரு நாள்களில் பழமை வாய்ந்த நினைவுக்கல்லும் மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்படும். அதற்கான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (4,6)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நியாயம் கிடைக்கும் என்று நம்புகிறோம்!

## கூறுகிறார் அனந்தி சசிதரன்

வவுனியா, டிசெ. 11

சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக எமக்கு நல்லதொரு நியாயம் கிடைக்கும் என்று நம்புகிறோம் இவ்வாறு வடக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

எழிலன் (சசிதரன்) உட்பட சிலரின் ஆட்கொணர்வு வழக்குகள் வவுனியா மேல்நீதிமன்றில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி நடைபெறும் என்று நீதிமன்று தெரிவித்தது.

பன்னாட்டு மனித உரிமைகள் தினம் இன்று(நேற்று).

தமிழர்களாகப் பிறந்தமைக்காவே கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு ஒரு அடிமை வாழ்வுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மன்னார் புதைகுழியில் வேதனை அளிக்கக்கூடிய சம்பவங்கள் நடைபெற்றுகொண்டிருக்கிறன.

இருப்புக் கம்பிகளால் கால்கள் கட்டப்பட்ட நிலையில் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆடைகள் இல்லாமல் ஒரு அநாகரிகமான முறையில் புதைக்கப்பட்டநிலையில் அவை மீட்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து நாடுகளும் பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தைக் கடைப்பிடிக்கும் நாள் இன்று வந்துள்ளது. எமது மக்கள்மீது திணிக்கப்பட்ட வன்முறைகளையும், உரிமை மீறல்களையும் எங்களது தலைவர்கள்கூட இடித்துரைக்க முடியாதவர்களாக, இதற்குப் பொறுப்புக்கூற முடியாதவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் வருத்தத்துடன் இன்றைய தினத்தை நாங்கள் கடைப்பிடிக்கின்றோம்.

இராணுவத்திடம் கையளிக்கபட்டவர்கள் தொடர்பாக 10 வருடங்களாகியும் எந்தவிதத் தகவலும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஒன்றை அரசு கொண்டுவந்திருக்கிறது. அதன்மூலமாகத் தீர்வு கிடைக்குமோ இல்லையோ, அதன் தலைவராகப் பிரபல சட்டத்தரணி சாலிய பீரிஸ் இருக்கின்றார். அவருக்கு அனைத்து மக்களிடத்திலும் நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. அதனைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எங்களுக்கு நீதியான முறையில் தீர்வைப் பெற்றுத் தருவார் என்று நாங்கள் நம்புகின்றோம்.

அவர் மனித உரிமைகள் தொடர்பாக அக்கறையும் கரிசனையும் கொண்டவர். மூவின மக்களிடத்திலும் அவருக்கு நன்மதிப்பு உள்ளது. எனவே சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக எமக்கு நல்லதொரு நியாயம் கிடைக்கும் என்று நம்புகின்றோம்.

நடைபெற்ற இன அழிப்புக்கு எந்தவொரு பொறுப்பும் கூறாத நிலையில் அரசு இருக்கிறது. இந்த இன அழிப்பானது தொடர்ந்தும் நடக்கலாம். தொடர்ந்தும் நாங்கள் கொல்லப்படலாம். காணாமல் ஆக்கப்படலாம் என்பதற்காகவே இலங்கை அரசு பொறுப்புக் கூறலைச் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றோம்.

தெற்கில் இருக்கின்ற ஆட்சிக் குழப்ப நிலையில் எங்களுக்கான நியாயம் கிடைக்க வேண்டும். பன்னாட்டு விசாரணை நடக்க வேண்டும் என்ற அழுத்தத்துடன் எங்களுக்கான ஒரு தீர்வு கிடைக்கக் கடுமையாக முயற்சிக்க வேண்டும் - என்றார். (4,110)

# கொள்கலனில் மணல் கடத்தல் பருத்தித்துறையில் முறியடிப்பு

## சாரதி, உதவியாளர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

கொள்கலன் கொண்ட வாகனத்தில் மணல் கடத்தப்பட்டமை முறியடிக்கப்பட்டது. அதிலிருந்த சாரதியும்உதவியாளரும் தப்பியோடிவிட்டனர். வாகனம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை நகரை அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் சம்பவம் இடம்பெற்றது. வாகனத்தைப் பொலிஸார் மறித்துச் சோதனையிட முற்பட்டபோது அதிலிருந்தவர்கள் தப்பியோடிவிட்டனர். பின் கதவைத் திறந்து பார்த்தபோதே அதில் மணல் இருந்ததைப் பொலிஸார் அவதானித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வழமையாக உழவுஇயந்திரம், லான்ட்மாஸ்ரர், டிப்பர் வாகனங்களில் மணல் கடத்தப்படுவது வழமை. தற்போது புதிய யுக்தியாக ஹெண்டெய்னர் ரக வாகனத்தில் மணல் கடத்தப்பட்டமை முதன் முறையாகத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். சந்தேகநபர்கள் நீண்ட நாள்களாகச் சட்டவிரோதமாக மணல் கடத்திச் சென்றிருக்கலாம்என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (4,26)



## பொலிகண்டி கடற்கரை துப்புரவு செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 11

"பிளாஸ்டிக் கழிவுகள் கடலுக்குள் செல்லாமல் தடுத்தல்" என்ற தொனிப்பொருளில் பொலிகண்டி மத்தி கடற்கரை துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை துப்புரவு இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், கிராம மக்கள் மற்றும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத் தொண்டர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

பொலித்தீன், பிளாஸ்டிக் நிலத்துக்குள்ளும் கடலுக்கும் செல்வதால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அவை பற்றிய விழிப்புணர்வுக் கூட்டம் அங்கு நடத்தப்பட்ட பின்னர் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## மரக்கறி விற்பனைப் பிரிவில் மறைக்கப்பட்ட இறைச்சி மீட்பு

சாவகச்சேரி, டிசெ. 11

சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் மரக்கறி விற்பனைப்பிரிவில் விற்பனைக்கு வைத்திருந்ததாகக் கூறப்படும் 3 கிலோகிராம் இறைச்சி நேற்று மீட்கப்பட்டது.

நகரப் பொதுச் சுகாதார பரிசோதகர் பி.தளிர்றாஜ் அதைக் கண்டறிந்து மீட்டார்.

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டின்படி மரக்கறி விற்பனைப் பிரிவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அது மீட்கப்பட்டது.

அதை வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இறைச்சி வெட்டுவது, விற்பனை செய்வது அனைத்தும் உரிய விதிமுறைப்படி செயற்படுத்தப்பட வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது சட்டம். (4,9)

### சித்திரவதைகள் இடம்பெற்றுவரும்

# சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை வீடுகளுக்கு மத்தியில் அமைக்காதீர்!

### உடுவில் செயலகம் முன்பாக மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

யாழ்ப்பாணத்தில் பல சித்திரவதைக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை, பொதுமக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தப்பட்டது. சுன்னாகம் நகரப் பகுதி மக்கள் உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

சுன்னாகம் சந்திக்கு அண்மையில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணியில் பொலிஸ் நிலையம் அமைக்க ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:

"சுன்னாகத்தில் வெவ்வேறு இடங்களில் அரச காணிகள் உள்ள நிலையில் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் பொலிஸ் நிலையம் அமைப்பதை நாம் எதிர்க்கின்றோம். எமக்குப் பொலிஸ் நிலையம் தேவைதான். ஆனால் சித்திரவதைகள் புரிந்த சுன்னாகம் பொலிஸாருக்கு மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் பொலிஸ் நிலையம் அமைப்பதன் ஊடாக நாங்கள் அச்சமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதனால் சுன்னாகம் பொலிஸ் நிலையம் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமையக்கூடாது.

தற்போது பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ள தனியார் காணிக்குப் பாதை வசதிகள் மிகக் குறைவாகவே உள்ளன. எனவே ஒதுக்குப் புறமாகக் காணி ஒன்றை அவர்களுக்கு வழங்கி பொலிஸ் நிலையம் அமையுங்கள். மக்கள் குடியிருப்புக்குள் பொலிஸ் நிலையம் வருவதை நாம் எதிர்க்கின்றோம்" என்றனர்.

இதை வலியுறுத்தி அவர்கள் உடுவில் பிரதேச செயலரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.

இது தொடர்பில் உடுவில் பிரதேச செயலர் எஸ். ஜெயகாந்த் தெரிவித்ததாவது:

பொலிஸ் திணைக்களம் தனியார் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைக்க உத்தேசித்துள்ளது. தற்போது பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே செயற்படமுடியும். இது தொடர்பில் யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் பேசியே முடிவெடுக்க முடியும் - என்றார்.



சுன்னாகம் பொலிஸார் சில வருடங்களுக்கு முன்னர் மாவீரர் வாரத்தில் 5 பேரைக் கைது செய்து அவர்களுக்குச் சித்திரவதை செய்திருந்தனர். சித்திரவதையின் உச்சமாக ஒருவர் உயிரிழந்தார். சட்டச் சிக்கலிலிருந்து தப்பிக்க, குறித்த சந்தேகநபர் பொலிஸாரிடமிருந்து தப்பியோடி கிளிநொச்சியிலுள்ள குளம் ஒன்றில் குதித்து உயிர் மாய்த்தார் என்று சுன்னாகம் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கையிட்டு சம்பவங்களை முடிமறைத்திருந்தனர். அந்தக் காலம் மகிந்த ராஜபக்ச அரசதலைவராக இருந்த காலம்.

ஏனைய சந்தேகநபர்களுக்கு இவை தெரிந்திருந்தபோதும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக வாய்திறக்கவில்லை. மகிந்த பதவியிலிருந்து துரத்தப்பட்ட பின்னர் சந்தேகநபர்கள் இந்த விடயத்தை மல்லாகம் நீதிமன்றில் வெளிக்கொணர்ந்திருந்தனர். அது பற்றிய விசாரணைகள் நடத்தப்பட்டு சித்திரவதைகள் செய்த பொலிஸார் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை நடத்திக் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டுக் கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சித்திரவதை மற்றும் சித்திரவதையின் பின்னரான கொலையை அவர்கள் புரிந்திருந்தனர்.

இதுதவிர, சில வாரங்களுக்கு முன்னரும் அடையாள அட்டை தொடர்பிலான விவகாரத்தில் ஒருவரைக் கைது செய்த சுன்னாகம் பொலிஸார் அவரைப் பொலிஸ் நிலையத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டுச் சித்திரவதை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று கோப்பாய் பொலிஸ் நிலையத்திலும் கஞ்சாவுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டி ஒருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தாது சித்திரவதை செய்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (4,8)



# நம்பிக்கைத் துரோகத்தின் மறு உருவமே சிறிசேன!

### யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 11

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனநாயகத்தை மீறிவிட்டார். ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய அரசு உருவாக வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாண தபால் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம்காலை இளைஞர்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'அரச தலைவரே! இது எங்கள் நாடு. ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், நம்பிக்கைத் துரோகத்தின் மறு உருவம் சிறிசேன' என்று எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாகச் சென்று பொதுமக்களிடம் கையெழுத்துச் சேகரித்தனர்.

இலங்கையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமை அமைச்சராக இருந்த ரணிலைப் பதவி நீக்கிவிட்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்திருந்தார். இதனால் நாட்டில் அரசியல் நெருக்கடி - குழப்பம் உருவாகியிருக்கிறது. அது இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ரணில் ஆதரவு அணியினரும் மகிந்த ஆதரவு அணியினரும் நாடளாவிய ரீதியில் பல போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். (4,8)

# இருவேறு போராட்டங்களால் மக்கள் மீது சீறிய பொலிஸார்

யாழ்ப்பாணம், டிசெ. 11

உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இருவேறு போராட்டங்கள் நேற்றுக்காலை இடம்பெற்றன. அதனால் அங்கிருந்த பிறிதொரு மக்கள் கூட்டம் மீது சுன்னாகம் பொலிஸார் சீறிப் பாய்ந்தனர்.

புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஜே/208 கிராம அலுவலர் திடீரென்று இடமாற்றம் செய்யப்பட்டார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் பிரதேச செயலரைச் சந்திக்க செயலக வளாகத்துக்குள் சென்றனர்.



அங்கு சுன்னாகம் பொலிஸார் வந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்துகின்றனர் என்று நினைத்து, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை உடனடியாக வளாகத்துக்குள்ளிருந்து வெளியேறுமாறு கடும் தொனியில் எச்சரித்தனர்.

அந்தநேரம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்னொரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர். இதனை அவதானித்த புலனாய்வு அலுவலர், சுன்னாகம் பொலிஸாருக்கு எதிரான போராட்டம் உள்ளே நடக்கவில்லை. வெளியேதான் நடக்கிறது என்று சீருடையில் நின்ற பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். அதன்பின்னரே உள்ளே போராட்டத்தில் ஈடுப்பட்டவர்களைப் பொலிஸார் பொறுமையாக நின்று அவதானித்தனர். பின்னர் வெளியே சென்றனர்.

கிராம அலுவலரை இடம்மாற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராடியவர்கள் அதன் பின்னர் போராட்டத்தை நிறைவு செய்து சென்றனர். (4,8)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பொலிஸ் துறையில் மீள் கட்டுமானம் அவசியம்

சுன்னாகத்தில் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் பொலிஸ்நிலையம்அமைக்கவேண்டாம்என்றுவலியுறுத்திப் பொதுமக்களில் சிலர் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அமைதியானவகையில்நடந்தஇந்த ஆர்ப்பாட்டம் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு குறித்துப் பொலிஸார் மீளாய்வு செய்வதை வலியுறுத்தி நிற்கின்றது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பவர்களாகப் பொலிஸாரே அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் பொதுமக்களின் சட்டபூர்வப் பாதுகாப்பாளர்கள் அவர்களே. திருட்டு, கொள்ளை, அச்சுறுத்தல், கொலை, வன்செயல்என்று எந்தப்பிரச்சினையாக இருந்தாலும்தீர்வு தேடிப் பொலிஸாரிடமே சென்றாகவேண்டும். வேறு வழியில்லை. வேலிச்சண்டையா, அடிதடியா, வாள்வெட்டா, பகிடி வதையா, எது நடந்தாலும் பொலிஸாரிடம்தான் முதலில்உதவிக்குஓடியாகவேண்டும். இப்படி மக்களுக்கு ஆபத்தாந்தவர்களாகஇருக்கவேண்டியவர்களாகப்பொலிஸாரே உள்ளனர்.

எனவே இந்த இருதரப்பினருக்கும் மிகவும் நெருக்கமான அந்நியோன்னியமான நட்பு இருக்கவேண்டியது முக்கியம். இதனாலேயே காவல்துறை உங்கள் நண்பன் என்கிற முழக்கம் முன்வைக்கப்படுகின்றது. காவல்துறை உங்கள் நண்பன்என்று மக்களுக்குச்சொல்ல வேண்டியநிலையில் தான்பொலிஸாரின்நடவடிக்கைகள்அமைந்திருக்கின்றன என்பதுதான் பெரும் துன்பியல். அதன் ஒரு வெளிப்பாடாகவே எமக்கு நெருக்கமாக இருக்காதே தள்ளியிரு என்று மக்கள்பொலிஸாருக்கு எதிராகப் போராட்டம் நடத்த முற்பட்டிருக்கும நிலை.

பொதுமகன்ஒருவன்தனது பாதுகாப்புக்கும்சட்டம்ஒழுங்குக்கும் பொலிஸாரையே நம்பி இருக்கவேண்டிய பொறிமுறைக்குள்இருந்தாலும்வடக்கில்இந்த இருதரப்பினருக்கும்இடையிலானஉறவுபோற்றப்படும்விதத்தில்இல்லை என்பது கண்கூடு.

இந்த இரு தரப்பினருக்கும் இடையிலான உறவை மிக மோசமாகப்பாதித்தத்தில்போருக்குப்பெரும்பங்குண்டு. போர்க்காலம்முழுவதும்பொலிஸார்சிங்களப்பொலிஸாராகவே நடந்துகொண்டனர் என்பதும் சிங்களவர்கள் மட்டுமே மிகப் பெரும்பான்மையாகப் பொலிஸ் துறையில் உள்வாங்கப்பட்டனர் என்பதும் கடந்துபோன உண்மைகள். தமிழர்களை இனக்குரோதத்தோடு அவர்கள் நடத்தியமை, பயங்கரவாதத் தடுப்பு என்கிற பெயரில் அவர்கள் மேற்கொண்ட அட்டூழியங்கள் என்பன தமிழ் மக்கள் மனதில் இருந்து இன்னும் அகலாதிருக்கும் வடுக்கள்.

போர் முடிந்த பின்னராவது இந்த அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும். அது நடக்கவில்லை என்பதையே நேற்றைய போராட்டம் எடுத்துக்காட்டுகிறது. என்னதான் பொலிஸாரின் தேவையின்றி வாழமுடியாது என்றாலும் பொலிஸாரைப் பார்த்துத்தமிழ் மக்கள் பயப்படும் நிலையே தொடர்கின்றது என்பதை இந்தப் போராட்டம் புரிய வைக்கிறது. அப்படி மக்கள் அச்சப்படும் விதத்தில்பொலிஸாரின்நடவடிக்கைகள்அமைந்திருக்கின்றன என்கிற உண்மையை இந்தப் போராட்டம் உணர்த்துகின்றது.

சித்திரவதைகள்நடக்கும் ஒரு பொலிஸ் நிலையத்தை குடியிருப்புக்களுக்கு மத்தியில்அமைக்காதீர்கள்என்கிறார்கள் மக்களில் ஒரு பகுதியினர். எங்கள் அருகே இருங்கள், எங்களுக்குப் பாதுகாப்பாக இருங்கள் என்று பொலிஸாரை வருந்தி அழைக்கவேண்டிய மக்கள், எங்கள் குடியிருப்புகளுக்கு எட்டியே இருங்கள் என்று சொல்லும் நிலை ஏன் வந்தது என்று சீர்தூக்கிப் பார்த்துதமது நடவடிக்கைகளைப் பொலிஸார் மீளாய்வு செய்யவேண்டியதையும் பொலிஸ் துறையை மீள்கட்டுமானம் செய்வதற்கான அவசியத்தையும் இந்தப் போராட்டம் உணர்த்தி நிற்கின்றது. ஆட்சியாளர்கள் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் இதை உணர்ந்து கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.



இரணைமடுக்குளம் புலிகளின் முக்கிய மான ஒரு மையாமக இருந்தது. புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கும் முக்கியமானதாகக் காணப்பட்டது. தற்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு முக்கியமதானதாக இருக்கிறது. பிற்பட்டவர்களின் நோக்கு நிலைகளில் கிளிநொச்சி மக்களின் விவசாயம் என்பதாக அரசியலே முன்னி றுத்தப்படுகிறது.

ந.ஜெகதீஸ்வரன்

போர்க் காலத்தில், இரணைமடுக் குளக்கட்டானது பலமிழந்து, உடைப்பெடுக்கும் நிலையில், 20அடிக்குச் சற்று அதிகமான கொள்ளளவு உடைய தண்ணீரையே மறித்து வைக்கக்கூடியதாக இருந்தது. அதன் கட்டுப் பலமிழந்து இருந்ததால், அது தாங்கக்கூடியளவு நீர் நிறைந்ததும் உடனடியாக வான் கதவுகளைத் திறந்து விடுவதே நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு அப்போது இருந்த ஒரே தீர்வு. ஒரு பைக்கெற்றுச் சீமெந்தைக்கூடப் பெற முடியாத நிலையில் பொருளாதாரத் தடை இறுக்கமாக இருந்தது. மழை அதிகமாகப் பெய்து நீர்க் கொள்ளளவு அதிகரித்திருந்த ஒரு சூழலில் குளத்தின் வான் கதவை உடனடியாகத் திறந்து நீரை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், வான் கதவின் அடியில் சங்கிலியுடன் இணைக்கப்பட்டிருந்த, இரும்பு ஆணி ஒன்று கழன்று விட்டதால் வான் கதவைத் திறப்பது சாத்தியப்படவில்லை.

### பெண் போராளிகளின் துணிகரச் செயல்

வான்கதவைத் திறப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் பல முயற்சிகளை முன்னெடுத்தும் அது முடியாமல் போனது. இதனால், விடுதலைப் புலிகள் அமைப்பின் கடற்புலிகளிடம் சுழியோடி ஒருவரை இதைச் சீர்செய்யும் வேலையைச் செய்து தருவதற்குத் தந்துதவுமாறு கோரப்பட்டது. கடற்புலிகளும் அதை ஏற்று ஒரு சில நிமிடங்களில் இரண்டு பெண் போராளிகளை அனுப்பியிருக்கிறார்கள். அதில் ஒரு பெண் போராளி நீச்சல் உபகரணங்களை அணிந்து கொண்டு நீரில் குதித்து உள்ளே போய்ப் பார்த்துவிட்டு வெளியே வந்து குறிப்பிட்ட ஆணிதான் வான் கதவைத் திறக்கமுடியாமலிருப்பதற்குக் காரணம் என்பதை உறுதி செய்து, நீர்ப்பாசனத் திணைக்களத்தின ரைக் கொண்டு அந்த ஆணியை உடனடியாகத் தருவித்து மறுபடியும் நீருக்குள் புகுந்து சென்று சில நிமிடங்களில் அதைப் பூட்டிச் சீர் செய்திருந்தார். உடனடியாக வான்கதவைத் திறந்து பெருக்கெடுத்து வரும் தண்ணீரில் இருந்து குளக்கட்டுப் பாதுகாக்கப்பட்டது. அன்று கடற்புலிகளின் சுழியோடிப் போராளிகள் அந்தப் பணியை நிறைவேற்றியதால் இரணைமடுக்குளக் கட்டில் ஏற்படவிருந்த இடர் தடுத்து நிறுத்தப்பட்டது.

### போராட்ட வரலாற்றில் இரணைமடு

தமிழீழப் போராட்ட வரலாற்றில் இரணைமடுக்குளத்துக்கும் அதை அண்மித்த பெருங்காட்டுக்கும் முக்கிய இடமுண்டு. புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியாரும் கொழும்பு வானூர்தி நிலையம் ஊடாக உள்நாட்டுக்குள் கால் பதிக்க முடியாத நிலை அப்போது இருந்தது.

அந்தச் சூழலில் ஐரோப்பாவில் இருந்து அவர்கள் இருவரும் மாலைதீவுக்குச் சென்று, அங்கிருந்து தண்ணீரில் இறங்கக்கூடிய சீப்பிளேன் ஒன்றின் உதவியுடன் இரணைமடுக்குளத்தில் வந்திறங்கினார்கள். அவர்கள் தரையிறங்கிய பகுதிக்கு விரைந்த தலைவர் பிரபாகரன் படகிலிருந்து கைலாகு கொடுத்து அவர்களைக் கரையேற்றியிருந்தார்.

விடுதலைப் புலிகளின் இரகசிய விமானத் தளமும் இரணைமடுக் காட்டுப் பகுதிக்குள்ளேயே உருவாக்கப்பட்டிருந்தது என்பதும் பின்னர் வெளிப்பட்ட விடயங்களாக இருக்கின்றன. இப்படியாகப் புலிகளால், கேந்திர முக்கியப்படுத்தப்பட்டிருந்த இரணைமடுக் காட்டையும் குளத்தையும் புலிகளிடமிருந்து மீட்டமை என்பது சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை சாதனைதான்.

### போரின் பின்னரான மாற்றம்

2010ஆம் ஆண்டின் பின் இரணைமடுக்குள விடயத்தில் பல புதினங்கள் நடந்தேறின. மகிந்த அரசு போரை வெற்றி கொண்ட பிறகு முதல் தடவையாக அதைச் சூழ்ந்த பிரதேசங்களில், நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு 2011ஆம் ஆண்டு அறுவடை விழா ஒன்று கிளிநொச்சி- உருத்திரபுரத்தில் நடத்தப்பட்டிருந்தது. அந்த விழாவுக்கு அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச வருகை தந்தார். இரண்டு கிலோ மீற்றர்கள் நீளமுடையது இதன் கட்டு. நீரேந்து பகுதி, நீள் வட்ட அமைப்பில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள்ளே காணப்படுகின்றது. இதன் கொள்ளவான 36அடி நீரைத் தேக்க முடியாத நிலை நீண்ட காலமாகக் காணப்பட்டு வந்தது. தற்போது அந்த இலக்கு நிறைவு செய்யப்பட்டு அதற்குரிய வான் கதவை அரச தலைவர் மைத்திரிபால சிறி



# தேசிய பரிமாணமாகியுள்ள விடயம் இது!

சேன திறந்து வைத்துள்ளார். வான் கதவைத் திறந்து விட்டு அங்கு உரையாற்றிய அரச தலைவர் "வடக்குக்கான மிகப் பெரிய நீர்த் தேக்கத்தை மக்களிடம் கையளித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சூழலை ஏற்ப டுத்தித் தந்த முப்படை களுக்கும் நன்றிகூறுவ தற்குக் கடமைப்பட்டுள்ளேன்." எனவும் "இந்த முழுமைப்படுத்தப்பட்ட இரணைமடு நீர்த்தேக்கமானது வடக்குக்கான நல்லிணக் கத்தைப் பலப்படுத்த உதவும்" என்றும் குறிப் பிட்டிருந்தார்.

**மக்களைக் கவனிக்காமல் அரசியல் நிகழ்த்தப்படுகிறது**

இரணைமடுக்குளம் புலிகளின் முக்கிய மான ஒரு மையமாக இருந்தது. புலிகள் அழிக்கப் பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்ட மைப் புக்கும் ஏனைய தமிழ்த் தலைவர்களுக்கும் முக்கியமானதாகக் காணப்பட்டது. தற்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு முக்கியமதானதாக இருக்கிறது. பிற்பட்ட வர்க ளின் நோக்கு நிலைகளில் கிளிநொச்சி மக்க ளின் விவசாயம் என்பதாக அரசியலே முன்னி றுத்தப்படுகிறது.

மாத்தளை - மொறஹாகந்த நீர்த் தேக்கத்திலி ருந்து வறட்சியான காலங்களில் இரணைம டுக்குளத்துக்கு நீரை ஊட்டுகின்ற வேலைத் திட்டம் நடைபெற்று வரும் நிலையில், இர ணைமடுவின் வான் கதவுகளைத் தானே வந்து திறந்து, அதற்கான சான்றுகளையும் நிறுவிவிட்டுச் சென்றுள்ளமையானது இது வரை மாகாண நீர்த்தேக்கமாக இருந்த இர ணைமடுக் குளத்தைத் தேசிய நீர்த் தேக்க மாகத் திரு நிலைப்படுத்திய தாக எடுத்துக்கொள்வதற்கே வகை செய்கிறது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த சந்திரகுமார், டக் ளஸ் தேவானந்தா ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்த சம்பந்தர், சிறீதரன், ஐங்கர நேசன் ஆகியோரும் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக் னேஸ்வரன் எனப்பலரும் இரணை மடுவின் இந்த வான் கதவுகளை 2010ஆம் ஆண்டின் பின்பான காலத்தில் தமது அரசியல் தேவைக ளுக்குப் பயன்படுத்தியிருந்தனர். தற்போது அரச தலைவர் இந்த வான்கதவுகளைத் திறந்து விட்டது என்பது வேறொரு பரிமாணத்தை அதாவது தேசிய பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது.

போர் இடம்பெற்ற காலத்தில், இந்தக் குளத்தின் வான்கதவுகளை, பிரதி நீர்ப்பாசனப் பணிப்பா ளர், நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமக்காரர் அமைப்பினர் எனப் பலரும் அவதானித்து அதற்குப் பொறுப்பான ஊழியர்களால் அந்தக் கதவுகளைத் திறந்து விடுவதே வழமையாக இருந்து வந்தது.

அப்போது அவர்கள் மிகச் சாதாரணமாக மேற்கொண்ட பணியைத் தற்போது மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச தலைவர் எனப் படம் காட்டித் திறந்து வைக்கப் பட்டுள்ளது. எது எவ்வாறிருப்பினும் அரச தலைவர் குள வேலையை முழுமைப்படுத்தி மக்களிடம் கையளித்தது என்பது தேசிய நீர்ப் பாச னத் திட்டத்துக்குள் உள்ளடக்கப்படவிருக் கும் பெரிய நடவடிக்கை ஒன்றின் முதல் படி என்றுநோக்கினல், அது தவறில்லை. இர ணைமடுக்குளம்கிளிநொச்சிவிவசாயிகளுக்கு நீர் வழங்குவது என்பதற்கு அப்பால், ஓர் அர சியல் குளமாகவும் மாறியுள்ளது.





**ஈழமக்கள் ஜனநாய கக் கட்சியைச் சார்ந்த சந்திரகுமார், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்த சம்பந்தர், சிறீதரன், ஐங்கரநேசன் ஆகி யோரும் வடமா காண முன்னாள் முதலமைச்சர் விக் னேஸ்வரன் எனப்ப லரும் இரணைமடு வின் இந்த வான் கதவுகளை 2010 ஆம் ஆண்டின் பின்பான காலத்தில் தமது அரசியல் தேவைகளுக்குப் பயன்படுத்தியிருந்த னர். தற்போது அரச தலைவர் இந்த வான்கதவுகளைத் திறந்து விட்டது என்பது வேறொரு பரிமாணத்தை அதாவது தேசிய பரிமாணத்தைப் பெற்றிருக்கிறது.**






## ஆசிரியருக்கான கடிதம்

# கடற்றொழிலாளர்களுக்குக் கருத்தரங்குகள் வழங்குவார்களா...?

1964ஆம் ஆண்டு வெளிவந்த தென்னிந்தியத் திரைப்படம் படகோட்டி. எம்.ஜீ.ஆர் நடித்திருந்த இந்தப் படம் பாமர மக்க ளான மீனவச் சமுதாயத்தினர் மத்தியில் பெருமளவு பேசப் பட்ட படம். இப்படிப்பட்ட படங்கள் பலவற்றில் நடித்தபிறகு அடிமட்ட மக்கள் பலரைக் கவர்ந்த நாயகனாக எம்.ஜீ.ஆரின் புகழ் மேலும் மேலோங்கியது. மீன் பிடித் தொழிலில் ஈடுபடு கின்ற மீனவர்களில் அதிகமானவர்கள் இன்றுள்ள மற்றைய தொழில் துறையினருடன் ஒப்பிடுகையில் சமூக அளவுகோள் கள் சிலவற்றில் இன்றும் பின்தங்கியவர்களாகவே இருக்கின் றனர். ஆனால், ஆரம்ப காலங்களைப் போலல்லாது பிற்கா லங்களில் மீனவர்களின் நலன்பேணவென்று பல அமைப் புக்கள் செயற்பட்டு வருகின்றன. அரச வேலைத்திட்டங்களா கக் கடமைபுரிகின்றன. ஆனால், மீனவர்கள் பலருக்கோ இவை குறித்த விவர, விளக்கங்கள் தெரிந்திருப்பதில்லை. அத்தோடு மீனவர்களை நேரடியாக அணுகி இந்த அமைப் புக்களும் செயற்படுவதில்லை. சமாசங்கள், சங்கங்கள் என்று கிராம, பிரதேச ரீதியாக இவை மீனவர்களை அணுகினாலும் மீனவர்களின் 'தலைமை' என்கிற பெயருடன் இருக்கின்ற '(மு)தலைகள்' அவற்றை மீனவர்கள் மத்தியில் சரிவரக் கொண்டு சேர்ப்பதில்லை. ஒரு மீனவக் கிராமத்துக்கு அண் மையில் சென்றிருந்தேன். "இந்தக் கடின தொழிலை உடல் இயலாமல்போன பின்பு எப்படிச் செய்ய முடியும்?" என்று அங்கு சந்தித்த ஒரு மீனவரைக் கேட்டேன். "எங்கள் உழைப் பிலிருந்து சிறிய தொகையைச் சங்கக் காரர் கழிக்கின்றனர். அது பென்சனாம்! பின்னாளில் எடுக்கலாம்! என்கிறார்கள் " என்று இழுத்தார். உறுதியாகச் சொல்வதற்கு அவருக்கு விடய, விளக்கங்கள் தெரியவில்லை. அதுபற்றி அவர்களுக்கு மேல திகமாக எதுவும் தெரியவில்லை என்பதும் தெரிந்தது. மீன வர்கள் ஓய்வூதியம் என்றொரு பகுதி நிதியம் இருப்பதாக அந்தக் கிராமத்தில் சந்தித்த மீனவர்கள் பலரும் குறிப் பிட்டார் கள். கடும் காற்றுக் காரணமாகத் தன்னுடைய படகு பல முறை கடலுள் மூழ்கப் பார்த்ததாகச் சிறிய படகு ஒன்றில் தொழிலில் ஈடுபடுகின்ற ஒருவர் குறிப்பிட்டார். உயிரைப் பிடித்துக்கொண்டு தொழில் செய்வதாக ஆதங்கப்பட்டார். ஏன் பெரிய படகு ஒன்றை வாங்கலாம்தானே என்று கேட்டபோது, வாங்குவதற் காகத் தான் கடன் பட்டாவது பணம் சேர்ப்பதற்குத் தயாராக இருப்பதாகவும், ஆனால், பெரிய படகு செய்வதற்கு அனும தியில்லை என்றும், அதற்குப் பதிவுப் புத்தகம் தரமாட்டார்கள், என்றும் பல காரணங்களை அவர் அடுக்கினார். தொழிலாளி ஒருவரின் வாழ்வாதாரத்துக்கு உதவுகின்ற வகையில் எந்த அமைப்புக்களும் செயற்படவில்லை என்பதும், அல்லது அவை மீனவர்களை அணுகும் முறையில் குறைபாடு இருப் பதுவுமே அந்தக் கிராமம் உதாரணத்துக்கு ஒன்றாக எடுத்து ரைத்தது. இப்படிப்பட்ட மீனவர்களுக்குச் சரியான வழிகாட்டல் களும், நெறிப்படுத்தல்களும் செய்து அவர்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்துவதற்குப் பொறுப்புடையவர்கள் இனி யாவது வேகமெடுக்க வேண்டும்.

சகுந்தலா - யாழ்ப்பாணம்

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக் கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவ ராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவ ரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.




## பாகிஸ்தானில் 19ஆவது 'சார்க்' இந்தியா அதிகாரி வெளிநடப்பு

இஸ்லாமபாத்.டிசெ.11
பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமா பாத்தில் சார்க் மாநாடு நடைபெறுகிறது. அந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த இந்தியத் தூதரக அதிகாரி வெளிநடப்புச் செய்துள்ளார்.

சார்க் என்று சுருக்கமாக அழைக்கப்படும் தெற்காசியக் கூட்டமைப்பு மாநாட்டை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அதன் உறுப்புநாடுகளில் ஒன்று பொறுப்பேற்றுநடத்துவதுவழமையாகஇருக்கிறது. அதன்படிஇந்தஆண்டு பாகிஸ்தான்தலைநகர்இஸ்லாமாபாத்தில்சார்க்மாநாடுநடைபெறுகின்றது. பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரக அதிகாரி சுபம் சிங் இதில் கலந்து கொண்டார்.

அப்போது, பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பகுதியின் அமைச்சர் சவுத்ரி முஹம்மது சயீத் இந்த மாநாட்டு அரங்கத்தில் இருந்தார். பின்னர் மாந்நாட்டில் இருந்து சுபம் சிங் வெளிநடப்புச் செய்தார். காஷ்மீர் பகுதி அமைச்சர் சவுத்ரி முஹம்மது சயீத் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்தியத் தூதரக அதிகாரி சார்க் மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தமாநாட்டில்பங்கேற்குமாறுஇந்தியத்தலைமைஅமைச்சர்மோடிக்குப் பாகிஸ்தான் அனுப்பியிருந்த அழைப்பை இந்தியா நிராகரித்தமையும், 2016ஆம் ஆண்டு பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் சார்க் மாநாடு நடைபெற இருந்தபோது, அதை இந்தியா புறக்கணித்ததும், அந்த அமைப்பில் பங்கேற்றுள்ள வங்காளதேசம், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் பங்கேற்க மறுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சீனத் தொழிலதிபரின்

## கனடா மீது சீனா சீற்றம்



ஒட்டொவா.டிசெ.11
சீனாவின் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஒருவடைய மகள் கனடாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படவிருக்கிறார். இந்த நடவடிக்கை, சீனாவுக்குக் கோபத்தை ஏற்படுத்திஉள்ளது. அவரைஉடனடியாகவிடுதலை செய்யாவிட்டால், கடும்விளைவுகளைச்சந்திக்க நேரிடும் என்று சீனா, கனடாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.


சீனாவைச்சேர்ந்தபன்னாட்டுத்தொலைதொடர்பு நிறுவனம் ஹுவாய். இந்த நிறுவனத்தின் உரிமையாளரானரென்ஜெங்பெய்யினுடையமகள், மெங்வான்ஜவ். இவர் அந்த நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக இருக்கிறார். கனடாவின் வான்கூவர் நகரில் இந்த மாதம் முதலாம் திகதியன்று கைது செய்யப்பட்டுள்ளார். இதுபற்றியதகவலைத்தற்போதுதான்கனடாவின்நீதித் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அவரைஅமெரிக்காவுக்குநாடுகடத்துமாறுஅமெரிக்கா கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதே நேரத்தில் மெங்வான்ஜவ்எதற்காகக்கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது பற்றிய எந்தவித விவரங்களும் வெளியிடப்படவில்லை.

இதுசீனாவுக்குக்கோபத்தைஏற்படுத்திஉள்ளது. கனடாவின் ஒட்டவா நகரில் உள்ள சீனத் தூதரகம்உடனடியாகமெங்வான்ஜவ்வைவிடுதலை செய்ய வேண்டும் என்று கனடாவை வலியுறுத்தி உள்ளது. இத்தகையகைதுநடவடிக்கையை கடுமையாக எதிர்ப்பதாகவும், இது மனித உரிமையை மிக மோசமாகப் பாதிப்பதாக அமைந்துள்ளதாகவும் சீனத் தூதரகம் கூறியுள்ளது.

"அமெரிக்கா சொன்னதற்காக, மெங்வான்ஜவ் கைது செய்யப்பட்டது. அவரது சட்டபூர்வ உரிமைகளை மீறிய நடவடிக்கை ஆகும். இதுசட்டத்தைபுறக்கணித்தசெயல். அர்த்தமற்றது. கைது செய்யப்பட்டுள்ளவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவரது சட்டப்பூர்வ உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். இல்லாவிட்டால், கடும் விளைவு களுக்குக் கனடா பொறுப்பேற்கவேண்டிவரும்"எனவும் கனடாவுக்குச் சீனா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில் வான்கூவர் நீதிமன்றில் மெங்வான்ஜவ், முன்னிலைப்படுத்தப்பட்டு அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவது தொடர்பாக விசாரணை நடைபெற்றுள்ளது. இதன்போது மெங்வான்ஜவ் சார்பான மனுவும், பிணைமனுவும்விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**
ஈரான் மீதும் வடகெ
பொருளாதாரத்தடை
தடைகளை ஹுவ
அமெரிக்கா கருதுகிற
இது தொடர்பாக அமெ
வந்தது. இந்த நிலை
கைது செய்யப்பட்டுள
எனவே அவர் இந்த
செய்யப்பட்டிருப்பார்



## ட்ரம்புடன் கருத்து வேறுபாடு பதவிவிலகுகிறார்ஜோன்கெல்லி





வோஷிங்டன்.டிசெ.11
வெள்ளை மாளிகையில் ட்ரம்ப்பின் நிர்வாகத் தலைவராக இருந்துவருகிற ஜோன் கெல்லி, ட்ரம்ப் உடனான கருத்து வேறுபாட்டால் பதவி விலகுவதற்கு முடிவுசெய்துள்ளார்.

அமெரிக்க அதிபர் வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் அதிபர் ட்ரம்ப்பின் நிர்வாகப் பணியாளர்களின் தலைவராக இருந்து வருகிறார்ஜோன்கெல்லி. அவர்இந்தமாதத்தின் இறுதியில் பதவி விலகுகிறார்.

முன்னாள் கடற்படை அதிகாரியான ஜோன் கெல்லிக்கும் ட்ரம்ப்புக்கும் இடையே கருத்து வேறுபாடு இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்தன. அவர்பதவிவிலகுவதற்கும்அழுத்தம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் ஜோன் கெல்லி தனது பதவி விலகலை அறிவித்துள்ளார். அமெரிக்க அதிபராகப் பராக்ஒபாமா பதவி வகித்தபோது அந்த நாட்டின் அயலுறவுத் துறைக்கான ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருந்தவர் மிரா ரிக்கார்டெல்.

அமெரிக்க அதிபரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஜான் போல்ட்டன் என்பவருக்கு உதவியாக தேசிய பாதுகாப்புத் துணை ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்தநிலையில்பின்னர்அவர்பதவியிலிருந்துநீக்கப்பட்டிருந்தார்.

அவரைப் பதவியிலிருந்து நீக்கியதற்குக் காரணம் அமெரிக்க அதிபரின் மனைவியான மெலனியா ட்ரம்ப் என்று விமர்சனங்கள் எழுந்திருந்தமையும் இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கது.



## பிரான்ஸில் தொடர்கிறது போராட்ட
## 1,700 பேர் கைது 179 பேர் காய

பாரிஸ்.டிசெ.11
எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்துப் பிரான்ஸில் நேற்று முன்தினம்நடந்தபோராட்டத்தில்ஈடுபட்ட ஆயிரத்து700பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். அதன்போதான மோதலில்179 பேர் காயமடைந்துள்ளனர்.

பிரான்ஸில்அண்மையில்எரிபொருள்மீதானவரிஉயர்த்தப்பட்டது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கடந்த வாரங்களாகத் தலைநகர் பாரிஸ்உட்பட பல்வேறு நகரங்களில் இலட்சக்கணக்கானோர் மஞ்சள்அங்கியை அணிந்துபோராட்டத்தில்ஈடுபட்டனர். பலஇடங்களில் வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இதையடுத்து வரிஉயர்வைநிறுத்திவைப்பதாகஅரசுஅறிவித்தது. எனினும், மேலும் பல சலுகைகளை அறிவிக்கக் கோரிப் பாரிஸ் உள்ளிட்ட நகரங்களில் மிகப்பெரிய அளவில் போராட்டம் நடைபெறும் என்று போராட்டக்காரர்கள் அறிவித்தனர். இதையடுத்து புகழ்பெற்ற சுற்றுலா தலமான ஈபிள் கோபுரம், அருங்காட்சியகங்கள், கடைகள் உள்ளிட்டவை நேற்று மூடப்பட்டிருந்தன. பலர் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டனர்.


ஆனாலும்திட்டமிட்டபடி'மஞ்சள்ஜாக்கெட்'அணிந்துஆயிரக்கணக்கானோரர் போராட்டத்தில்ஈடுபட்டனர். போராட்டத்தை ஒடுக்குவதற்குப் பொலிசார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தண்ணீரைப் பீய்ச்சிஅடித்தனர். இதனால்இருதரப்புகளுக்கும்இடையேமோதல் ஏற்பட்டது. நள்ளிரவு வரை போராட்டம் நீடித்தது.

நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்து 700 பேரைப் பொலிசார்கைதுசெய்தனர். பாரிஸில்மட்டும்920பேர்கைதாகினர். மோதலில்179 பேர் காயமடைந்தனர். பிரான்ஸில் நேற்று முந்தினமும் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடை
னும்அருங்காட்சியகங்கள், ஈபிள்டவர்மற்றும்வர்த்
கள் வழக்கம்போல் திறக்கப்பட்டிருந்தன.

**பெல்ஜியத்துக்கும் பரவியது**
பிரான்ஸைப்போல 'மஞ்சள் ஜாக்கெட்' அணிந்த நூற்
னோர் பெல்ஜியம் தலை நகர் பிரஸல்ஸ் நகரில், அ
தலைமை அமைச்சர் சார்லஸ் மிச்செல் பதவி வி
போராட்டம் நடத்தியுள்ளனர்.
இதுபோல நெதர்லாந்திலும் போராட்டம் நடைபெற்ற
போராட்டத்துக்கானகாரணம்தெரியவில்லை. பிரான்
பெல்ஜியம், நெதர்லாந்தில் எரிபொருளுக்கான வரி
வில்லை. அரசின் தவறான கொள்கைகளைக் கண்
போராட்டம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.



# ன் மகள் கனடாவில் கைது





னி
மீதும் வடகொரியா மீதும் அமெரிக்கா
தாரத்தடைகளைவிதித்துள்ளது. இந்தத்
ளை ஹூவாய் நிறுவனம் மீறியதாக
கா கருதுகிறது.
டர்பாக அமெரிக்கா விசாரணை நடத்தி
இந்த நிலையில்தான் மெங்வான்ஜவ்
ய்யப்பட்டுள்ளார்.
அவர் இந்த விவகாரத்தில்தான் கைது
பட்டிருப்பார்எனஊகிக்கப்படுகிறது. அமெ

ரிக்காவின்பொருளாதாரத்தடைகளைஹூவாய் நிறுவனம் மீறியதாக எழுந்துள்ள முறைப்பாடுகள் குறித்து அந்த நிறுவனம் மீது அமெரிக்கா விசாரணையைத் தொடங்கி உள்ளது என ஏப்ரல்மாதம்அமெரிக்காவின்'வால்ஸ்டிரிட்ஜர்னல்' என்கிற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.
ஏற்கனவே அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் பனிப்போர்நிலவிவந்தது. அதுவர்த்தகப்போராக மாறியது.
இதுஉலகளவில்தாக்கத்தைஏற்படுத்திஉள்ளது.

இந்தநிலையில், கடந்தமுதலாம்திகதிஆர்ஜென்ரீனாவின்தலைநகர்பியுனோஸ்அயர்ஸ்நகரில் 'ஜி20' மாநாட்டின் இடையே அமெரிக்க அதிபர் ட்ரம்பும், சீன அதிபர்ஜின்பிங்கும்சந்தித்துப்பேசினர்.
அதில் வர்த்தகப் போரை நிறுத்துவதற்கு உடன்பாடுஏற்பட்டது. இதன்படி, ஜனவரிமுதலாம்திகதி முதல் வரிவிதிப்புக்கள் அனைத்தும் முடிவுக்கு வரும்.
இது90நாள்களுக்குஇதுநீடிக்கும். அதற்குள்இரு தரப்புகளும் பேசி தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடவேண்டும்என்றுஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில்தான் மெங்வான்ஜவ் கைது செய்யப்பட்டிருக்கிறார்.



## ஐ.எஸ். ஆயுதாரிகளால் பிடித்துச்செல்லப்பட்டோர் கொலை!

திரிபோலி.டிசெ.11
லிபியாவில்கடந்த இரண்டுமாதங்களுக்கு முன்புகடத்திப்பணயக்கைதிகளாகவைத்திருந்த6பேரைஐ.எஸ். ஆயுததாரிகள் கொலை செய்துள்ளனர்.
லிபியாவில் முக்கிய நகரங்களை இணைக்கும் ஜாப்ரா மாவட்டம்ஐ.எஸ். அமைப்பின்கட்டுப்பாட்டில்இருந்தது. அந்தப்பகுதியைக்கடந்தஆண்டுஇராணுவம்கைப்பற்றியது.
ஐ.எஸ்அமைப்பினர்விரட்டியடிக்கப்பட்டனர். அதன்பின்னர் அந்தப் பகுதியில் அவ்வப்போது ஐ.எஸ். அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அந்த வகையில் ஒக்ரோபர் மாதம் ஜாப்ரா மாவட்டத்தின் புகா பகுதியில் ஐ.எஸ். ஆயுததாரிகள் திடீர்த் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதில் 5 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.
தாக்குதலுக்குப்பிறகு10பேரை அவர்கள்பிடித்துச்சென்றனர். அப்படிப்பிடித்துச்சென்ற10பேரில்6பேரை அவர்கள்கொலை செய்துள்ளனர்.



ட்டம்
யம்

கள்நடைபெற்றன. எனி
ற்றும்வர்த்தகநிறுவனங்


ணிந்த நூற்றுக் கணக்கா
நகரில், அந்த நாட்டுத்
பதவி விலகக் கோரிப்

நடைபெற்றது. எனினும்,
லைபிரான்ஸைப்போல,
கான வரி உயர்த் தப்பட
ளைக் கண்டித்து இந்தப்
து.




## ஆர்மீனியாவில் நாடாளுமன்றத் தேர்தல் தலைமை அமைச்சர் நிகோலுக்கு வெற்றி

யெரீவன்.டிசெ.11
துருக்கி, அசர்பஜன், ஈரான், ஜோர்ஜியாஆகிய நாடுகளுக்கு நடுவாக ஐரோ - ஆசியாவில் அமைந்துள்ள நாடு ஆர்மீனியா. அங்கு நேற்று முன்தினம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றிருந்தது.
அதில் அந்த நாட்டின் தலைமை அமைச்சராக இருந்துவந்த நிகோல் பஷின்யானின் கட்சி அமோகவெற்றிபெற்றது. இதன்மூலம்அவர்மீண்டும் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்கவுள்ளார். சோவியத்யூனியனில்இருந்து(தற்போதையரஷ்யா)பிரிந்தநாடுஆர்மீனியா.
இங்கு 30 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். ரஷ்யாவின் பாதுகாப்புடன்இந்தநாடுசெயல்படுகிறது. எனவே அதன் நெருங்கிய நட்பு



நாடாக இது திகழ்கிறது. இங்கு கடந்த 10 ஆண்டுகளாக அதிபராகஇருந்தசாக்ஷியானைபுரட்சி மூலம்பதவிநீக்கம்செய்துவிட்டு நிகோல்பஷின்யான்தலைமை அமைச்சராகியிருந்தார்.
இந்த நிலையில்தான் அங்கு நடைபெற்ற தேர்தலில் நிகோல் பஷின்யான் அமோக வெற்றி பெற்றிருக்கிறார். தேர்தலில் பதிவான வாக்குகளில் 70 சதவீதம் வாக்குகளை நிகோல் பெற்றுள்ளார்.
இவர் பத்திரிகையாளராக இருந்து அரசியலுக்கு வந்தவர். அமைதியான முறையில் புரட்சி நடத்தி ஆட்சியைப் பிடித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



நேபாளத்தைச் சேர்ந்த யக்யா பகதூர் கதுவால், தனது நாக்கால் மூக்கைத் தொட்டு, அத்துடன்முன்நெற்றியையும் தொடுகிறார். இதைச் சித்திரிக்கின்ற காணொலி இணையத்தில் வேகமாகப் பரவி வருகிறது. உலகிலேயே தன்னுடைய நாக்குத்தான் மிகவும் நீளமானது என்று கூறும் இவர் பாடசாலைப் பேருந்து ஓட்டுநராகப் பணிபுரிகிறார்.




## அறுவைச் சிகிச்சை மூலம் மனிதர்களுக்கு பன்றியின் இதயம்!

பெர்லின்.டிசெ.11
அறுவைச்சிகிச்சைமூலம்மனிதஇதயத்துக்குப் பதிலாகப் பன்றியின் இதயத்தைமனிதர்களுக்குப்பொருத்தும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதய நோய்கள் காரணமாக ஏராளமானோர் சாவடைந்து வருகின்றனர். குறிப்பாக மாரடைப்புமூலம்பலர்சாவடைகின்றனர்.
மருந்து, மாத்திரைகள் மூலம் அதற்குச்சிகிச்சைஅளிக்கப்பட்டுவருகிறது. ஆனால், இதய மாற்றுச் சிகிச்சை இதற்குச் சிறந்தது என நிபுணர்கள் கருதுகின்றனர். எனவே, மனித இதயத்துக்குப் பதிலாகப் பன்றியின் இதயத்தை மனிதர்களுக்குப்பொருத்தும் ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.
ஜேர்மனியின் முனிச் லூத்விக் மேக்சி மில்லியன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் இதுகுறித்த ஆய்வில்ஈடுபட்டுவருகின்றனர். முதற்கட்டமாக அவர்கள் பன்றியின் இதயத்தை எடுத்து 'பபூன்' இனத்தைச் சேர்ந்த 10 குரங்குகளுக்குப் பொருத்தினர். அதில் 5 குரங்குகள் நீண்ட நாள்கள் உயிர் வாழ்ந்தன. ஒரு குரங்கு 51நாள்களும், 2 குரங்குகள் 3 மாதங்களும், 2 குரங்குகள் 6 மாதங்களுக்கு மேலாகவும் உயிர் வாழ்ந்துள்ளன.
இதுஒருநல்லமுன்னேற்றம்என்றும் இந்தஆய்வைமேலும்மேற்கொள்வதற்கு யோசித்துள்ளதாகவும் இது வெற்றியளிக்கும்சந்தர்ப்பத்தில்மனிதர்களுக்கும்பன்றியின்இதயத்தைப் பொருத்தலாம் எனவும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பணத்தை வைத்து அரசியல்
பிணத்தை வைத்து அரசியல்
மதத்தை வைத்து அரசியல்
ஆகமொத்தம் இப்படி தான்
இலங்கை அரசியல்



# வலிகளுடையது உலகு...



பண்டிகை காலத்தில்
ஒன்லைன்ல ஆடை
வாங்காதேன்னு
சொன்னா
கேட்டாதானே...




## ராஜமவுலி படத்தில் பிரியாமணி



ராஜமவுலி திரைப்படங்களில் நடிக்கும் நடிகைகள், கதாநாயகனுக்கு சமமாகப் பேசப்படுவார்கள். தற்போது அவர் இயக்கிக் கொண்டிருக்கும் ஆர். ஆர். ஆர் படத்துக்கு இதுவரை நாயகி மற்றும் மற்றைய நடிகர் பற்றிய அறிவிப்புகள் இன்னும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், தற்போது நடிகை பிரியாமணி, ராஜமவுலி இயக்கி வரும் ஆர். ஆர். ஆர் படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. ராம்சரண் நடிக்கும் இந்த படத்தில் நாயகியாக நடிப்பது யார் என்பது இன்னும் முடிவாகாத நிலையில், பிரியாமணி நடிப்பது உறுதியாகியிருக்கிறது. இவர் நாயகியாகவா? அல்லது மற்ற கதாபாத்திரமா? என்பது முறையான அறிவிப்புக்குப் பின்னரே தெரியவரும். கடந்த 2007ஆம் ராஜமவுலி இயக்கிய 'எமடோன்கா' என்ற தெலுங்கு படத்தில் பிரியாமணி நாயகியாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

வாழ்க்கை என்பது
கரப்பான் பூச்சி போல



அமைதியா
இருந்தா அடிப்பார்கள்
எழுந்து பறக்க
ஆரம்பிச்சிட்டா
அலறியடிச்சிட்டு
ஓடுவானுகள்....



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலரது பேச்சு சங்கடப்படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். புதிய இனங்களில் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** முக்கிய பணி ஒன்றை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் நினைவுப்படுத்தி உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் தாராள முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்:** புதிய திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

**சிங்கம்:**சிலரது பேச்சு மனதில் சங்கடம் உருவாக்கலாம். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும்.

**கன்னி:** வழக்கத்திற்கு மாறான பணி உருவாகி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும்.

**துலாம்:**பூர்வபுண்ணிய நற்பலனால் முக்கியமான செயல் நிறைவேறும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி பெறும். உபரி வருமானம் வந்து சேரும்.

**விருச்சிகம்:** பிறரை நம்பி எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். இதனால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். சராசரி பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** தொல்லை கொடுத்தவர்கள் இடம் மாறிப் போகிற சூழ்நிலை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மகரம்:** இரக்க குணத்தினால் மாறுபட்ட சூழல் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது.

**கும்பம்:** குடும்பத்தில் சுபநிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புகழ்பெறுவீர்கள். பணவரவு அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயரும்.

**மீனம்:** நண்பரின் உதவி கிடைக்கும். செயல்களில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

## தமிழ்ப் பழமொழிகளும் இலங்கை அரசியல் வாதிகளும்

பொறுத்தார் பூமியாழ்வார் : ரணில்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு : மைத்திரி
பேராசை பெரு நஷ்டம் : மகிந்த
சான் ஏற முழம் சறுக்கும் : உலமா கட்சி
இளம் கன்று பயமறியாது : ஹிருணிகா
தன்வினை தன்னை சுடும் : கோத்தாபய
யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும் : சரத்பொன்சேகா, ஷிராணி
அரசனை நம்பிப் புருஷனை கைவிடாதே : திஸ்ஸ அத்தநாயக்க
புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது : TNA
ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது : G.L.பீரிஸ்
பணம் பத்தும் செய்யும் : நாமல்
அப்பன் எட்டடி.. மகன் பதினாறடி : அதுவும் நாமல் தான்
தரித்திரியம் புடிச்ச நாரை கெளுத்தி மீன விழுங்கிச்சாம்.. அதாவுல்லா
ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்.

மின்னல் ரங்கா.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | | 2 | | | 8 | |
| 1 | | | | | | 9 | | |
| | 9 | | | 6 | 3 | | | 4 |
| | | 6 | | | | | | 5 |
| 7 | | 3 | | | | 1 | | 8 |
| | | | | | | 2 | | 6 |
| 5 | | | 2 | 3 | | 8 | 1 | 7 |
| | | 8 | | | | 5 | 2 | 9 |
| | 2 | | | 5 | | 6 | 4 | 3 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 1 | 3 | 8 | 9 | 2 | 6 | 5 |
| 6 | 3 | 5 | 2 | 1 | 7 | 9 | 4 | 8 |
| 8 | 2 | 9 | 5 | 6 | 4 | 3 | 7 | 1 |
| 1 | 9 | 4 | 8 | 3 | 2 | 7 | 5 | 6 |
| 2 | 7 | 6 | 1 | 9 | 5 | 8 | 3 | 4 |
| 5 | 8 | 3 | 7 | 4 | 6 | 1 | 9 | 2 |
| 4 | 6 | 8 | 9 | 2 | 3 | 5 | 1 | 7 |
| 9 | 1 | 7 | 6 | 5 | 8 | 4 | 2 | 3 |
| 3 | 5 | 2 | 4 | 7 | 1 | 6 | 8 | 9 |

# எது திறமை?



பிரபுவும்பாபுவும் ஒரே கிராமத்தில் வாழ்கிறார்கள். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். ஒரே பாடசாலையில் ஒன்றாகவே படித்து வந்தார்கள். பாடசாலைப் படிப்பை முடித்த பின்னர் இருவரும் வேலை தேடத் தொடங்கினர். செல்வந்தர் ஒருவர் இருவருக்கும் வேலை வழங்கினார். அந்தச் செல்வந்தவர் பல ஏக்கர் வயல்களுக்கும் தென்னந்தோட்டங்களுக்கும் உரிமையாளராக விளங்கினார். அதனால் இருவரும் அங்கு தொடர்ந்து வேலை செய்யக் கூடியதாக இருந்தது. இருவரும் வேலைகளைத் தனியாகவும் இன்னும் சில வேலைகளைப் பகிர்ந்தும் செய்தார்கள். இதனால் அவர்களது நட்பு மேலும் வளர்ந்தது.

இப்படியாக ஆண்டுகள் பல கழிந்தன. ஆனால் அவர்கள் இருவருக்கும் கிடைத்த சம்பளத்திலே வேறுபாடு காணப்பட்டது. பிரபு ஒரே சம்பளத்தையே ஆண்டுதோறும் பெற்று வந்தான். ஆனால் பாபுவோ அப்படியில்லை. கூடியளவு சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருந்தான். பாபுவின் இந்தச் சம்பள அதிகரிப்பு பிரபுவுக்கு வேதனையைத் தந்தது. ஆனால் அவன் மீது பொறாமை கொள்ளவில்லை. தன்னுடைய முதலாளி தன் மீது பாரபட்சமாக நடந்து கொள்கிறார் எனப் பிரபு எண்ணினான். அதற்கான காரணத்தை அவரிடமே கேட்க அவன் விரும்பினான். ஏற்ற சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தான்.

ஒருநாள் அவனுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிட்டியது. அன்று மாலை செல்வந்தர் தனியாக ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அதுதான் ஏற்ற சமயம் என எண்ணி அவர் அருகில் சென்றான்.

"ஐயா, உங்களுடன் கதைக்க வேண்டும்" என்று பேச்சைத் தொடங்கினான். செல்வந்தரும் சரியெனக் கூறினார்.

"ஐயா நன்றாகத்தானே நானும் உழைக்கிறேன். நல்லவனாக, பணிவுள்ளவனாக நடந்து கொள்கிறேன். அப்படி இருந்தும் ஏன் என் சம்பளத்தை உயர்த்த மறுக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

செல்வந்தர் பதில் எதுவும் கூறவில்லை. புன்னகை புரிந்தார்.

"நீ போய்க் கணக்குப் பிள்ளையிடம் தேங்காய்களைப் பறிப்பது எப்போது? என்று கேட்டுவா" எனப் பணித்தார். பிரபு விசாரித்து வர உடனே போனான். திரும்பி வந்து "நாளைக்குப் பறிப்பதாக இருக்கிறார் ஐயா" எனக் கூறினான்.

"அதற்கு வேலையாள்களை ஏற்பாடு செய்து விட்டாரா?" எனத் திரும்பவும் கேட்க, பிரபு மீண்டும் கணக்குப் பிள்ளையிடம் போனான். திரும்பி வந்து "இருவரை வேலைக்கெனப் பேசி நியமித்து விட்டாராம்" என்று பதில் கூறினான்.

"கூலி எவ்வளவு எனக் கேட்டாயா?"

"இல்லை ஐயா. இதோ கேட்டு வருகிறேன்" என்று கணக்குப் பிள்ளையிடம் போகப் புறப்பட்டவனைத் தடுத்து "ம்... ம்... வேண்டாம் வேண்டாம். ஆ... அதோ பாபு வருகிறான்"

அருகிலே வந்த பாபு "வணக்கம் ஐயா. யாதேனும் வேலை இருக்கா?" எனக் கேட்டான்.

"ம் இருக்கு... நீ போய்க் கணக்குப் பிள்ளையிடம் வயலுக்குக் கிருமிநாசினி தெளிப்பது எப்போது என்று கேட்டுவா" எனக் கூற பாபுவும் கணக்குப் பிள்ளையிடம் அறிந்து வரச் சென்றான். விரைவில் பாபு திரும்பி வந்தான்.

"ஐயா அவர் நாளை மறுநாள் கிருமிநாசினி தெளிப்பதற்கென வேலையாள்களை ஒழுங்கு செய்து விட்டாராம்"

"எவ்வளவு கூலியாம்"

"வேலையாட்கள் இருவரும் தகப்பனும் மகனுமாம். இருவ்ரும் நானூறு ரூபாய் கூலிக்கு ஒத்துக் கொண்டுள்ளார்களாம்"

"நல்லது பாபு நீ இனிப் போகலாம்"

அவன் சென்றதும் பிரபுவை அவர் திரும்பிப் பார்த்தார். அந்தப்பார்வையில் ஓராயிரம் செய்திகள் மறைந்திருந்தன. பிரபுவைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்.

"பிரபு பார்த்தாயா? உனக்கும் பாபுவுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை. நீ நல்லவன் தான். ஆனால் சொன்னதை மட்டுமே செய்கிறாய். அதற்கு மேல் எதையும் சிந்தித்துச் செய்யமாட்டாய். ஆனால் பாபுவோ சமயோசித புத்தியுடன் நடந்து கொள்கிறான். சொல்வதற்கு மேலாகச் சந்தர்ப்பத்தை உணர்ந்து பணி புரிகிறான். வேலையை இலகுவாக முடிக்கப் பல வழிகளில் எனக்கு உதவுகின்றான்.

இப்போது என்ன சொல்கிறாய்? நான் அவனுக்குக் கூடிய சம்பளம் கொடுப்பது நியாயம் தானே" என்றார் செல்வந்தர்.

பிரபு எதுவும் பேசாது அவர் கூறியதை ஏற்றுக் கொண்டு தலை அசைத்தான். தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவன் உணர்ந்து கொண்டான்.



# சிம்பாப்வே

1. ஆபிரிக்கக் கண்டத்தின் தென் பகுதியில் உள்ள நாடு.
2. இங்கு 16 அதிகாரபூர்வ மொழிகள் உண்டு. அவற்றில் ஆங்கிலம், ஷோனா, டெபெலே மொழிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.
3. 'ஒற்றுமை, சுதந்திரம், உழைப்பு' என்பது இந்த நாட்டின் குறிக்கோள்.
4. இந்த நாட்டுக் கிரிக்கெட் வீரர் கிராண்ட் ஃப்ளவர் மிகவும் புகழ்பெற்றவர்.
5. ராபர்ட் முகபே இதன் அரச தலைவராக நீண்ட காலம் இருந்தார்.
6. பருத்தி, தங்கம், துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
7. சுதந்திரத்துக்கு முன்பாகத் தெற்கு ரொடீஷியா என்று அறியப்பட்ட பிரிட்டிஷ் காலனியாக இது இருந்தது.
8. ஏழு ஒலிம்பிக் பதக்கங்களை நீச்சல் பிரிவில் பெற்று, இந்த நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர் கிறிஸ்டி கோவென்ட்ரி.
9. இந்த நாட்டின் கொடியில் பச்சை, பொன் மஞ்சள், சிவப்பு, கறுப்பு நிறப் பட்டைகள் உண்டு.
10. உலகின் பெரிய நீர்வீழ்ச்சிகளில் ஒன்றான விக்டோரியா இங்கே இருக்கிறது.





# வர்ணம் தீட்டுவோம்





# சிவப்புப் பண்டா

இமய மலையையும் தென் சீனாவையும் பிறப்பிடமாகக் கொண்டவை சிவப்புப் பண்டாக்கள். பழுப்பும் சிவப்புமாகக் காணப்படுவதால் இந்தப் பெயர். சைவ உணவுகளைச் சாப்பிடக்கூடியவை. மூங்கில்களை அதிகமாக உண்ணுகின்றன.

மிக நீளமான தடிமனான வால் உண்டு. சிவப்பு பண்டா 20 -23 அங்குல நீளம் இருக்கும். வால் 11 - 23 அங்குல நீளம் இருக்கும். 3 முதல் 6 கிலோ எடை இருக்கும். பெரும்பாலான நேரத்தை மரங்களிலேயே செலவிடுகின்றன. பகல் முழுவதும் தூங்குகின்றன. இரவில் இரை தேடிச் செல்கின்றன. 13 மணி நேரம் இரை தேடுவதற்குச் செலவு செய்கின்றன.

முகத்திலும் காதுகளிலும் வெள்ளை நிற முடிகள் இருக்கும். ரக்கூனும் சிவப்புப் பண்டாவும் பெரும்பாலும் ஒரே மாதிரியான முக அமைப்பைக் கொண்டிருக்கின்றன. சிக்கிம் மாநிலத்தின் விலங்காகச் சிவப்புப் பண்டா இருக்கிறது.

# கல்வி: பொன்மொழிகள்

இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் இறந்த காலத்தை இழந்தவன்; எதிர்கால வாழ்விலும் இறந்தவன்

யூரிபிடிஸ்

கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் அறியாமை தான் தீவினையின் மூலவேர்

பிளேட்டோ

கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று; அடக்கம், ஒழுக்கம், நீதி, நெறி இவற்றின் முன்மாதிரியாகும்

எட்மண்ட்பர்க்

# மஹாகவி பாரதியார்!

## தமிழின் மேன்மையுடைய செயல்வீரன்



சிவரம்யா

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவ கவிதை எந்நாளும் அழியாத மகா கவிதை" என்று தனதான எழுத்தாளுமையை பெருமையுடனும், கர்வத்துடனும் கூறித் தமிழ்க் கவிதைக்குப் புதிய சகாப்தத்தை ஏற்படுத்திய மகாகவி பாரதியாரை நாம் என்றும் நினைவு கொள்ள வேண்டும்.

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்று பாடிக் களித்து இன்புற்றிருந்தான் அவன். இத்தகு மேன்மையுடைய பெருந்தகை தாய்த் தமிழ் மொழி மீது கொண்டிருந்த காதலையும், தன் தாய் நாட்டின் பால் கொண்ட பற்றினையும், கடவுளின் மீது கொண்ட பக்தியையும் நாம் மறந்திடலாகாது.

**பிறப்பு**

இந்தியாவின் தமிழ்நாட்டில் மார்கழி மாதம் 11ஆம் திகதி 1882 ஆம் வருடம் ஸ்ரீ சின்னசாமி ஐயாவுக்கும், ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளுக்கும் இறையருளால் கிடைத்த திவ்ய கடாட்சமாக ஸ்ரீசுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். 'செல்லப்பா', 'சுப்பையா' என்ற அன்புக்குரிய நாமகரணங்களையும் கொண்டு விளங்கினார்.

**கல்வி**

பாரதியார் ஐந்து வயதுடைய பாலகனாய் அழகியல் நடை பயின்ற தருணத்தில் அவருடைய தாயார் லக்ஷ்மி அம்மாள் காலமானார். அதன் பின்பு 1889ஆம் ஆண்டு பாரதியாரின் தந்தை மறுதார மணம் புரிந்து கொண்டார். பாரதியாருக்கு உபநயனமும் செய்வித்தார். பாரதியார் பதினொரு வயதினை அடைந்ததும், எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் இவருக்கு 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினர். இவர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயின்றார். 1897ஆம் ஆண்டு பாரதியார் செல்லம்பாளை மணம் புரிந்து கொண்டார். 1921 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**சுதந்திர வேட்கை**

இவர் கொண்ட அமைதி அற்புதமானது. சுதந்திரம் என்கின்ற வேட்கை விடியலின் ஆயுதமானது. அந்தவகையிலே, தமிழ்நாட்டில் சுதந்திரம் என்கின்ற உரிமையின் ம(து)ந்திரத்தை மக்களுக்குப் போதித்தார். அவர்களிடையே சமூக விடுதலையின் ஆர்வத்தை ஊட்டினார். அதன்வழி தனிச்சிறப்பொடு மேன்மையுற்று விளங்குகிறார்.

*என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்*
*என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்!*

என்று பாடி பாரதி கொள்ளும் விடியலின் விவேகம் ஆத்மார்த்தமானது.

**பாரதி கண்ட புதுமைப் பெண்**

பெண் விடுதலை குறித்து அவர் கொண்ட கருத்தின் கண்ணியங்கள் பேசற்கரியது. இவருடைய காலத்தில் பெண்கள் கீழ்மைப்படுத்தப்பட்ட நிலைகண்டு மனம் வெதும்பினார். அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். குறிப்பாக, பெண்களை ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாய் நடத்த வேண்டுமென்ற உயரிய எண்ணக் கணிப்பைக் கொண்டிருந்தார்.

*ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்*
*அறிவு மேலோங்கி இவை வையம் தழைக்குமாம்!*

என்று அறிவுரையின் பணிப்புரையை 'புதுமைப் பெண்' என்ற பாடல் பகுதியிலே பாடிப் பரவியுள்ளார்.

மக்களிடையே காணப்பட்ட சாதி பற்றிய உயர்வு, தாழ்வுகள் களையப்பட வேண்டும் என்று கருத்துரைகளை விதந்துரைத்தார். சுதந்திர உணர்வோடு புதுமை வேண்டிப் பாரதத்திலே புரட்சிகள் செய்தார்.

*மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்*
*வையவாழ்வு தன்னிலெந்த*
*வகையினும் தன்னிலெந்த*
*வகையினும் நமக்குள்ளே*
*தாதர் என்ற நிலைமை மாறி*
*ஆண்களோடு பெண்களும்*
*சரிநிகர் சமானமாக*
*வாழ்வோம் இந்த நாட்டிலே!*

என்று வார்த்தை நயம் சூடி விடுதலைப்பாடல் பாடினார். தமது இலட்சிய வேட்கையை ஆழமான கருத்தூட்டமாக வெளிப்படுத்தினார்.

**தாய் மொழி மீதான பற்றுறுதி!**

நாம் இன்று ஆங்கில மொழி பேசுவதையும், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் பணம் சம்பாதித்து வாழ்வதையும் பெருமையாகக் கொண்டுள்ளோம். தாய்மொழி மீதும், தாய்நாட்டின் மீதும், இறைவன் மீதும் அன்பும் பக்தியும் இன்றி அங்கலாய்க்கிறோம். மாயையுள் சிக்குண்டு இடர் மிகுந்து அறிவிலி மனிதர்களாக வாழ்கிறோம். இந்த நிலையிலே எட்டயபுரத்துக் கவியாய் பாரதி பகர்ந்த கவிதைகள் நல் அறிவை ஊட்டுகின்றன.

*வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ*
*வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ போ!*

என்று அவன் கடிந்து பாடும் தன்மை அளப்பரியது. இயற்கையிடத்தே பாரதி கொண்ட ஈடுபாடு போற்றுதற்குரியது. இயற்கையை, சுற்றுப் புறச் சூழலை இரசித்து, கற்பனையில் அவன் கொண்ட பாக்கள் தீராத களிப்புடையவை.

**இயல்பாளுமை**

இளமைப் பருவத்திலேயே கடவுள் பக்தி மிகுந்தவராக விளங்கினார். பத்திரிகைத்துறையில் சிறந்து விளங்கினார்.
தமிழ் கவிதைகளை எல்லோரும் பொருள் உணர்ந்து விளங்கிப் படிக்கும் வகையில் எளிமையான வார்த்தைப் பிணைப்புகளை கட்டமைத்தார். தமிழை நீக்கமற பூஜித்து வாழ வைத்தார்.

நிறைவான தமிழ்த் தொண்டாற்றினார். வாழ்க்கை முழுமையையும் இலட்சிய வாழ்க்கைப் பயணமாகவே அமைத்துக் கொண்டார்.

எல்லோரிடத்தும் கள்ளங்கபடமின்றிய அன்பினைக் கொண்டிருந்தார். குழந்தையுள்ளமாய் தமிழை மழலையுற செழிப்புறச் செய்தார்.

*உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்*
*வாக்கினிலே ஒளியுண்டாகும்!*

என்று பாரதி பாச் சூடியமைக்கு அவனே தக்க சான்றாகத் திகழ்கிறான். உண்மை நிலவிய உள்ளத்தின் வெளி கண்டு எழுந்த வாக்குகள் ஒவ்வொன்றும் ஒளியின் பிரவாகமாய் இருண்மையை நீக்கின.

*பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புது நூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்!*

என்று கவிஞர் கனவு கண்டார்.

**குழந்தை உள்ளம் கொண்ட மனிதம்!**

மேலும், பாரதியாரின் பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு மற்றும் ஆத்தி சூடி முதலியன சிறுவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. எளிய பாடல்களாய் இளைஞர்களுக்கு ஊக்கமும், உணர்ச்சியும் அளித்தன. முரசுப் பாட்டிலே அன்பு, ஒற்றுமை, சமத்துவம் முதலியவற்றை மிக எளிமையாகப் பாடியிருக்கிறார்.

பாப்பாப்பாட்டிலே அவர் கூறியுள்ள அறிவுரைகள் அனைத்தும் அற்புதமானவை. அவை தரும் அறிவுரைகள் சிறப்பானவை.

*உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்*
*உண்மையென்று தானறிதல் வேணும்*
*வயிரமுடைய நெஞ்சு வேணும் – இது*
*வாழும் முறைமையடி பாப்பா*

குழந்தைகளுக்காக பாரதி கொண்ட வார்த்தைகள் பிள்ளை நேயப் புரிதலுடையவை.

*ஓடிவிளையாடு பாப்பா நீ*
*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா..!*
*கூடிவிளையாடு பாப்பா – ஒரு*
*குழந்தையை வையாதே பாப்பா..!*

**பாரதி உவந்த தமிழ் வாழ்த்து**

வீரம், சத்தியம், நேர்மை, கடமை, அன்பு, இறைபக்தி என்பவற்றைக் கூறுவதாக பாரதியார் தந்த கவிதைகள் வாழ்வியற் கூறானவை. மகத்துவமானவை. அவர் தமிழைப் போற்றித் துதிக்கும் தன்மை அருளின் பார்வை. குறிப்பாக,

*வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!*
*வாழிய பாரத மணித்திரு நாடு!*

மற்றும்

*யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்!*
*தே மதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்*
*வளக செய்தல் வேண்டும்!*

என்ற கவி நாடலை குறிப்பிடலாம்.




**பாரதியின் காதலும் பணிவும்!**

ஆதி பராசக்தியவளை வேண்டிப் பணிந்தார். அவளிடத்தாய் நிறை அன்பு காட்டி வரங்கள் கேட்டார். காதலைப் போற்றினார். 'கண்ணம்மா என் குழந்தை', 'கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை' என்று பாடிப் புதுமைகள் செய்தார்.

தீமைகள், சூழ்ச்சிகள், கவலைகள், துன்பங்களை வெல்ல தாங்கும் சக்தி எமக்கு வேண்டும் என்று இடித்துரைத்தார். சிறுமைத் தனம் கண்டு பொங்கினார். அவர் எமக்காய் பாடிய பணிவை நாம் பணிவோம். என்றும் பாடிப் பரவுவோம்.

*அச்சமில்லை அச்சமில்லை*
*அச்சமென்ப தில்லையே*
*இச்சகத்துளோரெலாம்*
*எதிர்த்து நின்ற போதினும்!*

# மரண அறிவித்தல்




உதிப்பு 27 • 11 • 1936

உதிர்வு 08 • 12 • 2018

## ஆறுமுகம் வேலாயுதபிள்ளை

(ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபர், S.M. நடேஸ் - மீசாலை)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வேலாயுதபிள்ளை 08.12.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜபூபதியின் அன்புக் கணவரும், சுகந்தன் (லண்டன்), சுகர்ணன் (லண்டன்), சுகுணன் (கனடா), சுகிர்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிருந்தினி (லண்டன்), ஜனனி (லண்டன்), மயூரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் மகாதேவா லோகேஸ்வரி கோடீஸ்வரன், லோகேஸ்வரன் காலஞ்சென்ற தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிதாஷா, நிஷேன், சியாம், ஹரிஸ், ஹாசினி, கிருஷ்னி, துவாரக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை


0775418957,
0778867817

(IN/8657)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

சுகந்தன் - +44780 285 6666, சுகர்ணன் - +44794 666 3525,
சுகுணன் - +164 774 03784, சுகிர்தன் - +44 793 9123 989

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 03.10.1932

ஆண்டவன் மடியில் 25.11.2014

திதி:- சதுர்த்தி

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த

## அமரர் கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்

(இளைப்பாறிய OA வவுனியா கச்சேரி)




நான்கு ஆண்டுகள் ஓடிப் போனதோ ஐயா
எங்களால் அதனை நம்ப முடியவில்லையே இன்றும்
நேற்றுப் போல் உள்ளதே நெஞ்சினில்
தேற்றிட தீருமோ நினைவலைகள்
நீங்கள் நெடுந்தூரம் சென்று நான்கு ஆண்டுகள் ஆயிற்றோ?
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடின் இயற்கையும் இல்லை ஐயா
இயற்கையின் ஆணை தான் நீங்கள் ஐயா
எம்மைவிட்டுப் பிரிந்ததோ ஐயா
உங்கள் சிரித்த முகம் என்றும் எங்கள்
நெஞ்சங்களில் குடியிருக்கும் ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடைய காரைநகர் மணற்காட்டு முத்துமாரியைப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் நினைவில்

ஆலடி, காரைநகர். (CS/21655)(11,17) மனைவி, பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தராஜா ஐயர் (சங்கீத ஆசிரியர்) - பர்வதாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், அறிவழகியின்(உப அதிபர் - மங்கையற்கரசி வித்தியாலயம்) பாசமிகு கணவரும், ஸ்ரீசங்கமீரா (விஞ்ஞானபீடம் - யா/ பல்கலைக்கழகம்), ஸ்ரீசங்கீதன் (யா/ இந்துக் கல்லூரி), ஸ்ரீசங்கநேசன் (யா/ மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி S.பரமேஸ்வரி (லண்டன்), பரமேஸ்வரன் (கனடா), உதயகுமாரன் (கனடா), வள்ளிகாந்தன், திருமதி S.உதயகுமாரி (லண்டன்), திருமதி கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும், ப.கந்தப்பிள்ளை (பிரான்ஸ்), ப.பாலசுப்பிரமணியம், ப.ஞானபண்டிதன், ப.அம்பிகைபாகன், செ.ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), ந.ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.12.2018 வியாழக்கிழமை கோயில் வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.203, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (CS/21725)(11,17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

021 222 3680, 077 979 7410, 076 305 3332, 076 668 7642

# நல்லூர் பிரதேசசபை
# நடமாடும் சேவைக்கான அறிவித்தல்

நல்லூர் பிரதேசசபையால் பின்வரும் உப அலுவலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆதனவரி அறவீடு, ஆதனவரிப் பெயர்மாற்றப் படிவம் வழங்குதல், கட்டிட விண்ணப்பப் படிவம் வழங்குதல், அமைவுச் சான்றிதழ் வழங்குதல் ஆகிய சேவைகள் நடமாடும் சேவை மூலம் வழங்கப்பட உள்ளதால் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**நல்லூர் உப அலுவலகம்**

| திகதி | ஆதனவரி வட்டாரம் | நடமாடும் சேவை நடைபெறும் இடம் |
|---|---|---|
| 18.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 06 | பாரதிசனசமூகநிலையம் |
| 20.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 08, 09 | காளிகோவில் சனசமூகநிலையம் |

**கொக்குவில் உப அலுவலகம்**

| திகதி | ஆதனவரி வட்டாரம | நடமாடும் சேவை நடைபெறும் இடம் |
|---|---|---|
| 14.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 10, 12, 13, 14 | குமரகோட்டம் சனசமூக நிலையம்,கோண்டாவில் |
| 15.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 01,02,03,04,05,09 | வளர்மதி சனசமூகநிலையம், கொக்குவில் |
| 15.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 01,02,03,04,05,09 | இந்திரா சனசமூகநிலையம், கொக்குவில் |
| 16.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 06,07,08,09,16 | கொக்குவில் மத்திசனசமூகநிலையம்,நடராசாவீதி ,கொக்குவில் மேற்கு. |
| 16.12.2018 (மு.ப 9.00 –பி.ப 4.00) | 06,07,08,09,16 | காந்திஜி சனசமூக நிலையம், காந்திஜி வீதி,கொக்குவில் மேற்கு. |

**மேற்படி சேவைகளை வழங்குவதற்கு**

- ஏற்கனவேதங்களால் சோலைவரி செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு

அல்லது

- பிரதேசசபையினால் வழங்கப்பட்ட "K" படிவம் (ஒவ்வொரு வருட இறுதியிலும் வழங்கப்படும் ஆதனவரி அறிவித்தல் படிவம்)

அல்லாதவிடத்து

- அயல் வீட்டாரின் சோலைவரி இலக்கம்

என்பவற்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் காணிக்குரிய சோலைவரி இலக்கத்தினை (ஆதனவரி இலக்கம்) சரியான முறையில் எமக்குத் தெரிவித்து, சபையின் துரித நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திரு.தா.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
11.12.2018.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
## கிருஷ்ணசுவாமி தவமலர்



திதி : பூர்வபக்க சதுர்த்தி

தோற்றம் 29.11.1947 மறைவு 22.11.2017

ஓராண்டு காலம் சென்றதுவோ
பாராமல் எம்மைவிட்டு நீர் சென்று
மாறாத அன்பு கொண்ட
அம்மாவே - உம்மை
பாராத நாள்களெல்லாம் வற்றாத கண்ணீரோடு
காலமெல்லாம் காத்திருப்போம் மீண்டும் காணும் வரை

39/A, புலவனார் வீதி,
கல்வியங்காடு. (CS 21722)(14.17)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
## குகராணி பாலசுப்பிரமணியம்



எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எமை விட்டுச்சென்று
ஆண்டுகள் மூன்று உருண்டோடி விட்டதுவே
நம்ப முடியவில்லை....
உங்கள் இனிய குரல் காதுகளில்
ஒலிக்கின்றது....
உங்கள் கனிவான பார்வை கொண்ட
புன்னகை
முகம் என் கண்களில் இன்னும் நிற்கின்றது...
இன்றும் – எம்கூடவே இருக்கின்றீர்கள்,
நீங்கள்...
மறையவில்லை – என்றென்றும் ....
எங்களுக்குள் வாழ்கின்றீர்கள் .... உங்கள்
நினைவுகளோடு....
.ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
"சாய்ராம்"
கலைமணி வீதி, கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்.

தோற்றம் 02.07.1950 மறைவு 04.12.2015

திதி:- 11.12.2018

(CS 21732)(11.17)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 31 . 12 . 1997



ஆண்டவன் அடியில் 09 . 11 . 2018

### நேசதுரை திலக்ஷன்

*(யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2016 - A/L கலைப்பிரிவு மாணவன்)*

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் நேசதுரை திலக்ஷன் கடந்த (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நேசதுரை - பூமலர் தம்பதிகளின் ஏக புதல்வனும் நிரோஜனா, காலஞ்சென்ற நிதர்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் துஷிகரனின் (கனடா) அன்பு மைத்துனரும் காலஞ் சென்றவர்களான சோமசுந்தரம் நேசரத்தினம் மற்றும் பரமு - செல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2018) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 12.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாவகச்சேரி வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

**யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

## துயர் பகிர்கின்றோம்.



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்

**செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம், யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.**

---

## கண்ணீர் அஞ்சலி

### செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன்

*(உப செயலாளர்,*
*வண். ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி கோயில் தர்மகர்த்தா சபை)*



வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோயில் (பன்றிக் கோட்டுப்பிள்ளையார் கோயில்) தர்மகர்த்தா சபையின் உப செயலாளர் **செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன்** அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்று இருக்கும் அவரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சித்திபுத்தி விநாயகப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**555, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/21730)(11,17)

**தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள்,**
**வண்.ஸ்ரீவிஸ்வலிங்க**
**மகாகணபதி கோயில்.**

---

## பணியாளர் தேவை

கொழும்பில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு(Super market) தங்கி நின்று வேலை செய்ய 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் உடன் தேவை.
**சம்பளம் 30 000 /= முதல் 35 000 /= வரை வழங்கப்படும்.**

**தொடர்பு - 077 623 1295**

---

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**UNIT OF ALLIED HEALTH SCIENCES**
**FACULTY OF MEDICINE.**

Walk - In Interview for the post of Temporary Demonstrator in Nursing. Pharmacy and Medical Laboratory Sciences which is scheduled to be held on 12.12.2018 has been postponed.

Date and time will be informed later.

**Registrar,**
**University of Jaffna.**

(C 8661/15/17)

---

## கொக்குவில் இந்து அன்னையின் கண்ணீர் காணிக்கை



எமது கல்லூரிக் குடும்பத்தின் புதல்வனும் உலகப் புகழ்பெற்ற இருதய நிபுணருமாகிய

**ரவிபெருமாள்பிள்ளை**

நேற்று முன்தினம் (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அவரது திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு கல்லூரிச் சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது ஆன்மா கொக்குவில் கிருபாகர சுப்பிரமணியப் பெருமானின் நிழலில் சாந்தி பெறுவதாக.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம்,**
**கொக்குவில்.**

---

## கட்டடம் விற்பனைக்கு

சங்கானை பிரதான வீதி, கொமர்சல் வங்கிக்கு முன்பாக கட்டடத் தொகுதியின் தெற்குப் பக்கம் குளத்தடி வீதி முகப்பைக் கொண்ட கட்டடம் (கடை / வீட்டுக்கு உகந்தது) விற்பனைக்குண்டு.

(CS2172)(11,17)

**077 711 0082**

---

## விற்பனை உதவியாளர் உடன்தேவை

கொழும்பில் இயங்கும் பல்பொருள் அங்காடிக்கு (Super Market) தங்கிநின்று கடமையாற்ற 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட விற்பனை உதவியாளர் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் உடன் தேவை. தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும்.
சம்பளம் 40, 000/=.

தொடர்பு - **077 477 3481**

(C 8659/15/17)

---

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜநாயகம் பவளரத்தினம்மா



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜநாயகம் பவளரத்தினம்மா கடந்த (09.12.2018) ஞாயிற்றுக் கிழமை இறைபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இராசம்மா தம்பதியரின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்ற இராஜ நாயகத்தின் அன்புமனைவியும் காலஞ் சென்றவர்களான பூபாலசிங்கம், சிதம்ப ரநாதன், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி மற்றும் பரராஜசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ***புஷ்பராஜ், தர்மினி*** ஆகியோரின் வளர்ப்புத்தாயும் மாலதி, கலாவதி, ரேவதி ஆகியோரின் சிறிய தாயும் ஞானகுருபரன், ராஜேந்திரன், சசிகரன், புஷ்பராஜ், யோகேஸ்வரன், உமாகாந்தன், ஜீவதாஸ் ஆகியோரின் அன்புமாமியும் சிறிதரன், லக்ஷ்மன், அமிருதா, அருமிதா, கீர்த்திகன், அக்ஷலா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**1010/ 39, K.K.S. வீதி,**
**நாச்சிமார் கோயிலடி யாழ்ப்பாணம்.**

**தகவல் :ச. புஷ்பராஜ்**
**(மருமகன்)**
**075 0524 014**

---

## மரண அறிவித்தல்



### செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன்

*(பிரதி அதிபர், நாவலர் மகாவித்தியாலயம்)*

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் சிவலிங்கபுளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா ஸ்ரீ நாகேஸ்வரன் (ஆசிரியர், முன்னாள் யாழ். இந்து ஆரம்பபாடசாலை ஆசிரியரும், தற்போது நாவலர் மகாவித்தியாலய பிரதி அதிபரும்) கடந்த (09.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா தங்கரத்தினம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்புமருமகனும் தர்மராணியின் அன்புக்கணவரும் சிவானுஜா, சிவகஜனான், ஜிவசுதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் மகாலட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை), கணேசலிங்கம், புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), குகதாசலிங்கம் காலஞ் சென்றவர்களான கதிர்காமலிங்கம், அரிகரகுமார் மற்றும் சிவகுமார், கருணாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவபாதம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சந்திரதேவி, சிவராசா, நிலாம்பிகை காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் சாவித்திரி, ரேனுகா தேவி, நகுலாம்பிகை, கணேசதாஸ், மனோராணி, ஜெயராணி, செல்வ ராணி ஆகியோரின் மைத்துனரும் சிவநாயகமூர்த்தி (நல்லூர் முன்னாள் வலயக்கல்வி பணிப்பாளர்), தனலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் பாலசிங்கம் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சண்முகநாதன் - பராசக்தி மற்றும் காலஞ் சென்ற சச்சினாந்தன் மற்றும் அன்னபூரணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.12.2018) புதன்கிழமை மு.ப.8 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**740, K.K.S. றோட் சிவலிங்கப்புளியடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்:3120 திகதி: 2018.12.10 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 06 13 14 56 F
போனஸ் இலக்கம்: 01
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: 54,164,060/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 460
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,727,935/-
வெற்றி இலக்கங்கள்: 01 05 63 66
ஆங்கில எழுத்து: O
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**Galaxy Star**
வெற்றி வாரம் 281 / திகதி 09.12.2018
வெற்றி இலக்கங்கள்: 09 12 17 36 43
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,587,720/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1525 சீட்டிழுப்பு திகதி: 10.12.2018
வெற்றி இலக்கங்கள்: 12 19 44 57
ஆங்கில எழுத்து: R
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 22, 687,412/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778
செவ்வாய் நிற டிக்கெட்டுக்கள் 2018.12.13 திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**புனரமைக்கப்பட்ட**
**யாழ் ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் (வடபிராந்தியம்)**
**புதிய நிர்வாகிகள் விவரம்**

நேற்று (10.12.2018) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் சங்கானை (ஆசைப்பிள்ளை அன்சன்ஸ் மேல்மாடி) K.T பிளாசா மண்டபத்தில் நடைபெற்ற யாழ் ஆங்கில மருந்து வர்த்தக சங்கத்தின் (வட பிராந்தியம்) புனரமைப்பு சம்பந்தமான பொதுக்கூட்டத்தில் நிர்வாக சபைக்கான தெரிவு இடம் பெற்றது. இதில் தலைவராக

1. சுந்தரம் பாலசுப்பிரமணியம் (வைத்திய சேவைகள் மருந்துகள் விநியோக முன்னோடி)
2. ஏகமனதாக மீண்டும் செயலாளராக Dr.க.மு பத்மநாதன் (PMJF,MAF)
3. K.P.R நவரட்ணராஜா பொருளாளராக தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

எமது ஆக்கபூர்வமான செயல்திட்டங்கள் பற்றிய அறிவித்தல் நேரடியாக உங்களுக்கு கையளிப்பதுடன் அதுபற்றிய விவரங்களை சகல மருந்தக உரிமையாளருக்கு தெரிவித்துக் கொள்வோம்.

' அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு '

தகவல் : K.P.R நவரட்ணராஜா
TP.No: 077 936 1583/
TP.No: 077 873 0129 (பாலா)

**கண்ணீர் அஞ்சலி**

**செல்வராசா ஸ்ரீநாகேஸ்வரன்**
பிரதி அதிபர் - யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்



எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் ஆசிரியராய், பதில் அதிபராய், பிரதி அதிபராய்ச் சேவையாற்றிக் கொண்டிருந்தவரின் திடீர்மறைவு எம்மை பேரதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்.
(CS 21731) (04.17)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**
**அமரர் செல்வி நடராசா கனகசாந்தி**
**(இயன் மருத்துவர்)**



மலர்வு 29.12.1946 உதிர்வு 11.12.2017

ஆண்டொன்று கடந்ததம்மா – ஆனால்
கடக்கவில்லை உன் நினைவு
குதூகலம் மிக்க ஒளிவிளக்கே
எம் குடும்பத்துக் குலவிளக்கே
ஆற்றமுடியாப் பிணியிலும் – எமக்கு
அளப்பெரும் பணிசெய்த ஆசானே
ஆனந்தமாய் ஆடித்திரிந்தவேளை
காலனவன் உன்னை ஆட்கொண்டதும்
ஏனோ?
தசாப்தங்கள் பல கடந்தாலும்
அழியாதம்மா உன்நினைவேடுகள்
எம்மனதில்...

திருமதி ஸவிதாதேவி கனகசேகரன் [அண்ணி] குடும்பத்தினர், வெள்ளவத்தை
ஜெகதீசன் - இரட்ணாவேணி குடும்பத்தினர், அம்பனை, சுன்னாகம்.

## பொலிஸ்...

கூறப்படும் காணிக்குள் இயங்கிய உடற்பயிற்சிக் கூடம் (ஜிம்) மீது நேற்று மாலை பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது. அத்துடன் உடற்பயிற்சிக் கூடத்தினுள் 10பேர் கொண்ட கும்பல் புகுந்து அங்கிருந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியுமுள்ளன.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு அண்மையில் உள்ள தனியார் காணியை சுன்னாகம் பொலிஸாருக்கு கட்டிடம் அமைக்க காணி உரிமையாளர் வழங்கியிருந்தார். அந்தப் பகுதியில் பொலிஸாருக்கு காணி வழங்க வேண்டாம் என்று வலியுறுத்தி உடுவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அங்கு வருகை தந்த சுன்னாகம் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தீவிரமாகக் கண்காணித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை, பொலிஸாருக்கு வழங்கவிருந்ததாகக் கூறப்படும் காணியினுள் நீண்ட காலமாக இயங்கி வந்த உடற்பயிற்சிக் கூடத்தின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அந்தக் காணிக்குள் புகுந்த முகத்தில் துணி கட்டிய 10 பேர் கொண்ட கும்பல், அங்கு இயங்கி வந்த ஜிம் நிலையத்தை அடித்துச் சேதப்படுத்தியுள்ளது. பெற்றோல் குண்டுகளை வீசி தீவைத்து எரித்துள்ளது. அதனால் அங்கு தீப்பிடித்தது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் படை வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

சம்பவத்தை அடுத்து சுன்னாகம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. அவர்கள் தீயணைப்புப் படை வருகை தந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னரே வருகை தந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் தற்போது சிறப்பு அதிரடிப் படையினர் பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டுள்ளனர். (5,8,26)

## உயர்...

ஜேம்ஸ் டவுரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து அரச தலைவர் வெளியிட்ட அரசிதழ் அறிவிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணை கடந்த வாரம் நிறைவடைந்துள்ளது. இந்த வாரம் தீர்ப்பு வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறானதொரு நிலையிலேயே பிரிட்டன் தூதுவர் தனது கீச்சகத்தில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

'ஒரு முன்னாள் சட்ட மாணவன் என்ற அடிப்படையில் நான் தீர்ப்பை அறிவதற்காக காத்திருக்கின்றேன். இந்தத் தீர்ப்பு வரலாற்றை உருவாக்கும் தீர்ப்பாக அமையும். இலங்கையில் உள்ள சட்ட பீட மாணவர்களும் இந்த முடிவின் படிப்பினைகளைப்பெறுவதற்கும் எதிர்காலத்தலைமுறையினருக்கு நியாயத்தைக் கற்பிக்கும் விதமாகவும் அமையும்" என்று தனது கீச்சகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (5,31)

## மகிந்தவின்...

மாகாண முன்னாள் அமைச்சர் திலின பண்டார தென்னக்கோன் ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று இணைந்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடிய திலின ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தேர்தலில் போட்டியிட்ட இவர் மத்திய மாகாண சபைக்குத் தெரிவானார். அவர் மாகாண விளையாட்டு மற்றும் தொழில்துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

இவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளருமான ஜானக பண்டார தென்னக்கோனின் சகோதரராவார். ஜனக பண்டார தென்னக்கோன் சில வாரங்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகி, பொதுமக்கள் முன்னணியில் இணைந்தார்.

தற்போது நாட்டில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டு எந்தத் தரப்பு ஆட்சியமைப்பது என்பதில் பெரும் போட்டி காணப்படும் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## இரணைமடுவிலிருந்து...

ளிக்கும் நிமித்தம் கடந்த வெள்ளியன்று அரச தலைவரினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட புதிய நினைவுப் பலகையை அவ்விடத்தில் நிறுவுவதற்காக இரணைமடுக் குளத்தின் வரலாற்றுப் பயணத்தைக் குறிக்கும் அதன் ஆரம்ப நினைவுப் பலகை நீக்கப்பட்டிருப்பதையிட்டு தமிழ் ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளை அரச தலைவர் ஊடகப் பிரிவு அரச தலைவரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்தே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அதனை மீளவும் 24 மணித்தியாலங்களுக்குள் நடுகை செய்யுமாறு பணித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

**(முன்னர் வந்த தொடர்புடைய செய்தி 10ஆம் பக்கம்)**

## மைத்திரிக்கு...

அதிபருக்கும் 'மென்டாமுஸ் பேராணை' ஊடாக உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தக்ஷிலா ஜயவர்தன எனும் பெண் மேன் முறையீட்டு நீதிமன்றில் நேற்றையதினம் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி, தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணிலை நீக்கி, மகிந்தவை நியமித்திருந்தார். இதன் பின்னர் நாட்டில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. அரச தலைவரின் செயற்பாடுகள் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். நாடாளுமன்றத்திலும் பொது வெளியிலும், அரச தலைவரை பைத்தியம் என்று விமர்சித்திருந்தோடு, அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் அரச தலைவருக்கு மனநல சோதனைச் செய்வதைப் போன்று இங்கும் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார். (5,71)

## நாடாளுமன்றத்தை...

கொழும்பு, டிசெ. 11

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் அறிவிப்புக்கு இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டி நீதிமன்றுக்கு அவதூறு செய்ததாகத் தெரிவித்து, சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை சட்டத்தரணி அருண லக்சிறி நேற்றுத் தாக்கல் செய்துள்ளார்.

அதில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அரசிதழ் அறிவித்தலுக்கு எதிராக உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவை கடந்த மாதம் 13ஆம் திகதி பிறப்பித்திருந்தது. இந்தத் தருணத்தில் சபாநாயகர் கரு ஜயசூரிய 14ஆம் திகதியும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் அமர்வுகளை நடத்தியமையானது அரசமைப்பின் 105ஆவது உறுப்புரைக்கு அமைவாக நீதிமன்றை அவமதிக்கும் செயற்பாடாகும். சபாநாயகர் நாடாளுமன்ற நாள் காட்டிக்கு அப்பால் சென்று அமர்வுகளை நடத்தியுள்ளார். உயர்நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த தருணத்தில் சபாநாயகர் நாடாளுமன்றத்தைக் கூட்டி அமர்வுகளை நடத்தியமையானது உயர்நீதிமன்றத்தை அழுத்தத்துக்கு உள்ளாக்கி விசாரணைகளைத் திசைதிருப்புவற்கான ஏதுநிலைகளை உருவாக்குவதற்கும் வித்திட்டிருக்கலாம். சபாநாயகர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

வழக்கின் பிரதிவாதிகளாக சபாநாயகர் கரு ஜயசூரிய, அரச தலைவர் சார்பில் சட்டமா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். (5,71)

## யானை...

மைப்பு தமிழீழத்தை அமைக்கப் பார்க்கின்றது. யானைக்கும் புலிக்கு இடையில் செய்துக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நாளைமறுதினம் (நாளை) நாடாளுமன்றத்தில் அம்பலமாகும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

நெளும் மாவத்தையில் உள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழத்தையே நிபந்தனையாக வைத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கிவருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இதுவே நல்ல நேரம் என்பதால் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆயுதத்தால் சாதிக்க முடியாதவற்றை கூட்டமைப்பினர் சாதிக்கப் பார்க்கின்றனர்" என்றார் ரோகித.

(5,10)

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை**
**துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் 2019 ஆம் ஆண்டிற்கான குத்தகைக்கு**
**கேள்வி கோரல்**

மேற்படி கேள்விகள் தலைவர், நோயாளர் நலன் புரிச்சங்கத்தினரால் கோரப்படுகின்றது. மேலதிக விவரங்களையும் கேள்விப்படிவத்தையும் நோயாளர் நலன்புரிச்சங்க அலுவலகத்தில் பெற்று 21.12.2018 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாகக் கேள்விகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

08.12.2018 — தலைவர்
நோயாளர் நலன்புரிச்சங்கம்.


**வீடு விற்பனைக்கு**
நந்தாவில் லேனில் 4 1/4 பரப்பில் அமைந்துள்ள மேல்மாடியுடன் கூடிய வீடு (7 அறைகள் உள்ள பெரிய வீடு) வீட்டின் புதிய விலை
1 கோடியே 60 இலட்சம்
தொடர்பு - 076 884 3551

**பணியாளர் தேவை**
முழங்காவிலில் உள்ள ICE Factory ஒன்றுக்கு இயக்குநர்(Operator) தேவை. (வெல்டிங் வேலை அறிவு விரும்பத்தக்கது)
தொடர்பு : 077 232 6003
076 295 8828
(CS 0021662)(04.17)



இது புதுசு

காற்று நிரப்பக் கூடிய தலையணைகள் புதிதாக அறிமுகமாகி யுள்ளன. இவை 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# கல்லீரலை காக்கும் கோப்பி

கோப்பியில் உள்ளடங்கி இருக்கும் காபின் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக்கூடியது. எனினும்கல்லீரலின் ஆரோக்கியத்துக்கு காபினின் பங்களிப்பு அவசியமானதாக இருக்கிறது. தினமும் இரண்டு கப் கோப்பி பருகுவதன் மூலம் கல்லீரல் நோய்களில் இருந்து தற்காத்துக்கொள்ளலாம் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக 63 ஆயிரம் காபி பிரியர்கள்ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் 45 வயது முதல் 74 வயதுக்கு உட்பட்டவர்கள்.

15 ஆண்டுகளாக அவர்கள் பருகும் கோப்பியின்அளவுபற்றிபரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. அதில் 114 பேர் கல்லீரல் அழற்சி நோயால்பாதிக்கப்பட்டுஇறந்துவிட்டார்கள். இதையடுத்து கோப்பி அதிக அளவிலும், குறைந்த அளவிலும் பருகுபவர்களைத் தரம் பிரித்து சாதக, பாதக அம்சங்களை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். இறுதியில் தினமும் இரண்டு கப் காபி பருகுவது தான் உடல்நலத்துக்கும், கல்லீரல் ஆரோக்கியத்திற்கும் நலம் சேர்க்கும் என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்திருக்கிறார்கள்.

அதேவேளையில்டீ, பழஜூஸ்போன்ற பானங்கள் பருகுவதற்கும் கல்லீரல் அழற்சிநோய்க்கும்சம்பந்தம்இல்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மதுப்பழக்கத்திற்கு அடிமையாவது தான்கல்லீரல்அழற்சிநோய்ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

உலகளவில் அமெரிக்கர்கள்தான் கல்லீரல் அழற்சி நோயால் அதிக அளவு பாதிப்புக்குள்ளாகிறார்கள்.





# எண்ணெய் சருமத்துக்கு...

★ தக்காளிப்பழச் சாற்றை முகத்தில் பூசிக் காய்ந்தபின் கழுவினால் எண்ணெய்த் தன்மை கட்டுப்பட்டுவிடும். தக்காளியுடன் வெள்ளரிப் பழத்தை அல்லது ஓட்சைசேர்த்துஅரைத்துமுகத்தில்பூசி20நிமிடங்கள் கழித்து கழுவி வந்தாலும் முகத்தில் இருக்கும் எண்ணெய்ப் பிசுபிசுப்பு நாளடைவில் நீங்கி விடும்.

★ எண்ணெய்த் தன்மையான சருமத்தை உடையவர்கள் முகத்தில் மோரைப் பூசி சிறிது நேரத்திற்குப்பின் கழுவி வந்தால் எண்ணெய் தன்மை குறையும்.

★ சோள மாவுடன் தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரத்துக்குப் பின் கழுவினால் முகத்தில் எண்ணெய்த் தன்மை நீங்கும்.

★ வெள்ளரிக்காயைதினமும்காலையில்முகத்தில்தேய்த்துவரமுகத்தில்சுரக்கும்எண்ணெயானது கட்டுப்படும். வெள்ளரிச்சாறுடன்பால்பவுடரைக்கலந்துபூசினாலும்எண்ணெய்த்தன்மையின்றி முகம் பிரகாசமாகக் காணப்படும்.

★ எண்ணெய்த் தன்மையுள்ள சருமத்தினர் அடிக்கடி முகம் கழுவ வேண்டும். முகத்தைக் கழுவ சோப்புக்குப்பதிலாககடலைமாவைப்பயன்படுத்துங்கள். எண்ணெய்த்தன்மைகுறைவதோடு முகமும் பளபளக்கும்.

★ பால் மற்றும் முட்டையின் வெள்ளைக் கருவுடன் கேரட் துருவலைக் கலந்து முகத்தில் பூசினால் எண்ணெய் சுரப்பது குறைந்துவிடும்.

★ வெள்ளரிச்சாறு, எலுமிச்சை சாறு, சந்தனப் பவுடர், தயிர், பாதாம் பவுடர், உருளைக்கிழங்குச் சாறு ஆகியவற்றை சம அளவில் எடுத்து கலந்து முகத்தில்பூசிசிறிது நேரத்திற்குப்பின் குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் எண்ணெய்த் தன்மை நன்கு குறைவடையும்.



# சளித் தொலையில் இருந்து விடுபட...

பொதுவாக சிலருக்கு குளிர் காலங்களில் சளி பிடித்தால் எந்த மருந்தை எடுத்துக்கொண்டாலும் குணமாகாது.

மூன்று பழுத்த எலுமிச்சை பழத்தை எடுத்து அதில் 2 பழத்தை பாதியாக வெட்டி ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் இரண்டு குவலை அளவு தண்ணீர் ஊற்றி அதில் தேவையான அளவு உப்பு போட்டு நன்கு கொதிக்க வையுங்கள்.

கொதிக்க வைத்த இரண்டு நீரை ஒரு கப் அளவு குறையும் வரை நன்றாக கொதிக்க விடுங்கள். பிறகு மீதியுள்ள 1 எலுமிச்சை பழத்தையும் பிழிந்து அந்த நீரை ஒரு கப்பில் எடுத்து சிறிதளவு சீனி அல்லது கருப்பட்டி சேர்த்துக் கொள்ளுங்கள் பின்னர். ஓரளவு சூட்டுடன் இரவு தூங்க செல்லும் அரை மணி நேரத்துக்கு முன்பு குடித்து விட்டு தூங்குங்கள்.

நீங்கள்உறங்கியபின்னர்உங்களுக்குவியர்வையாகவியர்த்து உங்கள் உடம்பில் உள்ள சளி முழுவதும் தானாக வெளியேறி விடும்.



# இறந்த செல்களை நீக்கும் தக்காளிச்சாறு

- தயிர் மற்றும் தக்காளி சாறு இரண்டையும் கலந்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் மசாஜ் செய்து கழுவ, தழும்புகள் மறைந்து சருமம் பிரகாசமாக மின்னும்.
- தக்காளி சாறு சருமத்தின் PH சமநிலையை பராமரித்து முகத்தில் பருக்கள் உருவாவதைத் தடுக்கிறது.
- தக்காளியைதுண்டைதேனில்நனைத்து, முகத்தில்தேய்த்து10நிமிடம்கழித்துமுகத்தைகழுவினால், முகம் பொலிவுடன் காணப்படும்.
- பருக்களால்ஏற்படும்தோல்சிவத்தலைகுறைக்கிறது.
- தக்காளியைமசித்துஅதனுடன்கிளிசரின்கலந்து கைகளுக்குதடவுங்கள். 20நிமிடங்கள்கழித்து கழுவினால்இறந்தசெல்களைநீக்கிபளபளக்கச் செய்யும்.
- முகச்சருமத்தில் இறந்த செல்களை முற்றிலும் அகற்றுகிறது.
- கரும்புள்ளிகளை நீக்குகிறது. சருமத் துளைகளையும் சுருக்கி, தூசிகள் மற்றும் அழுக்குகள் உட்புகாதவாறு தடுக்கிறது.

# கல்சியச் சத்து நிறைந்த எள் ரசம்

**தேவையான பொருள்கள் :**
துவரம்பருப்பு : ஒரு கப்,
தக்காளி : ஒன்று,
புளி நெல்லிக்காய் : அளவு,
பச்சை மிளகாய், காய்ந்த மிளகாய் தலா: 2,
எள், தேங்காய் துருவல், மிளகு, சீரகம், மஞ்சள்தூள் தலா ஒரு கரண்டி,
நெய், கடுகு, கறிவேப்பிலை தாளிக்க தேவையான அளவு,
கொத்தமல்லி சிறிதளவு,
உப்பு தேவையான அளவு.

**செய்முறை:**
எள்ளை வெறும் வாணலியில் வறுத்து, தேங்காய் துருவல், மிளகு, சீரகம் சேர்த்து அரைத்து கொள்ளவும். கொத்தமல்லி, தக்காளியை பொடியாக நறுக்கி கொள்ளவும்.
துவரம்பருப்பை வேக வைத்து கொள்ளவும்.
ஒரு பாத்திரத்தில் புளிக்கரைசல், நறுக்கிய தக்காளி, கீறிய பச்சை மிளகாய், காய்ந்த மிளகாய், மஞ்சள் தூள், உப்பு சேர்த்துக் கொதிக்கவிடவும்.
இதனுடன் அரைத்து வைத்த விழுது, வெந்த பருப்பு சேர்த்து, நுரைத்து வரும்போது இறக்கவும்.
நெய்யில் கடுகு, கறிவேப்பிலை தாளித்து சேர்த்து, ரசத்தில் சேர்க்கவும்.
கொத்தமல்லி தூவி பரிமாறவும்.
'கமகமக'வென்ற மணத்துடன், அட்டகாசமான ருசியில் எள் ரசம் தயார்!



# சிறுபான்மைக் கட்சிகள் ஒருமித்து பயணிப்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பம்

## ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11

சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாகச் செயற்படவேண்டும். முதற்கட்டமாக தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இதற்கான பேச்சுக்களை அடுத்த வாரத்தில் ஆரம்பிப்பதற்கு நாடாளுமன்றக்குழு தீர்மானித்துள்ளது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழுவின் செயலரும் வடமேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான றிஸ்வி ஜவஹர்ஷாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் முடிவுரை நிகழ்த்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தரப் பகைவர்களும் இல்லை என்பதை வைத்து எல்லா கட்சிகளும் அரசியல் செய்கின்றன. எங்களது அரசியலை சிங்கள கட்சிகள் மற்றும் தமிழ் கட்சிகளுடன் சமாந்தரமாக பகிர்ந்துகொள்ளவேண்டிய பொறுப்பில் முஸ்லிம் காங்கிரஸ் இருந்துகொண்டிருக்கிறது.



தேசியக் கட்சிகளுடன் நாங்கள் உறவு கொண்டாடுகின்றபோது, தமிழ் கட்சிகளுடனான எங்களது உறவில் அடிக்கடி விரிசல்கள் ஏற்படுகின்றன. நாங்கள் எவ்வளவுதான் நெருக்கமாக நடந்தாலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு விடயத்தில் தமிழ் தரப்புடன் முரண்பாடுகள் ஏற்படுவது சர்வசாதாரணமாக நடந்துவருகின்றன. எதிர்வரும் காலங்களில் தேர்தல்களுக்கு முன்னர் இல்லாவிடினும் தேர்தல்களின் பின்னராவது, மலையகக் கட்சிகள் உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கூட்டாக செயற்படமுடியுமா என்பது பற்றி நாங்கள் சிந்திக்கின்ற காலம் வந்துள்ளது.

**யதார்த்தத்தை புரிந்து கொள்ளவேண்டும்**

முஸ்லிம்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளில் நிர்வாக ரீதியில் விடை தேடவேண்டிய நூற்றுக்கணக்கான பிரச்சினைகள் இருக்கின்றன. இவ்விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துநின்று, என்ன நிபந்தனைகள் விதித்தாலும் தமிழர் தரப்புடன் பேசாமல் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது என்ற யதார்த்தையும் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் பிரச்சினை, நிர்வாகப் பிரச்சினை, இனப்பிரச்சினை போன்றவற்றுக்குத் தீர்வு காண்கின்றபோது அவை யதார்த்தமாக இருக்கவேண்டுமானால் அது ஒரு புறத்திலிருந்து மாத்திரம் பெறக்கூடிய தீர்வாக இருக்க முடியாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விடயத்தில், கூட்டு வைத்திருக்கும் தேசியக் கட்சியுடன் உடன்பாட்டுக்கு வருகின்ற அதேநேரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புட னும் தேவையேற்படின் மலையகக் கட்சிகளுடனும் சமாந்தரமாக பேசவேண்டும்.

**பேச்சுக்கள் ஆரம்பம்**

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஏராளமான பிரச்சினைகள் தீர்வுகாணப்படாமல் இருக்கின்றன. இவற்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரம் தீர்வை தந்துவிடும் என்ற இறுமாப்பில் எதனையும் செய்துவிட முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் தேர்தலுக்கு செல்வதற்கு முன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று எமதுநாடாளுமன்றக்குழுதீர்மானித்துள்ளது. இதற்கான பேச்சுக்கள் அடுத்த வாரமே ஆரம்பிக்கப்படவுள்ளன.

சிறுபான்மை மக்கள் அச்சப்படுகின்ற ஆட்சியாளர்களை விரட்டுவதற்கு, நாடுதழுவிய தேர்தலில் சாதிக்க வேண்டுமாயின் சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்து பயணிக்க வேண்டும். எங்களது நீண்டகால பிரச்சினைகளை பிச்சைக்காரன் புண்போல வைத்துக்கொண்டு, தேர்தல் மேடைகளில் மாத்திரம் அவற்றை முழங்கிவிட்டுப் போகின்ற கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் இருக்கமுடியாது - என்றார். (5)

---

புலிகளின் முக்கியஸ்தர்

## திட்டமிட்ட கொலை முயற்சி 48 மணி நேரத்தில் அம்பலம்

கூறுகிறார் நாமல் குமார

கொழும்பு, டிசெ. 11



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் முக்கியஸ்தர் ஒருவரால் இலங்கையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கொலை முயற்சி குறித்து எதிர்வரும் 48 மணி நேரத்துக்குள் தெரிவிப்பதாக நாமல் குமார தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால, கோத்தபாய ஆகியோர் மீதான கொலைச் செய்தி சதி முயற்சி தொடர்பான தகவல்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய நாமல் குமார கொழும்பில் நேற்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மதத் தலம் ஒன்றை மையப்படுத்தி மேற்கொள்ளப்படவிருந்த கொலைச் சதித்திட்டம் தொடர்பான தகவல் குரல்பதிவு மூலம் உறுதியாவதாகவும் இந்தச் சதித்திட்டம் 150 இலட்சங்களுக்கு முன்னெடுக்கப்படவிருந்ததாகவும் கூறியுள்ள நாமல் குமார அது தொடர்பான குரல் பதிவை பொலிஸாரிடம் நாளை ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(5)

---

## நிதி அமைச்சின் செயலர் சொல்வது பச்சைப் பொய்

**ஜனவரியில் நெருக்கடி நிச்சயம் - ஐ.தே.க.**

கொழும்பு, டிசெ. 11

அடுத்த ஆண்டுக்கான அரச செலவுகளைச் செய்வதில் எந்தச் சிக்கலும் இல்லை என்று நிதி அமைச்சின் செயலர் கூறுகின்றார். ஆனால் அது பச்சைப் பொய். எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்குள் அரச நிதியைப் பயன்படுத்துவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காவிடின் நாடு பாரதூரமான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டே தீரும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

நிதி அமைச்சின் செயலர் ஆர்டிகல, அடுத்த ஆண்டுக்கான அரச செலவுகளைச் செய்வதில் எவ்விதச் சிக்கலும் இல்லையென கூறியுள்ளார். அரச தலைவருக்கு மூன்று மாதங்களுக்கு நிதியைப் பயன்படுத்த முடியுமெனவும் கூறியுள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் நிதியைச் செலவிடுவதற்கு அரச தலைவருக்கு உள்ள அதிகாரம் என்ன?. அரசமைப்பின் 148ஆவது உறுப்புரையின் பிரகாரம் அரச நிதியைப் பயன்படுத்தும் முழுமையான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. அரச நிதியை முகாமைத்துவம் அல்லது வழிநடத்துவதற்கு அரச தலைவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. முழுமையான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது.

வரவு செலவுத் திட்டமொன்றோ அல்லது இடைக்கால கணக்கறிக்கையொன்றோ நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்ட பின்னர் அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் புதிய நாடாளுமன்றம் ஆரம்பமான முதல் நாளில் இருந்து மூன்று மாதங்களுக்கு நிதியைப் பயன்படுத்தும் அதிகாரம் அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது மாத்திரமே நிதி தொடர்பில் அவருக்கு உள்ள அதிகாரமாகும். உயர்நீதிமன்றம், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட அரசிதழ் சரியானதென தீர்ப்பளித்தாலும், புதிய நாடாளுமன்றம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர்தான் அரச தலைவருக்கு நிதி அதிகாரத்தை மூன்று மாதங்களுக்குப் பயன்படுத்த முடியும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது தவறு என்று அறிவிக்கப்பட்டால் அடுத்த ஆண்டு தொடக்கம், நிதி அமைச்சரின் கையொப்பத்துடன்தான் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதா இல்லையா என்பதையும் தாண்டி அரசு உடனடியாக அமைக்கவேண்டும். இதைத்தான் அரச தலைவர் முதலில் செய்யவேண்டும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும், இல்லாவிட்டாலும் நிதி அமைச்சர் ஒருவர் கட்டாயம் இருக்க வேண்டும். அரச தலைவர் நாட்டின் பொருளாதாரத்தை பாரதூரமான நிலைக்குத் தள்ளும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டு வருகிறார். அடுத்த மாதம் பெரிய கடன்தொகைகளைச் செலுத்த வேண்டியுள்ளன.

வெளிநாட்டு கையிருப்பில் கடனைச் செலுத்தலாம் என்று சிலர் கூறுகின்றனர். வெளிநாட்டு கையிருப்பு இருப்பது உண்மை. ஆனால், அது மத்திய வங்கிக்கு உரித்துடையது. அரசுக்கு உரித்துடையது அல்ல. 8 பில்லியன் அமெரிக்க டொலர்களை விட வெளிநாட்டு கையிருப்பு வீழ்ச்சிக்கண்டால் எமது நாடு தொடர்பிலான நம்பிக்கை இழக்கப்படும். நிதி அமைச்சின் செயலர் முதலில் அரசமைப்பை படித்து அதன்படி உபதேசங்களை அரச தலைவருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (5,10)

---

## தனன்களப்புப் பிரதேசத்தில் நள்ளிரவில் வாள்வெட்டு

சாவகச்சேரி, டிசெ.11

தென்மராட்சி தெற்கு தனன்களப்புப் பகுதியில் நள்ளிரவில் வளவினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் குடியிருப்பினை அடித்து சேதப்படுத்தியதுடன் வெளியே வந்த நபரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12. மணியளவில் தென்மராட்சி தெற்கு தனன்களப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வாள் வெட்டுக்கு இலக்கான குடும்பத்தர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு: மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வீட்டிலிருந்தோர் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் வளவினுள் புகுந்த கும்பல் அட்டகாசம் புரிந்து தன்னை வாளால் வெட்டியதாக காயமடைந்தவர் தெரிவித்தார். (9)

# மகிந்தவுக்குப் பதவி கொடுத்த மைத்திரிக்கு எதிரான வழக்கு

## ஜனவரி 7 இல் விசாரணை

மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தமை சட்டத்துக்கு எதிரானது எனவும் ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவியிலிருந்து அகற்றியமை மற்றும் அமைச்சரவையை நீக்கியமை ஆகியன சட்டவிரோதம் எனவும் உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 வழக்குகளையும், ஜனவரி மாதம் 7 ஆம்திகதிவிசாரணைக்கு எடுத்துக்கொள்ள நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

தலைமை அமைச்சராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியிலிருந்து நீக்கி முன்னாள் அரச தலைவரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவை அந்தப் பதவிக்கு நியமிப்பதற்கு கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்த தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தம்பர அமில தேரர் மற்றும் அரச தலைவரின் முன்னாள் இணைப்புச் செயலர் ஓசல ஹேரத் ஆகியோரால் தாக்கல் செய்ய மனுக்கள் மீதான விசாரணை சிசிர டி ஆப்ரூ, புவனேக அலுவிஹாரே மற்றும் மூர்து பெர்ணான்டோ ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மனுக்கள் மீதான சமர்ப்பணங்களைச் செய்வதற்கு கால அவகாசத்தைக் கோரினார்கள். இதனையடுத்து எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது. (5.71)

### அரசியல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2014ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலராக இருந்தவர் மைத்திரிபால சிறிசேன. எதிரணியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அரச தலைவர் வேட்பாளராக என்னை எதிர்த்துக் களமிறங்கினார். அவர் வெற்றி பெற்று ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆட்சி நடத்தினார். ரணிலின் உண்மை முகத்தை அவர் சில மாதங்களுக்கு முன்னர்தான் கண்டு கொண்டார். அதனடிப்படையில்தான் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். அவர் இந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக எங்களுக்கு இரகசியத் தகவலையும் அனுப்பியிருந்தார். நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பெரும்பான்மையை நிரூபித்துத் தருவதாகவும் அவர் கூறியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதி வழங்கினார். அதனை நம்பியே நான் தலைமை அமைச்சர் பதவியை ஏற்றேன். இந்தப் பதவியை நான் கேட்டுப் பெற்றுக் கொள்ளவில்லை. அவரே, நான்தான் இந்தப் பதவிக்குப் பொருத்தம் என்று என்னை நியமித்தார். துரதிஷ்டவசமாக நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய சூழல் அரச தலைவருக்கு ஏற்பட்டது. ஆனால் அதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றத்தை நாடியது. அவர்கள் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளப் பயந்தே நீதிமன்றம் சென்றார்கள். நான் தலைமை அமைச்சராகச் செயற்படுவதற்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்தார்கள். நீதிமன்றங்கள் இடைக்காலக் கட்டளையை வழங்கியுள்ளன. நான் அதனை மதிக்கின்றேன். நீதிமன்றங்களின் எத்தகையதொரு தீர்ப்பையும் நான் ஏற்றுக் கொள்வதற்குத் தயாராகவுள்ளேன். நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கும் போது நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு நாடாளுமன்றத் தேர்தலே தீர்வு என்று நாட்டிலுள்ள சாதாரண குடிமகனுக்கும் தெரியும். இது எனது தனிப்பட்ட கருத்து. நான் நீதிமன்றங்களுக்கு அறிவுரை கூறவில்லை. நீதிமன்றங்கள் எத்தகைய தீர்ப்பை வழங்கினாலும் அதனை ஏற்றுச் செயற்பட நான் தயாராக இருக்கின்றேன் - என்றார். (5)

### முச்சக்கரவண்டி...

அடுத்த ஆண்டு முதலாம் திகதியிலிருந்து முச்சக்கர வண்டிகள் மற்றும் ரக்ஸிகள் அறவிடும் கட்டண விவரங்கள் மாவட்டச் செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், யாழ்ப்பாண மாநகர முதல்வர், வடக்கு மாகாண உள்ளூராட்சி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலர், வடக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், மாநகர சபை ஆணையாளர், நுகர்வோர் பாதுகாப்புச் சபை பொறுப்பதிகாரி, அளவீட்டு நியமங்கள் பணியக அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இடையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, அடுத்த ஆண்டு முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் மற்றும் ரக்ஸிகள் கீழ்வரும் கட்டணங்களையே அறவிடமுடியும்.

அதிகாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் முதலாவது கிலோ மீற்றருக்கு 70 ரூபாவும், அடுத்த ஒவ்வொரு நூறு மீற்றருக்கு 5 ரூபாவும், ஒவ்வொரு நிமிடத்துக்கான காத்திருப்புக் கட்டணமாக 2 ரூபாவும் அறவிட முடியும். இரவு 8 மணியிலிருந்து அதிகாலை 5 மணி வரையில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் முதலாவது கிலோ மீற்றருக்கு 80 ரூபாவும், அடுத்த ஒவ்வொரு நூறு மீற்றருக்கு 5 ரூபாவும், ஒவ்வொரு நிமிடத்துக்கான காத்திருப்புக்கட்டணமாக 2 ரூபாவும் அறவிட முடியும்.

அதிகாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் சேவையில் ஈடுபடும் ரக்ஸிகள் முதலாவது கிலோ மீற்றருக்கு 100 ரூபாவும், அடுத்த ஒவ்வொரு நூறு மீற்றருக்கு 5 ரூபாவும், ஒவ்வொரு நிமிடத்துக்கான காத்திருப்புக் கட்டணமாக 3 ரூபாவும் அறவிட முடியும்.

இரவு 9 மணியிலிருந்து அதிகாலை 5 மணி வரையில் சேவையில் ஈடுபடும் ரக்ஸிகள் முதலாவது கிலோ மீற்றருக்கு 110 ரூபாவும், அடுத்த ஒவ்வொரு நூறு மீற்றருக்கு 5 ரூபாவும், ஒவ்வொரு நிமிடத்துக்கான காத்திருப்புக் கட்டணமாக 4 ரூபாவும் அறவிட முடியும்.

இந்தக் கட்டண விவரங்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனால், முச்சக்கர வண்டி மற்றும் ரக்ஸி சங்கத் தலைவர்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (5)

### நீதிமன்ற....

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தம்மைப் பதவியில் இருந்து நீக்கியது தவறு என்று உத்தரவிடக் கோரி, முன்னாள் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றம், டெனீஸ்வரன் பதவியில் தொடர்வதற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என்று இடைக்காலக் கட்டளையை வழங்கியிருந்தது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் விக்னேஸ்வரன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலக் கட்டளையை விக்னேஸ்வரன் நடைமுறைப்படுத்தவில்லை என்றும், தான் வகித்த அமைச்சுப் பதவிகளை திருமதி அனந்தி சசிதரன் மற்றும் சிவநேசன் ஆகியோர் வகித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் குறிப்பிட்டு மூவருக்கு எதிராகவும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு மீதான விவாதங்கள் இடம்பெற்றிருந்தன. கடந்த ஒக்ரோபர் 16ஆம் திகதி அவை நிறைவு பெற்றிருந்தன. டிசெம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் இரு தரப்பையும் எழுத்துமூலம் சமர்ப்பணங்களைச் செய்யுமாறும் குறிப்பிட்ட மன்று டிசெம்பர் 10ஆம் திகதி இடைக்காலக் கட்டளையை வழங்கும் என்று அறிவித்திருந்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் நீதியரசர் ஒருவர் வருகை தராமையினால் வழக்கு ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (5)

### தூக்குத்...

தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்று அண்மையில் மேற்கொண்ட தீர்மானத்தை நாட்டினதும் அடுத்த தலைமுறையினதும் எதிர்காலத்துக்காக உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போதைப் பொருள் கடத்தல்களில் தொடர்புபட்டு நீதிமன்றதால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள சில கைதிகள், சிறைச்சாலைக்குள் இருந்தவாறு போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த மே மாதம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்திருந்தன. நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் அந்தப் பேச்சு அடிபட்டுப் போயிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், போதைப் பொருள் கடத்தலை ஒழித்தல் மற்றும் குற்றங்களைக் குறைத்தல் தொடர்பான சட்டத் திருத்தங்கள் பற்றி அரச தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, மைத்திரிபால தூக்குத் தண்டனை விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டிய நபர்கள் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் உரிய முறையில் செயற்படாத காரணத்தால் அந்தத்தீர்மானத்தை நிறைவேற்றுவது தாமதமாகியுள்ளதுடன், அது பற்றிய விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும்மைத்திரி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டங்களை ஒருபோதும் வலுவிழக்க இடமளிக்கக்கூடாது என்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தப்பிச் செல்வதற்கு முடியாத வகையில் அந்தச் சட்டங்களை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டிய அரச தலைவர் மைத்திரிபால, மதுவரித் திணைக்களம் உள்ளிட்ட அனைத்து நிறுவனமும் இதன் போது ஒத்துழைப்புடன் நாட்டு மக்களின் நன்மைக்காக தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் குற்றங்களை குறைப்பதுடன் தொடர்புடைய சட்ட வரைவுகள், மது வரி கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது உறுப்புரைகள் திருத்தம், நச்சு போதைப் பொருள் கட்டளைச் சட்ட திருத்தம், சிறைச்சாலைகள் பாதுகாப்புக்கு சிறப்பு அதிரடிப் படையின் உதவியை பெற்றுக்கொள்ளல், வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை பூசா சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (5)

### மைத்திரியின்...

இன்றுடன் ஒரு வார கால அவகாசம் நிறைவுக்கு வருகின்றது. இருப்பினும் அரசியல் நெருக்கடி தீர்வதற்கான சாத்தியங்கள் எதுவும் தென்படவில்லை என்று கொழும்பு அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு கடந்த செவ்வாய்க் கிழமை சுகதாச உள்ளக அரங்கில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி இன்னும் 7 நாள்களுக்குள் முடிவுக்கு வருமென நான் தெளிவாக கூறிக்கொள்கிறேன். எதிர்வரும் வாரத்துக்குள் இந்த அரசியல் நெருக்கடியையும் அமைதியின்மையையும் முழுமையாக முடிவுக்கு கொண்டு வருவேன். அது நாட்டுக்காகவும் மக்களுக்காகவுமே ஆகும். இந்த அனைத்துபிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நான் சமாதான கரங்களை நீட்டுகின்றேன். நாம் ஒன்றாக இருந்து பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வோம். பிரச்சினையை உருவாக்கியது நானல்ல. பிரச்சினையை உருவாக்கியதும் நாட்டை அழிவுக்குள்ளாகியதும் ரணிலே, என்று கூறியிருந்தார்.

அரச தலைவர் அறிவித்த 7 நாள்கள் கால அவகாசம் இன்றுடன் முடிவுக்கு வருகின்றது. அரச தலைவர் தெரிவித்தவாறு, அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான எந்தவொரு நகர்வுகளையும் அவர் முன்னெடுக்கவில்லை என்று தெரிவித்துள்ள கொழும்பு அரசியல் அவதானிகள், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை விரைவுபடுத்துமாறு சட்டமா அதிபர் ஊடாக இன்றே கோரிக்கை முன்வைக்கவுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். (5)

### தீர்ப்பை...

சட்டமா அதிபர் ஊடாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழுவை அரச தலைவர் கோரவுள்ளார். அவரே இந்தத் தகவலை எம்மிடம் தெரிவித்தார். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மேல்மாகாண அழகியற் கற்கைகள் நிலையக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

எதிர்வரும் 14ஆம் திகதி நீதிமன்ற வருடாந்த விடுமுறை ஆரம்பமாகின்றது. அதற்கு முன்னர் நீதிமன்றம் தீர்ப்பை அறிவிக்க வேண்டும். அதனை விரைவுபடுத்துமாறு சட்டமா அதிபர் ஊடாக அரச தலைவர் நீதியரசர்களிடம் கோரிக்கை விடுப்பார்.

அதேநேரம் உலகவரலாற்றில் தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவை ஆகியன செயற்பட முடியாது என்று இடைக்கால கட்டளை வழங்கிய நீதிமன்றம் அதனை விசாரணைக்கு உட்படுத்துவதற்கான திகதியைக் குறிப்பிடவில்லை. இலங்கையிலேயே இப்படியொரு சம்பவம் முதற்தடவையாகப் பதிவாகின்றது. நாட்டில் அரசின் செயற்பாடுகளை இடைநிறுவதற்கு நீதித்துறைக்கு அதிகாரம் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

குழந்தையொன்று பிறப்பதற்கு பத்துமாதங்கள்தேவைஎன்பதுநியாயமானதொன்றாகும். பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்ததை குழந்தையென்று தானே நாம் கூறுவோம். ஆனால் சில நெருக்கடியான நிலமைகள் அதாவது தாய்க்கு அல்லது குழந்தைக்கு ஏதேனும் இடர் நேரவிருக்கின்றது என்றால் பத்து மாதங்களுக்கு முன்னதாக குழந்தையை சத்திரசிகிச்சை மூலமாக வெளியில் எடுப்பதில்லையா? அவ்வாறான தருணத்தில் நீதிமன்றம் குழந்தையைப் பத்து மாதங்களுக்கு முன்னதாக வெளியில் எடுக்க வேண்டாம் என்று இடைக்கால உத்தரவு பிறப்பத்தால் நிலமை எப்படியிருக்கும்.

நாங்கள் ஜனநாயகத்தை அழித்து, சர்வாதிகாரத்தை நிறுவப் பொதுத்தேர்தலை கோரவில்லை. புதியநாடாளுமன்றத்தில் நாட்டுக்கான செயற்படும் அரசை மக்களே தீர்மானிப்பதற்காகவே பொதுத்தேர்தலை கோருகின்றோம். அதற்காகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அவ்வாறு கலைக்கப்பட்ட நிலையில் அதற்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்து நீடித்துச் செல்கின்றமையாது, தாயையும், குழந்தையும் உயிழக்கச் செய்வதற்கான முயற்சியாகவே பார்க்க வேண்டியுள்ளது - என்றார்.

இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலமையை நீதிமன்றம் புரிந்து கொண்டு, அதற்கு ஏதுவான தீர்ப்பை வழங்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் உரையாற்றியிருந்தார். இவ்வாறானதொரு நிலையில் நீதிமன்றம் விரைந்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கவுள்ளதாகக் கூறியுள்ளார். (5.61)

## சங்கானை பூப்பந்தாட்டத் திடல் பாவனைக்காக விடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ. 11

சங்கானையில் அமைக்கப்பட்ட பூப்பந்தாட்ட உள்ளக அரங்கு வீரவீராங்கனைகளின் பாவனைக்காக விடப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பளார் குருபரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் 9 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பூப்பந்தாட்ட உள்ளக அரங்கு அமைக்கப்பட்டது. கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைந்ததை அடுத்து வீரர் வீராங்கனைகளின் பயிற்சிக்காக தற்போது அது திறந்து விடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-23)


## வடக்கு– கிழக்கு ரீதியிலான பூப்பந்தாட்டம் 40 வயதுப்பிரிவில் யாழ் இணை சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 11

மன்னார் பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடத்தப்பட்ட தொடரில் 40 வயதுப் பிரிவு ஆண்கள் இரட்டையர் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காண்டீபன், அறிவுச்செல்வன் இணை கிண்ணம் வென்றது.

மன்னார் பூப்பந்தாட்ட உள்ளக அரங்கில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த காண்டீபன், அறிவுச் செல்வன் இணையை எதிர்த்து மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த லலி, ஜெகன் இணை மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 21:15, 21:14 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது யாழ்ப்பாணம் மாவட்ட இணை. (ம-23)



## பூப்பந்தாட்டத் தொடரில் யாழ். இணை சம்பியன்

யாழ்ப்பாணம், டிசெ. 11

மன்னார் பூப்பந்தாட்டச் சங்கத்தால் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ரீதியாக நடத்தப்பட்ட தொடரில் திறந்த வயதுப் பிரிவு இரட்டையர் பிரிவில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த றெமில்சன், துசாந்தன் இணை கிண்ணம் வென்றது.

மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திறந்த பிரிவு ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நிசாந்தபாலன் திலக்சன் இணையை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த றெமில்சன், துசாந்தன் இணை மோதியது.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 21:15, 21:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது றெமில்சன், துசாந்தன் இணை. (ம-23)

# வடக்கு வர்ண இரவுகள் நிகழ்வு சாவகச்சேரியில் வியாழனன்று!

யாழ்ப்பாணம், டிசெ. 11

வடமாகாண வர்ண இரவுகள் நிகழ்வு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி, கலாசார, பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் வருடாவருடம் இந்த விழா நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த வருடத்துக்கான விழா நாளைமறுதினம் வியா ழக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கின் தாரகை விருது, 10 வீரர்கள், வீராங்கனைகளுக்கு வடக்கின் வர்ண விருது என்பன வழங்கப்படவுள்ளன.

பன்னாட்டுப் போட்டிகள், ஆசியமட்டப் போட்டிகள், தேசிய ரீதியிலான போட்டிகள், மாகாணநிலைப் போட்டிகள், மாவட்ட நிலைப் போட்டிகள் என்பவற்றில் சிறந்து செயற்பட்ட சுமார் 550 வீரர்கள் மற்றும் வீராங்கனைகளும் அவர்களின் பயிற்சிளார்கள் 150 பேரும் வடமாகாண விளையாட்டுத் துறைக்குச் சேவையாற்றிய 10 மூத்த வீரர்களும் நிகழ்வில் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே கலந்து கொள்ளவுள்ளார். (ம-23,422,23)

## ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றதைப் பார்க்கையில் எனக்கு 2003ஆம் ஆண்டில் நடந்தவைகள் நினைவுக்கு வந்துள்ளன என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின். "இந்திய அணி மிகச் சிறந்த ஆரம்பம். இந்திய அணிக்கு எனது பாராட்டுக்கள். இந்திய அணி இந்த உற்சாகத்தை. அழுத்தத்தை ஒரு போதும் விட்டுவிடக்கூடாது. இரு இன்னிங்ஸிலும் முக்கியமான கட்டத்தில் புஜாராவின் ஆட்டம் அருமையாக இருந்தது. பந்துவீச்சாளர்களும் தங்களின் பணியை அர்ப்பணிப்புடன் செய்துள்ளார்கள். எனக்கு 2003ஆம் ஆண்டு பெர்த் டெஸ்டில் வெற்றபெற்ற நினைவுகளை ஏற்படுத்திவிட்டது இந்த வெற்றி" என சச்சின் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)

## டெஸ்ட் கிரிக்கெட் 'பெஸ்ட்' கிரிக்கெட்

### இரு அணிகளையும் புகழ்கிறார் சேவாக்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு அணி களும் மிகச் சிறந்த ஆட் டத்தை வெளிப்படுத்திய நிலையில் இரண்டு அணிகளுக்கும் தனது பாராட்டைத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக்.

"டெஸ்ட் கிரிக்கெட்தான் சிறந்த கிரிக்கெட் என்பதற்கு எடுத்துக்காட்டான ஆட்டம் இது. இறுதிவரை ஆஸ்திரேலிய அணி வீரர்கள் மிகச்சிறப்பாகப் போராடினார்கள். ஆனால், இந்திய அணியினர் அவர்களைக்காட்டிலும் சிறந்தவர்கள். முதல் இன்னிங்ஸில் 4 இலக்குகள் இழப்புக்கு 41 ஓட்டங்கள் என்ற நிலையில் இந்திய அணி இருந்தது. இவ்வாறு பின்னடைவு நிலையில் இருந்து மீண்டு இந்தியா வென்றிருப்பது சிறப்பாகும். புஜாராவின் ஆட்டம் மிக அற்புதமாக இருந்தது. இந்திய அணியின் பந்துவீச்சும் சிறப்பாக இருந்தது. இந்த டெஸ்ட் தொடர் சுவாரஸ்யமாக, மிகப்பெரியதாகப் பேசப்படும் என்று உறுதியளிக்கிறேன்" என சேவாக் தனது கீச்சகத்தில் குறிப்பிட்டார். (ம)

# கரவெட்டி ஞானம்ஸ் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 11

அறிஞர் ஐயன்னா விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணம் வென்றது.

இணுவில் கலையொளி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து கிளிநொச்சி உதய சூரியன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக குமார் 26, தீசன் 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 5.1 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்று கிண்ணம் வென்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரனாக களமிறங்கிய ரஜீவன் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களைப் பெற்றார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். தொடராட்ட நாயகனாக உதய சூரியன் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த குமார், சிறந்த பந்து வீச்சாளராக கரவெட்டி ஞானம்ஸ் அணியைப் பிரதிநிதித்துவம் செய்த சேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-422,23)




## பன்ட் உலக சாதனை

ஓர் ஆட்டத்தில் அதிக பிடியெடுப்புக்களை மேற்கொண்ட இலக்குக் காப்பாளர் என்ற அடைவை நிலைநாட்டினார் இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் பன்ட்.
இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் அடிலெட்டியில் கடந்த ஆறாம் திகதி முதல் நேற்று வரை நடைபெற்ற ஆட்டத்தில் பன்ட் மொத்தம் 11 பிடியெடுப்புக்களை மேற்கொண்டார்.
இதன்மூலம் ஓர் ஆட்டத்தில் அதிக பிடியெடுப்புக்களை மேற்கொண்ட இலக்குக்காப்பாளர்களின் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் ஜேக் ரசல், தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் டி வில்லியர்ஸ் ஆகியோர் ஏற்கனவே 11 பிடியெடுப்புக்களுடன் முதலிடத்தில் இருந்த நிலையில் அவர்களின் அடைவை பன்ட் சமன் செய்தார். (ம)



## விராட் கோக்லி புதிய அடைவு!



இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி தலைமைத்துவத்தில் புதிய அடைவொன்றை நிலைநாட்டினார்.
அடிலெய்டில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்றதை அடுத்து, இந்தியா, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா ஆடுகளங்களில் வெற்றிபெற்ற ஒரே இந்திய அணித் தலைவர் என்ற அடைவு கோக்லிக்குக் கிடைத்தது. (ம)

## லயன் என்றும் ‘லயன்’

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்த போதிலும் அந்த அணியின் வீரர் லயனுக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.
இந்த ஆட்டத்தின் நான்காம் நாளின் நிறைவில் இந்தியாவின் கை ஓங்கியிருந்தது. இதனால் இந்திய அணி வெற்றிபெறும் என்று பலரும் கருதினார்கள். ஆனால் இந்தியாவிடம் இருந்து ஆட்டத்தைப் பறிப்போம் என்று தெரிவித்திருந்தார் லயன். இதன்படி ஆட்டத்தின் இறுதிநாளான நேற்று அவர் மிகச் சிறந்த முறையில் போராடினார். ஆட்டமிழக்காமல் அவர் பெற்ற 38 ஓட்டங்களாலேயே ஆஸ்திரேலிய அணி படுதோல்வியைத் தவிர்த்தது. இதனால் லயனுக்குப் பலரிடம் இருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. (ம)





# அடிலெய்டில் வீழ்ந்த ஆஸி இந்தியா எழுச்சி ஆரம்பம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 31 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இந்திய அணி. இந்த வெற்றியை அடுத்து நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது இந்திய அணி.
அடிலெய்ட் மைதானத்தில் கடந்த ஆறாம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. புஜாரா அதிகபட்சமாக 123 ஓட்டங்களைக் குவித்தார். ரோகித் 37 ஓட்டங்களையும், பன்ட் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹசில்வூட் 3 இலக்குகளையும், ஸ்ராக், கம்மின்ஸ், லயன் மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 235 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹெட் 72 ஓட்டங்களையும், ஹான்ஸ்கொம் 34 ஓட்டங்களையும், கவாயா 28 ஓட்டங்களையும் பெற்றனர். லயன் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் பும்ரா, அஸ்வின் இருவரும் தலா 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
15 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 307 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக புஜாரா 71 ஓட்டங்களையும், ரகானே 70 ஓட்டங்களையும், ராகுல் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லயன் 6 இலக்குகளையும், ஸ்ராக் 3 இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
ஆஸ்திரேலிய அணிக்கு இலக்காக 323 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. அந்த அணி நான்காம் நாள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு இன்னும் 219 ஓட்டங்களும், இந்தியாவின் வெற்றிக்கு இன்னும் 6 இலக்குகளும் தேவை என்ற நிலையில் ஆட்டத்தின் இறுதி நாள் நேற்று ஆரம்பமானது.
மார்ஷ் 31 ஓட்டங்களுடனும், ஹெட் 11 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹெட். மார்ஷுடன் இணைந்து வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் பெய்ன். அரைச்சதம் கடந்தார் மார்ஷ். அணித் தலைவர் பெய்னின் ஆட்டத்திலும் நிதானம் நீடித்தது. மார்ஷை 60 ஓட்டங்களுடனும், பெய்னை 41 ஓட்டங்களுடனும் வீழ்த்தினார் பும்ரா.
ஸ்ராக், லயன் இணைந்து இந்திய அணியின் வெற்றியை கேள்விக்கு உட்படுத்தினார்கள். இறுதிக்கட்டத்தில் வியந்து பாராட்டும் அளவுக்கு அவர்களின் ஆட்டம் அமைந்தது. குறிப்பாக அஸ்வினின் சுழல்பந்துவீச்சை அற்புதமாக எதிர்கொண்டார் லயன். ஸ்லிப் திசையில் இருந்த இடைவெளிகளைக் கூட அற்புதமாகப் பயன்படுத்தினார் லயன்.
28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஸ்ராக். எனினும் ஹசில்வூட்டும் விடுவதாக இல்லை. இறுதி இலக்குக்காக மட்டும் 32 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 13 ஓட்டங்களுடன் ஹசில்வூட்டை வீழ்த்தினார் அஸ்வின். முடிவில் 31 ஓட்டங்களால் தோற்றது ஆஸ்திரேலியா. இரண்டு இன்னிங்ஸிலும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தின புஜாரா ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)





**“ ஸ்ராக், லயன் இணைந்து இந்திய அணியின் வெற்றியை கேள்விக்கு உட்படுத்தினார்கள். இறுதிக் கட்டத்தில் வியந்து பாராட்டும் அளவுக்கு அவர்களின் ஆட்டம் அமைந்தது. குறிப்பாக அஸ்வினின் சுழல்பந்து வீச்சை அற்புதமாக எதிர்கொண்டார் லயன். ஸ்லிப் திசையில் இருந்த இடைவெளிகளைக் கூட அற்புதமாகப் பயன்படுத்தினார் லயன்.**

# தீவுகளைத் தோற்கடித்தது பங்களாதேஷ்




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது பங்களாதேஷ் அணி. பங்களாதேஷின் டாக்காவில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹோப் 43 ஓட்டங்களையும், பவுல் 36 ஓட்டங்களையும், சேஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரகுமான், மோர்ரசா இருவரும் தலா 3 இலக்குகளையும், மிராஸ், சகிப் அல் ஹசன், ஹொசைன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 35.1 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. ரகிம் 55 ஓட்டங்களையும், டாஸ் 41 ஓட்டங்களையும், சகிப் அல் ஹசன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சேஸ் 2 இலக்குகளையும், தோமஸ், பவல், பவுல் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

10 பந்துப்பரிமாற்றங்களை வீசி 30 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுக்கு 3 இலக்குகளை வீழ்த்திய மோர்ரசா ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)



## ஆஸ்திரேலிய ரென்னிஸ் ஜனவரி 14இல் ஆரம்பம்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர் ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடர்களாக நான்கு தொடர்கள் உள்ளன. ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர், அமெரிக்கப் பகிரங்கத் தொடர், விம்பிள்டன் தொடர், பிரென்ஞ் தொடர் என்பனவே அந்தப் பகிரங்கத் தொடர்களாகும். ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர்தான் ஒரு வருடத்தில் நடைபெறும் முதலாவது பகிரங்கத் தொடராக அமைந்துள்ளது. அ[illegible] வகையில் அடுத்த வருடத்துக்கான ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர் ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஜனவரி மாதம் 27ஆம் திகதி வரையில் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது.

கடந்த சில தினங்களாக காயத்தால் அவதிப்பட்டுவந்த நடால் காயத்தில் இருந்து மீண்டுள்ளார். அவர் ஆஸ்திரேலியத் தொடரில் பங்குபற்றும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார். (ம)

**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**
**புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்**
கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த. புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி,மாவட்டம் என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில்.

இலக்கை விரட்டுவதில்

# சச்சினை விடவும் கோக்லி சிறந்தவர்

வோர்ண் புகழாரம்




இலக்குகளை விரட்டி வெற்றிபெறுவதில் இந்திய அணியின் தலைவர் கோக்லி தனித்துவம் வாய்ந்தவராக நிற்கிறார். இன்னும் சொல்லப்போனால், இந்த விடயத்தில் கோக்லி சாதித்ததை சச்சின்கூட சாதிக்கவில்லை என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் வோர்ண்.

ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய செவ்வியிலேயே வோர்ண் இவ்வாறு தெரிவித்தார்.

ஒருநாள், டெஸ்ட், ரி20 என்று மூன்றுவகை ஆட்டங்களிலும் கோக்லியின் விளையாட்டு அற்புதமாக அமைகிறது. அந்தந்த ஆட்டங்களுக்கு ஏற்றவாறு அவர் தன்னை மாற்றி அபாராமாகத் துடுப்பெடுத்தாடி வருகிறார். இலக்கை விரட்டிச் சென்று அணியை வெற்றிபெற வைப்பதில் கோக்லி தனித்துவமானவர். இந்த விடயத்தில் சச்சினால்கூட இதுவரை சாதிக்க இயலாத விடங்களைக் கோக்லி சாதித்துள்ளார். வில்லியர்ஸூம் இலக்கை விரட்டுவதில் வல்லவர்தான். என்றபோதிலும் அவரை கோக்லியுடன் ஒரே தட்டில் வைத்துப் பார்க்க மனம் இடம்கொடுக்க மறுக்கிறது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு விராட் கோக்லி கிரிக்கெட்டை தொடர்ந்து விளையாடி வந்தால் சச்சின் ரெண்டுல்கரை எந்த அளவுக்கு இன்று புகழ்ந்து பேசுகிறோமோ அதே அளவுக்கு கோக்லி பேசப்படுவார். இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் அனைத்தும் மிகவும் விறுவிறுப்பாக அமையும் என நம்புகிறேன். என்று வோர்ண் மேலும் தெரிவித்தார். (ம)

# பெல்ஜியம் முதலிடம்!



பன்னாட்டு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் (பிபா) தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடர்கிறது பெல்ஜியம்.

பன்னாட்டுக் கால்பந்தாட்டச் சம்மேளனம் தனது தரவரிசைப் பட்டியலை நேற்றுப் புதுப்பித்தது. பெல்ஜியம் ஆயிரத்து 733 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. பிரான்ஸ் ஆயிரத்து 732 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், பிரேசில் ஆயிரத்து 669 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும், குரோசியா ஆயிரத்து 635 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தையும், இங்கிலாந்து ஆயிரத்து 619 புள்ளிகளைப் பெற்று ஐந்தாவது இடத்தையும் கைப்பற்றின.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே உருகுவே, போர்த்துக்கல், சுவிற்சர்லாந்து, ஸ்பெய்ன், டென்மார்க் ஆகிய அணிகள் உள்ளன. இறுதியாக வெளியான தரப்படுத்தலுக்கும் நேற்றைய தரப்படுத்தலுக்கும் இடையில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.